# ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு

கவிஞர் த. துரைசிங்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உமா பதிப்பகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

LIBRARY
Carmel Fatima College
National School
Kalmunai

REFERENCE
C.F.C. LIBRARY

| ACC NO. | 4721 |
|---|---|
| CLASS NO. | 894.81 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துத்
# தமிழ் இலக்கிய வரலாறு

**(சங்ககாலம் முதல் 19ஆம் நூற்றாண்டு வரை)**

**பாகம்-1**

இலக்கிய வித்தகர்
**கவிஞர் த.துரைசிங்கம்**
கல்விப்பணிப்பாளர் (ஓய்வு)

| | |
|---|---|
| ACC NO. | |
| CLASS NO. | |

வெளியீடு:
**உமா பதிப்பகம்**
521/1B, காலி வீதி,
கொழும்பு -06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

நூல் : ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு (பாகம்-1)
நூலாசிரியர் : கவிஞர் த.துரைசிங்கம்
பதிப்புரிமை : நூலாசிரியருக்கு
பதிப்பு : ஏப்பிரல், 2004
வெளியீடு : **உமா பதிப்பகம்,**
521/1B, காலி வீதி
கொழும்பு -06.
கணணி வடிவமைப்பு : குளோறி - ஜோசெப்
**ITI கணணிக் கல்லூரி,**
379,1/2 காலி வீதி,
கொழும்பு-06
தொலைபேசி -2361856

அச்சுப்பதிப்பு : **பேபெக்ற் பிறின்ரேஸ்**
130, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர,
கொழும்பு -12.

விற்பனையாளர் : **லங்கா புத்தகசாலை,**
F.L.1-14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர,
கொழும்பு -12.
T.Phone-2341942.
விலை : 100/=

TITLE : EELATHTHU THAMIL ILAKKIYA VARALARU (Part. I)
AUTHOR : T.THURAISINGHAM B.A.(HON'S), DIP.in.Ed,S.L.E.A.S (Rtd. Director of Education)
EDITION : First Edition April, 2004.
PUBLISHED BY : UMA PATHIPPAGAM,
521/1B, Galle Road,
Colombo -06.

TYPE SETTING : Glory-Joseph,
**ITI Computer College,**
379,1/2 Galle Road,
Colombo-06
T.Phone-2361856

PRINTED BY : **PERFECT PRINTERS (Pvt) LTD,**
130, Dias Place,
Colombo - 12
PRICE : 100/=
ISBN : 955 - 98551 - 4 - X



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்றமிழ் வளர்த்த
நாவேந்தன் அவர்களுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சிறுவர் இலக்கியகர்த்தாவும் ஈழத்துத் தமிழ் இலக்கிய ஆக்கங்கள் பற்றிய நிறைவான அறிவும் ஆர்வமும் மிக்க கவிஞர் த. துரைசிங்கம் அவர்களின் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு என்னும் இந்நூலுக்கு அணிந்துரையொன்றை வரைவதில் பெருமகிழ்வடைகிறேன். சிறுவர் இலக்கியத்துறையில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு நூல்கள் பல படைத்து இலங்கை அரசின் சாகித்திய மண்டல விருதுகளை நான்கு முறை பெற்ற பெருமைக்குரியவர் கவிஞர் துரைசிங்கம். இன்று பொதுவாசகர்களுக்கான படைப்பிலக்கியங்கள் ஏராளம் என்றால் குழந்தை இலக்கியத்தில் இருக்கக்கூடிய பற்றாக்குறையை அண்மைக்காலங்களில் நிவர்த்தி செய்வதில் பெரும்பங்கு கவிஞர் துரைசிங்கத்துக்கு உரியது என்பதில் ஐயமில்லை.

தற்போது கவிஞர் துரைசிங்கத்தின் இலக்கிய பாண்டித்தியம், ஈழத்துத் தமிழ் இலக்கிய அறிவு, ஆய்வு நோக்கு என்பவற்றின் முக்கிய ஒரு விளைவாகவும் படைப்பாகவும் வெளிவரும் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு என்னும் இந்நூல் குறித்துத் தமிழ் கூறும் நல்லுலகம் மகிழ்வடையவும் பெருமையுறவும் பல காரணங்கள் உண்டு.

ஈழத்தில் வாழும் தமிழினத்து இளஞ்சந்ததியினர் அறிவியல், தகவல், தொழில் நுட்பம் முதலாம் நவீன துறைகளில் ஈடுபாடு காட்டி அவற்றில் தேர்ச்சி பெற வேண்டிய யதார்த்த நிலையொன்று இருக்கும் அதே வேளையில் தமது பண்பாடு, அதன் தனித்துவம், வரலாறு முதலாம் துறைகளிலும் ஈடுபாடு காட்ட வேண்டிய அவசியம் ஒன்றுள்ளது. நம் முன்னோரளித்த அருஞ் செல்வம் நமது மரபுரிமை பற்றிய அறிவானது. அவர் தம் பண்பாட்டுத் தனித்துவம் பற்றி உணரவும் அதனைப் பேணவும் மிகுந்த அக்கறையுடன் அதனைக் காலத்துக்கேற்றவாறு செம்மைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லவும் வேண்டிய தேவையொன்றுண்டு.

இத்தகைய பணிக்குப் பண்டுதொட்டு எழுந்த இலக்கியங்கள் பற்றிய அறிவு முக்கியமானது என்ற உணர்வின் காரணமாகவே கவிஞர் துரைசிங்கம் இத்தகைய ஒரு இலக்கிய வரலாற்று நூலை எழுத முற்பட்டார் என்பது எமது துணிவு.

பண்டுதொட்டு 19ஆம் நூற்றாண்டு வரை ஈழத்தில் எழுந்த இலக்கியங்களை வரலாற்று ரீதியாக ஆராய்ந்துள்ள துரைசிங்கம் அவர்கள் கல்விசார்ந்த, பண்பாடு சார்ந்த இரு முக்கிய கடமைகளைச் செய்துள்ளார். பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இன்று தமிழ்மொழி இலக்கியம் பயிலும் மாணவர்கள், முன்பு போலன்றி ஈழத்து இலக்கிய வளர்ச்சி பற்றியும் கற்க வேண்டியுள்ளது. பரந்த தமிழிலக்கியப் பரப்பில் ஈழத்தின் வரலாற்று ரீதியான பங்களிப்பு நுணித்து நோக்கத்தக்கது.

ஏற்கனவே சைமன்காசிச்செட்டி, கலாநிதி. ஆ. சதாசிவம், சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், வித்துவசிரோன்மணி சி. கணேசையர், ஆணர்ல்ட் சதாசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை, மு. கணபதிப்பிள் ளை, கலாநிதி பொ. பூலோகசிங்கம் ஆகியோர் ஈழத்துத் தமிழிலக்கிய முயற்சிகளைப் பற்றியும் ஈழத்துத் தமிழ்ப் புலவர் பற்றியும் பல நூல்களை வெளியிட்டுள்ளனர்.

1859 முதல் 1967 வரை எழுந்த நூல்களின் ஆழ, அகலங்களும் புலமைச் சிறப்பும் இவ்விடத்து ஆராயப்பட இயலாத முக்கிய முயற்சிகள் என்றாலும் அவை பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கு மூலநூல்களாகப் பயன்படக் கூடியவையன்றி ஒரு பாடநூல் பாணியில் அமையவில்லை. இவ்வகையில் துரைசிங்கத்தின் இந்நூல் ஐந்து முறையான வரலாற்றுக் காலத்தோடு இணைந்த அத்தியாய அமைப்பினையும் பயனுள்ள முறையிலான துணைத்தலைப்புக்களையும் கொண்டு விளங்குகின்றது. வரலாற்று நூல்கள், மதவழிநூல்கள், அறிவியல் நூல்கள், நாடகங்கள், அகராதிகள், மொழிபெயர்ப்பு நூல்கள், பத்திரிகைகள், கண்டனப் பிரசுரங்கள் எனப் பல தரப்பட்ட வரலாற்று ரீதியான ஆக்கங்கள் பற்றிய விளக்கம் நூலில் சிறப்பாகத் தரப்பட்டுள்ளது. தாம் வகுத்துக் கொண்ட காலப்பகுதியில் எழுந்த இலக்கியங்களின் பொதுப்பண்புகளையும் நூலாசிரியர் தக்கவாறு எடுத்துக் காட்டியுள்ளார்.

வரலாற்று ரீதியாக இலக்கியங்களின் எழுச்சியை ஆராயும் போது வரலாற்று ரீதியாகத் தமிழ்ப்புலமை (Tamil Scholarship)யின் வளர்ச்சி, அவ்விலக்கியங்கள் எடுத்துக் காட்டும் தமிழரின் வாழ்க்கை முறைமை, பண்பாட்டு, தத்துவச் சிந்தனைகள் என்பன அவ்வாய்வின் உள்ளடக்கமாகிவிடும். இலக்கிய வரலாறு என்பது பண்பாட்டு வரலாற்றின் ஒரு அங்கமாகவும் அமைவதுண்டு.

சுருங்கக்கூறின், கவிஞர் துரைசிங்கம் அவர்களின் இந்நூல், மேற்கண்ட பன்முகப்பட்ட புலமை வரலாறு, பண்பாட்டு வரலாறு, சிந்தனை வரலாறு என்பவற்றுக்கு ஒரு மூல நூலாகவும் விளங்கக்கூடியது என்பதை மனங்கொளல் வேண்டும். ஈழநாட்டு வரலாற்றில் புலமைசான்ற பல பெரியார்களும் இலக்கிய வித்தகர்களும் தமிழகத்துப் பெரியோர்களால் பெரிதும் பாராட்டப்பட்டமைக்குச் சான்றுகளும் உள்ளன. சிங்கப்பூர் உள்ளடங்கிய மலேசியாவில் பல தசாப்தங்களுக்கு முன்னரே தமிழ் இலக்கியம் தோற்றம் பெற, அங்கு சென்ற ஈழவளநாட்டு எழுத்தாளர்களே காரணமாகவிருந்தனர் என்பது அந்நாட்டுத் தமிழியல் ஆய்வாளர் முடிவு.

இத்தகைய பெருமைமிகு ஈழத்து இலக்கிய வரலாற்றை எழுதும் பணியைச் சிரமேற்கொண்டு செயற்பட்ட கவிஞர் துரைசிங்கம் அவர்கள் தமிழ் கூறும் நல்லுலகின் மனமுவந்த பாராட்டை நிச்சயம் பெறுவார் என நம்புகின்றேன். ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றை அறிந்திட ஆவல் கொண்டோரனைவருக்கும் இந்நூல் பெரிதும் உதவும்.

**பேராசிரியர். சோ. சந்திரசேகரன்.**

**கல்விப்பீடம்**
**கொழும்பு பல்கலைக்கழகம்.**
**14.04.2004**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்று பொருள். 'இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்.' என்று பிங்கல நிகண்டு பேசுகிறது. 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்றார் பாவேந்தர். அத்தகு இனிமையும் சிறப்பும் மிக்க தமிழைத் தமது உயிர்போல் நேசித்து வளர்த்தவர்கள் ஈழத்தமிழர்கள். அவர்கள் தம் மத்தியில் தோன்றிய புலவர்களும் அறிஞர்களும் படைத்திட்ட இலக்கியங்கள் பல தரத்தவை. அவற்றின் வரலாறு மிக நீண்டது; பரந்தது. அவ்வரலாற்றை இன்றைய சந்ததியினரும் எதிர்வரும் சந்ததியினரும் அறிந்திட வேண்டும்; புதிய இலக்கியங்கள் பல படைத்திட முன்வரவேண்டும் என்னும் உந்துதலால் எழுந்ததே இந்நூலாகும்.

காலத்து நகர்வினடிப்படையில் நோக்குமிடத்து ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு மிகப் பரந்தது; விரிந்தது. அதனைச் சிறு நூலில் அடக்கிவிட முடியாது. அதன் வளர்ச்சிப்பாங்கை, இலக்கியப் பண்புகளை விரிவாக ஆராய்வோருக்கு உதவும் வகையில் வரலாற்றடிப்படையில் இந்நூலை இரு பாகங்களாக எழுதியுள்ளேன். முதலாம் பாகம் ஈழத்துப் பூதன்றேவனார் காலம் முதல் 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரையான காலப்பகுதியைக் கொண்டதாக அமைந்துள்ளது. இதில் வரும் ஐந்து இயல்களிலும் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றை என் அறிவுக்கெட்டியவரை தொகுத்துத் தந்துள்ளேன்.

இரண்டாம் பாகம் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் இற்றைவரையான காலப்பகுதியைக் கொண்டதாக அமைகிறது. இதில் நவீன இலக்கிய வடிவங்கள் ஈழத்தில் தோற்றம் பெற்ற முறையினையும் அவற்றின் வளர்ச்சிப் பாங்கினையும் விரிவாக விளக்கியுள்ளேன். நவீன இலக்கிய வடிவங்களான சிறுகதை, நாவல், புதுக்கவிதை, நாடகம், திறனாய்வு ஆதியாம் துறைகள் ஈழத்தில் பெற்றுள்ள வளர்ச்சியினைக் காய்தல், உவத்தலின்றிக் குறிப்பிட்டுள்ளேன்.

ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றை அறிந்து கொள்ள விரும்பும் ஆர்வலர்களுக்கும் க.பொ.த. உயர்தரவகுப்பில் கற்போருக்கும் இளமாணி(G.A.Q) கலைமாணி(B.A.)ப் பட்டப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கும் பயன் தரும் வகையில் இந்நூல்கள் அமைந்துள்ளன.

இத்தகு நூல்களை எழுதுமாறு பல்காலும் தூண்டுதலளித்த கொழும்பு லங்கா புத்தகசாலை மேலாளர் திரு.க.சதீஸ் அவர்களுக்கும் அணிந்துரை நல்கிய பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்களுக்கும் இந்நூல்களை நன்முறையில் வெளியிடும் உமாபதிப்பகத்தாருக்கும் என்னிதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது நூல்களை விருப்புடன் ஏற்றுப் பயன்கொள்ளும் மாணவர்களுக்கும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் என் நன்றி என்றுமுரியது. நன்றி.

த.துரைசிங்கம்
70/1 வைமன் வீதி,
யாழ்ப்பாணம்
14-04-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

'என்றுமுள தென்றமிழ்' என்றேற்றிப் போற்றிடும் நம் அன்னைத் தமிழ் இன்று உலகில் உள்ள உயர் தனிச் செம்மொழிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. உலகில் 70 நாடுகளுக்கு மேல் தமிழர்கள் குடியேறி வாழ்கின்றனர். அவர்கள் தம் இனவரலாறு, மொழி வரலாறு போலவே இலக்கிய வரலாறும் இன்று முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கிறது.

பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் தமிழிலக்கிய வரலாறு ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. தமிழிலக்கிய வரலாறு தொடர்பான ஆய்வுகள் பல மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிலையில் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றினை அறிந்திடும் ஆர்வம் அதிகரித்து வருகிறது. புலம் பெயர்ந்த நாடுகளில் வதியும் ஈழத்து தமிழர்கள் தம் சொந்த மண்ணின் மைந்தர்கள் படைத்திட்ட இலக்கியங்கள் குறித்து அறிந்திட ஆவல் கொண்டுள்ளனர்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு என்னும் இந்நூல் இன்றைய காலத்தின் தேவையாகும். சங்ககாலம் முதல் இன்றைய புத்தெழுச்சிக் காலம்வரை ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றை இரு பாகங்களாகச் சுவைபட நூல் வடிவாக்கியுள்ளார் இலக்கிய வித்தகர் கவிஞர் த.துரைசிங்கம். கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக ஈழத்து இலக்கியப் படைப்புக்களுடனும் படைப்பாளர்களுடனும் தொடர்பு கொண்டவர் கவிஞர் த.துரைசிங்கம். நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை ஆக்கியவர். சிறுவர் இலக்கியத் துறைக்கான இலங்கை அரசின் தேசிய இலக்கிய (சாகித்திய) விருதினை நான்குமுறை பெற்ற பெருமைக்குரியவர். பல்வேறு நூல்களுக்கு உரை கண்டவர். அன்னார் இந்நூலைப் படைத்துள்ளமை பெருஞ்சிறப்பாகும். இதனை எமது பதிப்பகத்தின் சார்பில் வெளியிட ஒப்புதல் அளித்த கவிஞர் த.துரைசிங்கம் அவர்களுக்கு எம் நன்றி உரித்தாகுக.

தமிழ் இலக்கிய ஆர்வலர்களும் மாணவர்களும் ஆய்வாளர்களும் இந்நூலைப் படித்துப் பயன்பெற வேண்டுகின்றேன்.

நன்றி.

**- பதிப்பாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


பொருள் | பக்கம்

**1. இயல் I.**

**ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு** 01-06

(அ) அறிமுகம்.
(ஆ) காலத்து நகர்வினடிப்படையில்
(இ) மகாவம்ச மன்னர்காலம்
(ஈ) சங்ககாலம் - ஈழத்துப் பூதன் தேவனார் பாடல்கள்

**2. இயல் II.**

**யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் காலம்** 07-10

(ஆரியச் சக்கரவர்த்திகள் காலம்)
(அ) அரசியல் நிலை
(ஆ) ஈழத்தில் எழுந்த முதல் தமிழ்நூல்
(இ) யாழ்ப்பாண வேந்தர் காலத்தெழுந்த நூல்கள்

(i) **வரலாறு சார்ந்த நூல்கள்** 11-14

1. வையாபாடல்
2. கைலாயமாலை
3. கோணேசர் கல்வெட்டு

(ii) **பாரம்பரிய அறிவியல் நூல்கள்** 15-17

1. சரசோதிமாலை
2. செகராச சேகரமாலை
3. பரராச சேகரம்

(iii) **மதவழித் தொன்மை நூல்கள்** 18-30

1. தட்சிண கைலாச புராணம்
2. திருக்கரைசைப் புராணம்
3. வியாக்கிரபாத புராணம்
4. கதிரை மலைப்பள்ளு
5. கண்ணகி வழக்குரை
6. இரகு வம்சம்

(ஈ) ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியப் பண்புகள்.

**3. இயல் III.**

**போர்த்துக்கேயர் ஆட்சிக்காலம்** 31-38

(அ) அரசியல் நிலை
(ஆ) போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தெழுந்த நூல்கள்.
1. ஞானப்பள்ளு
2. அர்ச். யாகப்பர் அம்மானை
3. ஞானானந்த புராணம்
(இ) போர்த்துக் கேயர் ஆட்சிக்கால இலக்கியப் பண்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. இயல் IV.**

**ஒல்லாந்தர் காலம்** 39-59

**(அ) அரசியல் நிலை**

**(ஆ) ஒல்லாந்தர் காலத்தெழுந்த தமிழ்நூல்கள்**

1. சமயம் சார்ந்த நூல்கள்
2. உள்ளூர்ப் பிரபுக்களைப் பெருமைப் படுத்தும் வகையில் அமைந்த நூல்கள்
3. வைத்தியம், சோதிடம் சார்ந்த நூல்கள்
4. வரலாற்றுத் தொடர்பானவை
5. நாடகங்கள்

**(இ) ஒல்லாந்தர் கால இலக்கியப் பண்புகள்.**

**5. இயல் V.**

**ஆங்கிலேயர் காலம்** 60-92

**(அ) அரசியல் நிலை**

**(ஆ) 19ஆம் நூ.ஆ.ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சி**

1. உரைநடை வளர்ச்சி
2. கவிதைத்துறை
3. புராணங்கள்
4. நாடகங்கள்
5. அகராதிகள்
6. மொழிபெயர்ப்பு நூல்கள்
7. பத்திரிகைகள்
8. நூற்பதிப்புத்துறை
9. நாவல்கள்
10. சிறுகதைகள்
11. வரலாற்றாய்வு தொடர்பானவை
12. கண்டனங்கள்
13. உரை நூல்கள்

**(இ) 19ஆம் நூ.ஆ. இலக்கியப் பண்புகள்.**

**(ஈ) முடிவுரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் : 1

## ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு

### (அ) அறிமுகம்:-

அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழி தொன்மைச் சிறப்பும் நெடிய மரபும் கொண்டது. இம் மொழி வழங்கும் நாடுகள் பலவுள. அவற்றுள் தமிழ் நாடும் ஈழமும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தமிழ் மொழியின் தாயகமாக, நிலைக்களமாகத் திகழும் பெருமைக்குரியன. என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொண்ட புலவர்களும் அறிஞர்களும் ஈழத்திருநாட்டில் வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டே வாழ்ந்துள்ளனர். மிகப்பழைய புராண இதிகாசங்கள் ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் இடையே உள்ள தொடர்புக்குச் சான்று பகருகின்றன. இலங்கை வேந்தனான இராவணன் குறித்து இராமாயணம் பேசுகிறது. பட்டினப் பாலை, அகநானூறு போன்ற சங்க இலக்கியங்களும் தமிழகத்திற்கும் - ஈழத்திற்குமுள்ள தொடர்பு பற்றிக் கூறுகின்றன.

சங்கநூலான பட்டினப்பாலை ''ஈழத்துணவும் காளகத் தாக்கமும்.....'' என்றும் ''நன்னகர் மாந்தை முற்றத்துண்ணா பணிதிறை தந்த பாடுசார் நன்கலம் பொன் செய் பாவை, வைரமோடாம்பல் ஒன்னுவாய் குவையியன்ற நிலத்தினைத் துறந்த நிதியத்தன.....'' எனவரும் அகநானூற்றுப் பாடல்வரிகளும் ஈழத்திற்கும் தமிழகத்திற்குமிருந்த வணிகத் தொடர்புகளை உறுதிப் படுத்துகின்றன.

தமிழகத்தில் முச்சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமைக் குரியது பாண்டிநாடு.

**'பாடுதமிழ் வளர்த்த கூடல்'**

- புறத்திரட்டு

**''உறைவான் உயர் மதிற் கூடலில் ஆய்ந்த ஒண் தீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையோ''**

- திருக்கோவையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**''தமிழ் நிலைபெற்ற தாங்கருமரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை''** - சிறு பாணாற்றுப்படை

என்னும் பாடல்களின் வரிகள் பாண்டி நாட்டில் தமிழ்ச்சங்கங்கள் இருந்தமையை உறுதிசெய்கின்றன. அத்தகு சங்கங்களின் தோற்றத்திற்கு நிலைக்களமாக அமையாத போதிலும் பூதன் தேவனார் போன்ற புலவர்களை மதுரையம்பதிக்கு அனுப்பிச் சங்கப் புலவர்களோடு ஒருங்கமர்ந்து தீஞ்சொற் கவிபல புனைந்திட வழி செய்த பெருமை நம் ஈழத்துக்குண்டெனக் கருதப்படுகிறது.

## (ஆ) காலத்து நகர்வினடிப்படையில்......!

''இலக்கிய காலப் பகுதிகள் வழி தமிழிலக்கிய வளர்ச்சிப் படிகளைக் கண்டறிவது சாலச்சிறந்த முறையாகும். இலக்கிய வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்கள், திருப்பங்களுக்கு அரசியல் வரலாற்றில் ஏற்பட்ட திருப்பங்களும் மக்கள் சமுதாய வாழ்விலேற்பட்ட மாற்றங்களுமே அடிப்படைகளாகும். இலக்கியம் மக்கள் வாழ்வினில் பயிராகி வளர்வது. அவ்வாழ்வில் ஏற்படும் மாற்றங்களால் இலக்கிய வளர்ச்சியில் பாதிப்புகள் தவிர்க்க வொண்ணாதது. எனவே அரசியல், சமுதாய, சமய மாற்றங்கள் பற்றிய வரலாற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, அவ்வக்காலப்பகுதியிலேற்பட்ட இலக்கிய வளர்ச்சியைக் கணித்தறிய வேண்டும்''[1] என்பார் முனைவர் தமிழண்ணல்.

இதனடிப்படையில் ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியைக் காலத்து நகர்வு நோக்கில் நோக்குவதே இந்நூலின் நோக்கமாகும். ஈழத்து வரலாற்றின் முக்கிய திருப்பங்களை அறிவது ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் ஏற்பட்ட மாறுதல்களை நன்குணரத் துணைசெய்யும். ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சிக்குச் சமுதாய, அரசியல் காரணிகளே அடிப்படையானவை, எனவே காலத்து நகர்வினடிப்படையில் ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியினைப் பின்வரும் தலைப்புக்களில் நோக்குவோம்.

1. மகாவம்ச அரசர்காலம் (கி.பி.300க்கு முன்)
2. யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் காலம் (கி.பி.1216 - கி.பி.1620 வரை)
3. போர்த்துக்கேயர் ஆட்சிக்காலம் (கி.பி.1621 - 1658 வரை)
4. ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் (கி.பி.1658-1796 வரை)
5. ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் (கி.பி.1796-1900 வரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (இ) மகாவம்ச மன்னர் காலம்

"ஈழ நாட்டுச் சிங்கள மன்னர் வரலாற்றினைக் கூறும் மகாவம்சமும் தீபவம்சமும் மகாசேனன் மன்னன் காலத்துடன் முடிவுறுகின்றன. எனவேதான் மகாசேனனுடன் முடிவுறும் காலப்பிரிவை மகாவம்சகாலம் எனக்கூறுவர். இக்காலப் பிரிவில் ஈழத்துத் தமிழ் மக்களின் வரலாறு தெளிவாகாமையாலும் மகாவம்ச அரசர்களிற் சிலர் தமிழருடைய பகுதிகளிலும் தமது ஆணையை நிலை நிறுத்த முற்பட்டமையாலும் இப்பிரிவு ஈழத்துத் தமிழிலக்கியப்பரப்பின் பிரிவாக அமைவதாலும் கி.பி. 300 இன் முற்பட்ட காலப்பிரிவை மகாவம்ச அரசர்காலம் என்று கூறுவது பொருத்தமாகும்."[2] என்கிறார் இலக்கிய கலாநிதி எப்.எக்ஸ்.ஸி. நடராசா.

## (ஈ) சங்ககாலம் - ஈழத்துப் பூதன் தேவனார் பாடல்கள்

ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றை எழுத முனைவோர், கடைச்சங்க காலத்தில் மதுரையம்பதியில் இருந்த தமிழ்ச் சங்கத்தமர்ந்து பாடல்கள் பல பாடியுள்ள ஈழத்துப் பூதன் தேவனாரை முதல்வராகக் கொள்வது மரபு. இவரால் பாடப்பெற்ற பாடல்களில் ஈழம் பற்றிய குறிப்பு எதுவும் காணப்படவில்லை. ஈழத்துப் பூதன் தேவனார்; மதுரை ஈழத்துப் பூதன் தேவனார் போன்ற பெயர்கள் இவர் ஈழத்தவரென உறுதிப்படுத்துவதற்கு உதவுகின்றன எனக் கூறப்பட்ட போதிலும், அதற்கான வேறு ஆதாரங்கள் எதுவும் கிடைப்பதாயில்லை.

அகநானூறு (88,231,307), குறுந்தொகை (189,343,360), நற்றிணை (366) ஆகிய தொகை நூல்களிலே ஏழுபாடல்கள் இவரது பெயரில் காணப்படுகின்றன. இப்பாடல்கள் ஈழத்துப் பூதன் தேவனார், மதுரை ஈழத்துப் பூதன் தேவனார் என்ற இரு பெயர்களையுடையவரின் பாடல்களாகவே காணப்படுகின்றன. ஈழத்திலிருந்து சென்று மதுரையம்பதியில் வாழ்ந்தமையால் மதுரை ஈழத்துப்பூதன் தேவனார் என இவர் அழைக்கப்பட்டிருக்கலாம் எனவும் கருதுவாருண்டு.

"சங்க இலக்கியங்களில் ஈழத்துப் பூதன்தேவனார் இயற்றிய செய்யுள்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தினின்று இவர் மதுரைக்குச் சென்றிருக்கக் கூடுமென்று ஊகிப்பதற்கு இடமிருக்கின்றது. பூதன் என்ற பெயர் யாழ்ப்பாணத்தில் இப்போதும் வழங்கி வருவதாகும்."[3] என்னும் இலக்கிய கலாநிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சு.நடேசபிள்ளை அவர்களின் கூற்றும் இதனை உறுதி செய்வதாயுள்ளது. மகாவித்துவான் சி.கணேசையர், பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, பேராசிரியர் ஆ.சதாசிவம் ஆகியோரும் பூதன் தேவனார் ஈழத்தைச் சேர்ந்தவரென்றே சான்றாதாரங்களுடன் நிறுவியுள்ளனர்.

கடைச்சங்கப் புலவர்களில் ஒருவராகக் கருதப்படும் பூதன் தேவனார் சங்கப் புலவர்களில் ஒருவரான பரணர் காலத்தவரெனக் கூறுப்படுகிறார்.

**'விசும்பிவர் வெண்குடைப் பசும்பூட் பாண்டியன்**
**பாடு பெறு சிறப்பிற் கூடலன்ன.....'** (அகநானூறு 231-12)

என இவர் புகழ்ந்து கூறும் பசும்பூட்பாண்டியனை 'வில்கெழுதானைப் பசும் பூட் பாண்டியன்'' (அகநானூறு 162-21) எனப் பரணரும் பாடியுள்ளார். எனவே ஈழத்துப் பூதன் தேவனார் பரணர் காலத்தவரெனத் துணியலாமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எனவே இவர் ஈழத்திலிருந்து மதுரை சென்று சங்கத்தமர்ந்து கவி செய்தாரெனத் துணியலாம்.

அகநானூறு நூலைப் பதிப்பித்த தமிழ் அறிஞர் ரா.ராகவையங்கார் ஈழத்துப் பூதன்தேவனார் என ஒருவர் நற்றிணை பாடிய ஒருவராகக் காணப்படுகிறார். இச்சான்றோரை வேறுபடுத்துதற்கு முன்னோர் இவரை ஈழத்துப் பூதன் தேவனார் எனச் சிறப்பித்துள்ளனர் எனவும் இந்நூற்பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார். குறுந்தொகை நூலைப் பதிப்பித்த டாக்டர் உ.வே. சாமிநாதையர் ''ஈழ நாட்டினின்று வந்து மதுரையில் தங்கியிருந்தார். பூதன் என்பது இவரது தந்தையார் பெயர்'' என எழுதியுள்ளார்.

ஈழத்துப் பூதன் தேவனாரின் பின் சரசோதி மாலை எழுந்த காலம் வரை ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியினை அறிய முடியாதிருக்கின்றது. தமிழகத்தில் பக்திவெள்ளம் பெருக்கெடுத்தோடிய பல்லவர் காலத்தில் (கி.பி.7,8,9,ஆம் நூற்றாண்டு) சைவசமய எழுச்சிக்குக் காரணமாயமைந்த நாயன்மார்களில் இருவர் (சம்பந்தர், சுந்தரர்) ஈழத்தில் உள்ள திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம் ஆகிய இரு சிவாலயங்கள் மீது பக்திச் சுவை சொட்டும் தேவாரப் பாடல்களைப் பாடியுள்ளனர். தேவாரப் பாடல்கள் பெறும் அளவுக்குச் சிறப்புப் பெற்றிருந்தன இத்தலங்கள் எனக் கருதும் போது இத்தலங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ள பகுதிகள் தமிழிலக்கிய வளமும் சமயப் பண்பாடும் மிக்கனவாக விளங்கியிருத்தல் வேண்டுமெனத் துணியலாம். எனினும் அவைபற்றிய விபரங்கள் எதுவும் இதுவரை கிட்டவில்லை.

ஈழத்திற் சோழமன்னர் ஆணை செலுத்திய காலப்பகுதியில் தமிழிலக்கியம் வளம் பெற்றிருக்கலாம். தமிழகத்தில் ஏற்பட்ட இலக்கிய முயற்சிகளின் தாக்கம் இங்கும் நிச்சயமாக இடம் பெற்றிருக்கலாம். அக்காலப் பகுதியில் எழுந்த நூல்கள் பல்வேறு காரணிகளால் அழிந்தொழிந்து போயிருக்கலாம். எவ்வாறாயினும் ஈழத்தில் சோழராட்சியின் போது தமிழிலக்கியம் வளர்ச்சியுற்றிருக்கலாம் என்பதற்குக் கல்வெட்டுச் செய்யுட்கள் சான்று பகருகின்றன.

அநுராத புரத்தின் வடபாகத்தே கண்டெடுக்கப்பட்ட நாலுநாட்டார் கல்வெட்டில் காணப்படும் வெண்பா ஒன்று அக்காலச் செய்யுள் மரபின் சிறப்பினை நன்குணர்த்துகிறது.

**"போதி நிழலமர்ந்த புண்ணியன்போ லெவ்வுயிர்க்குந்**
**தீதி லருள்சுரக்குஞ் சிந்தையா - னாதி**
**வருதன்மங் குன்றாத மாதவன்மாக் கோதை**
**யொரு தர்ம பாலனுளன்."**

எனும் இச்சாசனச் செய்யுள் மட்டுமன்றிக் கோட்டகம, பதவியா, பண்டுவஸ் நுவர முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் காணப்படும் செய்யுள்களும் கி.பி.9ஆம் நூற்றாண்டு முதல் 13ஆம் நூற்றாண்டுவரை நிலவிய ஈழத்துத் தமிழிலக்கிய மரபின் தொடர்ச்சியான வளர்ச்சியினை நிலை நாட்டுவனவாகும். இச்சாசனச் செய்யுள்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது இக்காலப் பகுதிகளில் ஈழத்தில் ஆங்காங்கே தமிழிலக்கிய முயற்சிகள் முகிழ்த்துள்ளன என்பதை உணரலாம்.

சிங்கள அரச சபைகளிலும் கூடத் தமிழில் நூல்கள் படைக்கும் மரபு பேணப்பட்டுள்ளமையை அறியலாம். எனினும் இவைபற்றிய விரிவான தகவல்கள் எதையும் தெளிவாகக் கூறமுடியாத நிலையில் உள்ளோம். இதற்குக் காரணம் யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் காலம் வரை ஈழத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் தம் இலக்கிய வரலாற்றுப் பேண் முறையைப் பின்பற்றாதிருந்தமையே யாகும். இக்காலப்பகுதிக்குரியதாகக் கருதப்படும் கல்வெட்டுக்களை நோக்குமிடத்துச் சிறந்த இலக்கியப் பாரம்பரிய மொன்றிருந்தமையை ஊகிக்கக் கூடியதாயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த கோட்டகம என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று ஈழம் முழுவதும் தமிழ் மக்கள் பரந்து வாழ்ந்துள்ளனர் என்பதையும் யாழ்ப்பாண அரசின் ஆதிக்கம் தெற்குவரை ஒரு காலத்தில் பரந்திருந்தது என்பதையும் உறுதிப்படுத்துவதாயுள்ளது. கோட்டகம கல்வெட்டுக் கூறுவது வருமாறு.

**"கங்கணம் வேற் கண்ணிணையாற் காட்டினர் காமர் வளைப்**
**பங்கையக்கை மேற்றிலதம் பாரித்தார் - பொங்கொலி நீர்ச்**
**சிங்கைநக ராரியனைச் சேரா வனுரேசர்**
**தங்கள் மடமாதர் தாம்"**

இக்கல்வெட்டில் காணப்படும் செய்யுளின் யாப்பமைதியும் கவிச்சிறப்பும் இக்காலகட்டத்தில் ஈழத்தில் சீரிய தமிழிலக்கிய மரபொன்று இருந்தமையினையையும், தமிழ்மொழி வளம் பெற்றிருந்த தென்பதையும் உணர்த்துவதாயுள்ளது. எனினும் இக்காலப்பகுதியின் இலக்கியப் பாரம்பரியம் குறித்தும் இலக்கிய முயற்சிகள் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ளமுடியாதுள்ளது. கி.பி 13ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட இலக்கியங்கள் இன்று கிடைக்காமலிருப்பதற்கு முக்கிய காரணம் அந்நியராட்சியும் படையெடுப்புக்களுமேயாகும்.

யாழ்ப்பாணத் தமிழரசு ஏற்பட்டபின்னரே ஈழத்துத் தமிழ் நூல்களைப் பேணிப்பாதுகாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**அடிக்குறிப்புக்கள்:**

1. **முனைவர் தமிழண்ணல்** - புதிய நோக்கில் தமிழிலக்கிய வரலாறு, மீனாட்சி புத்தகநிலையம், மதுரை,1996. பக்கம் 21-22
2. **நடராசா, எவ்.எக்ஸ்.ஸி.** - ஈழத்துத்தமிழ் நூல்வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு. புரட்டாதி, 2001
3. **நடேசபிள்ளை சு.** - "கல்கி" தீபாவளிமலர், சென்னை,1960,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் : 2

# யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் காலம்.

**(ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் - கி.பி. 1216-1621 வரை)**

## (அ) அரசியல் நிலை:

தமிழ் நாட்டுக்கும் ஈழத்துக்குமிடையே வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திருந்தே அரசியல் கலாசாரத் தொடர்புகள் இருந்து வந்துள்ளன. தென்னிலங்கையில் சிங்கள அரசுகள் சிறப்புற்றிருந்த காலங்களில் வடபகுதியும் சிங்கள அரசுக்குட்பட்டதுண்டு. கி.பி.1404 இல் இலங்கை முழுவதும் சோழராட்சிக்குட்பட்டது. பொலநறுவையை இராசதானியாக்கிய சோழர்கள் கி.பி.1070 வரை தமது ஆணையை ஈழத்திற் செலுத்தினர். இக்காலப்பகுதியில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட இலக்கிய முயற்சிகளின் தாக்கம் இங்கும் இடம்பெற்றிருக்கலாம். இக்காலப்பகுதியில் பெருந்தொகையான தமிழர்கள் திருகோணமலைப் பகுதியில் குடியேறினர். சைவசமயம் நன்கு வளர்ச்சி பெற்றது. சிவாலயங்கள் பல அப்பகுதியில் கட்டப்பட்டன.

சோழர்களுக்குப் பின் ஈழத்தை ஆண்ட மகாபராக்கிரமபாகு காலத்திலிருந்து சிங்கள மன்னர்கள் பாண்டிய மன்னர் குடும்பங்களுடன் திருமண உறவு கொள்ள முற்பட்டனர். இதன் பயனாகப் பொலநறுவை, தம்பதெனியா பகுதிகளில் நிலைபெற்ற சிங்கள மன்னர்கள் தமிழர்களோடு நட்புறவு கொண்டிருந்தனர்.

கி.பி. 1215இல் கலிங்க நாட்டிலிருந்து மாகன் என்பவன் இலங்கை மீது படையெடுத்து வந்து பொலநறுவையைக் கைப்பற்றி அரசுசெலுத்தினான். அவனது தம்பியான ஜெயபாகு என்பான் கி.பி. 1216 இல் ஈழத்தின் வடபாகத்தைக் கைப்பற்றி அங்கு தனது ஆட்சியை நிலைநாட்டினான். அக்காலம் முதல் வட இலங்கையில் தனியரசு ஒன்று நிலவுவதாயிற்று.

கி.பி. 1236இல் இரண்டாம் பராக்கிரமபாகு என்பவன் தம்பதெனியாவைத் தலைநகராகக்கொண்டு அரசாண்டான். இவனது ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் பாண்டியர்களின் செல்வாக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்தது. கி.பி.1251இல் பாண்டிய அரசனாக முடிசூடிக் கொண்ட சடாவர்மன் சுந்தரபாண்டியன் இலங்கை மீது கி.பி.1258இல் தனது பெரும் படையை அனுப்பி மாகனிடமிருந்து பொலநறுவையைக் கைப்பற்றினான். பாண்டியரின் சாசனங்களில் இப்படையெடுப்புப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

"துலங்கொளி மணியும் சூழி வேழமும் இலங்கை காவலனை இறை கொண்டருளி" என்னும் மொழித் தொடர்கள் சடாவர்மன் சுந்தர பாண்டியனுடைய மெய்க்கீர்த்தியிலே வருவது இதனை உறுதிப்படுத்துகிறது. இதன் மூலமாகக் கி.பி.1258இல் இலங்கையில் உள்ள அரசொன்றின் மீது பாண்டியர் படையெடுத்துத் தமது மேலாதிக்கத்தை ஏற்படுத்தியிருந்தனர் எனத்துணியலாம். இக்காலப்பகுதியில் ஈழத்தில் பாண்டிய மன்னர்களின் செல்வாக்கு மேலோங்கத் தொடங்கியது. கி.பி.1284இல் மூன்றாம் பராக்கிரமபாகு முடிசூடினான். இவனது ஆட்சிக்காலத்தில் மற்றொரு பாண்டியப் பேரரசனான மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆரியச்சக்கரவர்த்தி எனப் பட்டப் பெயர் பூண்ட தன்சேனைத் தலைவனை அனுப்பி கி.பி.1284இல் இலங்கையின் வடபகுதியைக் கைப்பற்றினான். இவன் வடபகுதியில் தனி அரசொன்றை மீண்டும் நிறுவினான். சிங்கை நகர் இத்தமிழரசின் தலைநகராக விளங்கிற்று. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய கி.பி.1621 ஆம் ஆண்டுவரை இத் தமிழரசு நீடித்தது.

ஆரியச் சக்கரவர்த்திகள் ஏறக்குறைய 337 ஆண்டுகள் அரசு செலுத்தினர். யாழ்ப்பாணத்தில் அரசு செலுத்திய விஜய கூளங்கை (காலிங்க) ஆரியச் சக்கரவர்த்திமுதல் கனக சூரிய சிங்கையாரியன் ஈறாகப் பதினொருவரை யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. இவர்கள் செகராசசேகரன், பரராச சேகரன் என்னுஞ் சிறப்புப் பெயர்களை மாறிமாறிப் பெற்றனர்.

இவ்வாரியச் சக்கரவர்த்திகளிலே சிங்கைச் செகராச சேகரனும் (கி.பி. 1380-1414) நல்லூர்ப் பரராச சேகரனும் (கி.பி.1478-1519) சிறப்பாகக் குறிப்பிடத்தக்கோராவர். இவர்களது ஆட்சிக் காலத்தில் தமிழிலக்கியம் சிறப்புற்று வளர்ந்தது. இவர்கள் இருவரும் தமிழையும் தமிழ்ப்புலவர்களையும் நன்கு ஆதரித்தனர். புரவலர்களாக மட்டுமன்றித் தாமும் புலவர்களாக விளங்கினர். இவர்களது ஆட்சிக்காலத்திலே பல தமிழ்நூல்கள் தோன்றின. அவை ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு வழிகாட்டுவனவாய் அமைந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் ஆட்சிக்காலம் குறிப்பிடத்தக்க முக்கிய காலகட்டமாகக் கருதப்படுகிறது. தமிழர்களுக்கெனத் தனியான அரசு ஒன்று நிலவியமையால் தமிழிலக்கிய முயற்சிகள் வளம் பெற்றன. சோதிடம், வைத்தியம் தொடர்பான நூல்களை ஆக்கவும் அவற்றைப் பேணிக்காக்கவும் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. யாழ்ப்பாண அரசின் தோற்றத்தின் பின்னரே ஈழத்தில் தமிழிலக்கிய வளர்ச்சியை, வரலாற்றை விபரமாக அறியமுடிகிறது.

## (ஆ) ஈழத்தில் எழுந்த முதல் தமிழ் நூல்

ஈழத்திலெழுந்த தமிழ் நூல்களுள் காலத்தால் முந்தியதாகக் கருதப்படுவது **சரசோதிமாலை** என்னும் சோதிட நூலாகும். இந்நூல் தம்பதெனியாவை இராசதானியாகக் கொண்டு அரசு செலுத்திய நாலாம் பராக்கிரமபாகு (பண்டித பராக்கிரமபாகு) என்பவனின் அவைக்களப் புலவராக விளங்கிய **தேனுவரைப் பெருமாள்** (போசராசபண்டிதர்) என்பவரால் கி.பி. 1310ஆம் ஆண்டில் அரங்கேற்றப்பட்டது.

ஈழத்தெழுந்த முதல் தமிழ் நூல் என்னும் பெருமைக்குரிய சரசோதிமாலை சோடச கருமப் படலம், ஏர்மங்கலப் படலம், பலகருமப்படலம், அரசியற்படலம், யாத்திரைப்படலம், மனைசெயற்படலம், தெய்வ விரதப்படலம், குணாகுணப்படலம், சுபாசுபப்படலம், நாழிகைப்படலம், சாதகப்படலம், நட்சத்திர தெசைப்படலம் ஆகிய பன்னிரு படலங்களைக் கொண்டுள்ளது. 934 விருத்தப் பாக்களாலானது. சகவருடம் 1232 வைகாசி மாதத்தில் (கி.பி.1310இல்) இந்நூல் அரங்கேற்றப் பட்டதாக இதன் பாயிரச் செய்யுளொன்று கூறுகிறது.

**''உரைத்த சக வருடமுறு மாயிரத் திருநூற்**
**றொரு நாலெட் டினிலிலகு வசந்தந் தன்னிற்**
**றரித்திடுவை காசிபுதன் பனையி னாளிற்**
**றம்பை வளர் பராக்கிரமபாகு பூப**
**னிருத்தவையிற் சரசோதி மாலை யீரா**
**றெய்து படல நூற்றொன்பான் முப்பானான்காம்**
**விருத்தமரங் கேற்றினனாற் போச ராச**
**விஞ்சை மறை வேதியனாம் புலவ ரேரே."** (பாயிரம்:1)

இச்செய்யுளின் மூலம் சரசோதிமாலை பராக்கிரமபாகு அவையிற் போசராச பண்டிதனால் அரங்கேற்றம் செய்யப்பட்ட தென்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியாகிறது. நூலாசிரியரான போசராசர் ஓர் அந்தணர். இவரது தந்தையார் சரசோதி. தமது தந்தையின் பெயராகிய சரசோதி என்பதை அடியொற்றி இந்நூலுக்குச் சரசோதிமாலை எனப் பெயரிட்டுள்ளார்.

**"புண்டரீ கத்தார் மார்பன் புகழ்ச்சரசோதி மைந்தன்**
**மண்டல மென்னுந் தேனு வரைப் பெருமாளென்றோது**
**பண்டித போசராசன் பரவு நற் குருவைப் போற்றித்**
**தண்டமிழ் விருத்தப் பாவாற் சரசோதி மாலை செய்தான்."**

(பாயிரம்:8)

என்னும் பாடல் போசராச பண்டிதர் தமது தந்தை பெயரில் இச்சோதிடநூலை ஆக்கி அரங்கேற்றியமையை உறுதிப்படுத்துகிறது. நூலின் பாயிரத்திலும் பல்வேறிடங்களிலும் நாலாம் பராக்கிரமபாகுவினைப் புலவர் சிறப்பித்துப் பாடியுள்ளார். இம்மன்னன் தமிழறிந்த மன்னனாகவும் சோதிடப் பிரியனாகவும் விளங்கியுள்ளான். தம்பதெனியாப் பகுதியில் மட்டுமன்றித் தெவிநுவரப்பகுதியிலும் தமிழ் மக்கள் அக்காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டும். இந்நூலாசிரியர் தெவிநுவர என்றழைக்கப்படும் தேனுவரையில் வாழ்ந்தமையால் தேனுவரைப் பெருமாள் என இவர் அழைக்கப்பட்டார். சரசோதி மாலையின் இலக்கியப் போக்கினுக்கு எடுத்துக் காட்டாகப் பின்வரும் பாடல்கள் அமைகின்றன.

**1. பூமாது மேவு தோளான் பொற்கம லத்துவாழு**
**மாமாது சேரு மார்பன் மாமணி நாட னெங்கோன்**
**காமானுஞ் செங்கை வள்ளல் கதிரவன் மரபில் வந்தோன்**
**பாமாலை சூடு மீளிப் பராக்ரம வாகு பூபன்.**

**2. முன்னூ லுணர்ந்த முனிவோர்கள்**
**முதலோர் மொழிந்த சோதிடமாம்**
**பன்னூல் விளங்கும் பொருளதனைப்**
**பார்மே னிகழும் படியாக**
**வன்னூ லுரைத்த நெறிவழுவா**
**தாராய்ந் தூசி நுழைவழியின்**
**மென்னூல் செல்லுஞ் செயல் போலத்**
**தமிழ் நூலிதனை விளம்பலுற்றேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. செந்திரு வாழு மார்பன் சினவரன் பாதபத்தன்
சுந்தரத் தரும நூலுஞ் சோதிட நூலுஞ் செய்தோன்
புந்தியிற் றெளிந்த கல்விச் சரசோதி போசராசன்
பைந்தமிழ் விருத்தப் பாவா லோரைநூல் பகரலுற்றான்

இப்பாடல்களில் பராக்கிரமபாகு மன்னனைப் புகழ்வதோடு தம்மைப் பற்றிய குறிப்புக்களையும் வெகு நயமாக இலாவகமாகப் புலவர் உரைத்துள்ளமையைக் காணலாம்.

## (இ) யாழ்ப்பாண வேந்தர் (ஆரியச் சக்கரவர்த்தி)கள் காலத்தெழுந்த நூல்கள்.

**யாழ்ப்பாண வேந்தர் காலத்தெழுந்த நூல்களை:-**

1. வரலாறு சார்ந்த நூல்கள்
2. பாரம்பரிய அறிவியல் நூல்கள்
3. மதவழித் தொன்மை நூல்கள்
4. மொழி பெயர்ப்பு ஆக்கம்

என நான்கு வகையாகப் பிரிக்கலாம் என்கிறார் பேராசிரியர் கா. சிவத்தம்பி.[1] இக்கால நூல்கள் செய்யுள் மரபினைக் கொண்டிருந்தன. செந்நெறிப் பாடல் மரபும் நாட்டார் வழக்குப் பாடல் மரபும் இக்காலச் செய்யுள் மரபின் பிரதான பண்பாக விளங்கியது.

**வரலாறு சார்ந்த நூல்கள்:-**

ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சிக்காலம் முதல் ஈழத்தமிழரிடம் வரலாற்று நோக்கு உருப்பெறலாயிற்று. வையாபாடல், கைலாய மாலை, கோணேசர் கல்வெட்டு, இராசமுறை, பரராச சேகரன் உலா ஆதியாம் வரலாறு சார்ந்த நூல்கள் யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் காலத்தில் எழுந்தவையாகும். இவை யாழ்ப்பாணத்தில் நிலவிய தமிழரசின் அரசியல் வரலாற்றுடன் தொடர்புபட்டவையாகும். இந்நூல்கள் அனைத்தையும் ஒப்பிட்டு நோக்கும்போது, ஈழத்தில் தமிழர்களின் வரலாற்றைப் பேணும் ஆர்வம் இக்காலத்தே முளை கொண்டமையை உணரலாம். ஈழத் தமிழர்தம் வரலாறு சார்ந்த இந்நூல்களில் இராசமுறை, பரராச சேகரன் உலா என்பவை கால வெள்ளத்திலடிபட்டு மறைந்துவிட்டன. இவை கிடைக்கப் பெற்றிருப்பின் யாழ்ப்பாணத் தமிழரசின் வரலாற்றினை மேலும் விரிவுற அறியும் வாய்ப்புக் கிட்டியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1. வையாபாடல்:-**

வையாபாடல் என்னும் நூலினை யாழ்ப்பாண அரசர்களுள் சிறந்தவனாக விதந்தோதப்படும் ஒருவனான செகராச சேகரனின் அவைப்புலவராக விளங்கிய வையாபுரி ஐயர் இயற்றினார். ஈழத் தமிழர்தம் பண்டைய பாரம்பரியத்தை எடுத்துக் கூறும் நூலாக இது மிளிர்கிறது.

"இலங்கை மாநகர் அரசியற்றிடு மரசன்றன் குலங்களானதும் குடிகள் வந்திடுமுறைதானும்" கூறிட எழுந்த இந்நூலில் 105 செய்யுள்கள் காணப்படுகின்றன. இவற்றுள் பல சிதைந்துள்ளன.

**"இலங்கையின் மண்டலத் தோர்தன் காதையை**
**நலம் பெறு தமிழினா னாடி யோதினன்**
**குலம்பெறு ததீசிமா முனிதன் கோத்திரத்**
**திலங்குவை யாவென விசைக்கு நாதனே."**

என வரும் இந்நூல் ஏழாஞ் செய்யுள் இலங்கையின் அரச பரம்பரைபற்றியும் மக்கள் குடியேற்றங்கள் நடந்தவற்றையும் குறிப்பிடுகின்றன.

பரராச சேகரன், செகராச சேகரன் காலத்தில் வாழ்ந்த இந்நூலாசிரியர் அக்காலத்தில் இடம்பெற்ற மக்கள் குடியேற்றங்கள் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார். மன்னர் குல வரவையும் அதன் பின் வன்னியர்வரவையும் இந்தியா, சீனா, துருக்கி போன்ற நாடுகளிலிருந்து இங்கு குடியேறியோர் குறித்தும் இந்நூலாசிரியர் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**2. கைலாயமாலை:-**

யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் காலத்தெழுந்த மற்றொரு வரலாற்று நூல் கைலாய மாலையாகும். சோழ நாட்டைச் சேர்ந்த உறையூரிற் பிறந்த செந்தியப்பன் மகனான முத்துராச கவிராயர் இந்நூலை இயற்றியுள்ளார்.

சிங்கையாரியன் நல்லூரைத் தலைநகராக அமைப்பித்த வரலாறும் அவன் முன்னோர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட தமிழ்க் குடியேற்றங்கள் பற்றியும் இந்நூலில் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 310 கண்ணிகள் கொண்ட கலிவெண்பாவால் ஆக்கப்பெற்ற இந்நூல் நல்லூர் கைலாயநாதர் கோவிலைச் சிங்கையாரியன் என்னும் தமிழ் மன்னன் கட்டிப் பிரதிஷ்டை செய்த வரலாற்றை விரித்தும் யாழ்ப்பாணத்தரசர் வரலாற்றைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கியும் கூறுகிறது. இந்நூலை அடியொற்றியே யாழ்ப்பாண வைபவமாலையை மாதகல் மயில்வாகனப் புலவர் ஆக்கினாரென்பர்.

இந்நூலின் இறுதியில் உள்ள பின்வரும் வெண்பா இதனை உறுதிசெய்கிறது.

**''கற்றோர் புகழ்க் கைலாய மாலை தன்னை**
**நற்றமிழ் னாற்றொடுத்து நாட்டினான் - சுற்றுறையூர்ச்**
**செந்தியப்பன் தந்த சிறுவன் முத்துராசனென**
**வந்த கவிராச மகுடம்.''**

**3. கோணேசர் கல்வெட்டு:-**

யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் காலத்தைச் சேர்ந்த மற்றொரு வரலாற்று நூல் கோணேசர் கல்வெட்டாகும். கோணேசர் சாசனம் என்றும் இது வழங்குகிறது. திருக்கோணமலையில் உள்ள கோணேசர் ஆலய வரலாற்றினையும் குளக் கோட்டுமன்னன் அங்கு மேற்கொண்ட திருப்பணிகளையும், மக்கள் தம் வாழ்க்கைப் பண்பாட்டினையும் சித்திரிப்பதாக இந்நூல் விளங்குகிறது. திருக்கோணமலையைச் சேர்ந்த கவிராச வரோதயன் என்பவர் இதனை இயற்றியுள்ளார்.

**''சொல்லுற்ற சீர்குளக் கோட்டுமன்**
**சொல்லிய சொற்படியே**
**கல்வெட்டுப் பாடெனப் பாடின**
**னாதிக் கதைபொருளா**
**மல்லுற்ற கண்டர்தம் பொற்பாத**
**நெஞ்சி லழுத்திகல்**
**வெல்லுற்ற சீர்க்கவி ராசவ**
**ரோதய விற்பன்னனே''**

என்னுஞ் செய்யுள் இதனை உறுதிப்படுத்துகிறது. இலங்கையிலே தமிழில் தோன்றிய வரலாற்றுச் சார்புடைய நூல்களிலே கோணேசர் கல்வெட்டுத் தனித்துவமுடையது எனப் பேராசிரியர் சி.பத்மநாதன் குறிப்பிட்டுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கது. இந்நூலாசிரியரான கவிராச வரோதயனே தட்சிண கைலாய புராணத்திற்குச் சிறப்புப்பாயிரம் வழங்கியவரென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சிங்கைச் செகராச சேகரனின் வேண்டுகோட் கிணங்கியே பண்டிதராசர் தட்சிண கைலாய புராணத்தைப் பாடினாராதலின் கவிராசர் வாழ்ந்த காலமும் செகராசசேகரன் ஆட்சிக்காலமேயாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் துணியலாம். கோணேசர் சாசனம் திருக்கோணமலைத் தலவரலாற்றை நன்குபுலப்படுத்துகிறது. குளக்கோட்டிராமன் என்னும் சோழமன்னன் கோணேசர் கோட்டமும் கோபுரமும் மதிலும் மண்டபமும் பாப நாச தீர்த்தமும் அமைத்த வரலாற்றையும் அவனது ஆலயத்திருப்பணிகளையும் எடுத்துரைக்கும் வகையில் இந்நூல் அமைந்ததெனலாம்.

"திருமருவு மனுநீதி கண்ட சோழன்
செகமகிழ மரபில்வரு ராமதேவன்
தருமருவு திரிகயிலைப் பெருமை கேட்டுத்
தானுமவன் வந்ததுவுமவன் சேய் பின்பு
மருமருவு மாலயங்கள் கோபுரங்கள்
மணிமதில்சூழ் மண்டபங்கள் மலி நீர்வாவி
கருமருவு முகினீர்சேர் திருக்கு ளஞ்செய்
காதையதுங் கல்வெட்டாய்க் கழறுவாமே."

"சொல்லரிய திரிகயிலைப் பெருமை யெல்லாந்
தூய புராணக் கதையிற் சொன்ன துண்டு
வல்லமை சேர் வன்னிமையு மற்றுந் தானம்
வரிப்பத்தா ராதியோர் வந்த வாறும்
நல்லதொரு பூசை விதி நடத்து மாறும்
நடப்பதின்மே லினிநடக்கு நடத்தை யாவும்
சொல்லெனவே சோதிடத்தினிலையே கண்ட
கவிராசன் வருங்காலஞ் சொல்லுஞ் சீரே."

என்னும் பாடல்கள் இந்நூல் கல்வெட்டுப் பாட்டாக எழுதப்பட்ட தென்பதையும் வருங்காலஞ் சொல்லும் சீர்படைத்ததென்பதையும் நன்கு புலப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

கோணேசர் சாசனத்தின் மற்றொரு சிறப்பு எதிர்காலத்தில் நிகழவுள்ளவற்றை முன்கூட்டியே கூறியுள்ள தீர்க்கதரிசனமாகும். பிற்காலத்திற் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் முதலியோர் ஈழத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்வர் என்பதைத் தீர்க்க தரிசனமாக இச்சாசனம் செப்பியுள்ளது. பின்வரும் பாடல்களில் இதனைக் காணலாம்.

"சேர்ந்தபின்னர் மறையோர்கள் கோணைநாதர்
திருப்பூசை வெகுகாலஞ் செய்யும் போதில்
மாந்தளிர்போன் மேனியுடைப் பறங்கிவந்து.
மாகோணைப் பதியழிக்க வருமந்நாளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏந்ததென்பாற் கழனிமலை யென்றொன்றுண்டாங்
கீசனுக்கு மாலயமங் கியற்றப் பின்னர்
கோந்தறைசே ருலாந்தரசு வருமந் நாளிற்
குலவுசிங்க வீரவிகுலங் குறைந்தே போகும்.

போனபின்ன ரிலங்கை முற்றும் வடுகராள்வார்
புகழிலங்கை தனிபுரக்கு முலாந்தா மன்னன்
தானிலங்கு மரசினுக்குத் தடையென் றெண்ணித்
தரியலனைக் கடலிடையே தள்ளிவிட்டுத்
தேன்மரு மலங்கல்புனை வடுகன் றானும்
செப்பிய மாற் றரசுமகிழ் கொண்ட கோனை
மானபர னகமகிழ்பொற் கோயி லுக்குள்
மாதனத்து மீதுவைத்து வணங்குவாரால்."

குளக்கோட்ட மன்னனின் திருப்பணிகள் மட்டுமன்றிக் கயபாகு மன்னனின் திருப்பணிகள், வன்னிமைகள் பற்றிய குறிப்புக்களும் இச்சாசனத்திற் காணப்படுகின்றன.

**பாரம்பரிய அறிவியல் நூல்கள்:-**

யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் காலத்தின் ஆரம்பத்தில் எழுந்த நூல்கள் பெரும்பாலும் சோதிடம், வைத்தியம் சார்ந்தவையாகவே விளங்கின. வடமொழியில் நூல்கள் அதிகம் எழுதப்படவில்லை யெனினும் வடமொழி நூல்களிலிருந்து வைத்தியம், சோதிடம், இலக்கியம் சார்ந்த நூல்கள் பல தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன.

சரசோதிமாலை, செகராச சேகரமாலை, பரராச சேகரம் முதலியன இவ்வகையில் அடங்கும். நான்காம் பராக்கிரமபாகு (பண்டித பராக்கிரமபாகு) காலத்தெழுந்த சரசோதிமாலையினைத் தழுவியதாகச் செகராச சேகரமாலை என்னும் சோதிட நூல் (கி.பி.14ஆம் நூற்றாண்டின் முற்பகுதி) யாழ்ப்பாணத்துச் சிங்கை நகர அரசனான செகராச சேகரனால் இயற்றுவிக்கப்பட்டது. இம்மன்னனின் வேண்டுதலுக்கமையவே இந்நூல் ஆக்கப்பட்டமையின் அவனது பெயராலேயே இந்நூல் செகராசசேகரமாலை எனப்பெயர் பெற்றது.

இந்நூல் சூழ்வினைப்படலம், வேந்தர்வினைப்படலம், கோசரப்படலம், யாத்திரைப்படலம், பல்வினைப்படலம் முதலிய ஒன்பது படலங்களையும் 290 விருத்தப்பாக்களையும் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமேசசன்மா மகன் சோமசன்மா என்பவர் இதன் ஆசிரியராவார். இந்நூலின் சிறப்புப்பாயிரத்தின் இறுதி இரு செய்யுள்கள் இதனை உறுதி செய்கின்றன.

“ஐந்தருவு நவநிதியுங் குல மணியும்
பொன்முகிலு மாவு மொன்றாய்
வந்தனைய கொடைக்குரிசில் வரியளிக
ளிசைகுலவு வனசத் தாமன்
சந்ததமுந் தருமநெறி கோடாத
தவப்பெருமான் றழைத்த கீர்த்திக்
கந்தமலை **யாரியர்கோன் செகராச
சேகரமன்** கங்கை நாடன்.”

தன்கடவுட் சுருதிகளின் மனமெனுஞ்சோ
திடமதனைத் தலத்தின் மீது
மின்குலவு தென்கலையாற் றருகவென
வருள்புரிய விருத்தப் பாவாற்
பொன்குலவு செகராச சேகரமா
லையைச் செய்தான் பொருந்து மேன்மைத்
தொன்குலவு மிராச **விரா மேசனருள்
சோமனெனுஞ்** சுருதியோனே.”

இச் செய்யுள்களின்படி ஆரியர் கோனான செகராச சேகரனின் வேண்டுதலுக்கமைய இச்சோதிட நூலினை இராமேசன் மகனான சோமன் ஆக்கினான் எனத் துணியலாம். சிங்கைச் செகராச சேகரனின் புகழ் குறித்து இந்நூலில் 13 பாக்களில் கூறப்படுகிறது.

நூலின் 36, 76, 86, 117, 118, 144, 157, 158, 173, 204, 269, 270, 286 ஆதியாம் செய்யுள்களில் செகராச சேகரனின் புகழினைக் குறிப்பிட்டுள்ள இந்நூலாசிரியர் காசிபகோத்திரத்துக் காசிமறையோனும் பூசுரமன்னனுமான மணவை ஆரியவரோதய சிங்கைச் செகராச சேகரன் ஆட்சியின்போது இந்நூல் ஆக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார். யாழ்ப்பண வேந்தர்களுள் முதன்மையானவன் எனக் கருதப்படும் சிங்கைச் செகராச சேகரன் புலவர்களை ஆதரித்துப் போற்றும் பண்பினன். அவனது காலத்தில் இயற்றப்பெற்ற மற்றொரு நூல் **செகராச சேகரம்**. இது வைத்திய நூலாகும். இதனை இயற்றியவர் யாரென்பது புலப்படவில்லை. ஆயுர்வேத வைத்திய முறையினைத் தழுவி இந்நூல் ஆக்கப்பெற்றுள்ள தென்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மணிதங்கு வரையு ளாதி மன்னுயிர் படைத்தபோது
பிணிதங்கு வகையு நோயின் பேருடன் குணமுங்காட்டி
அணிதங்கு மருந்துங் காட்டு மாயுரு வேதந்தன்னைக்
கனிதங்கு வகையால் வேதங்கடந்த மாமுனிவன் செய்தான்".

என்னும் செய்யுள் புலப்படுத்துகிறது. வேதங்கடந்த மாமுனிவன் செய்த ஆயுள்வேத நூலிலிருந்து சிலவற்றைத் தெரிவுசெய்து அந்தாதித் தொடை பெற்ற விருத்தமாக இந்நூல் ஆக்கப்பட்டதென நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். அந்தாதித்தொடை பெற்ற விருத்தமாக இந்நூல் செய்யப்பட்டதெனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அச்சிடப்பட்டுள்ள செகராச சேகரவைத்தியம் என்னும் நூலில் பல இடங்களில் அந்தாதித் தொடையற்றிருத்தலைக் காணமுடிகிறது. பாவலர் சரித்திர தீபகம் ஆசிரியர் சதாசிவம் பிள்ளை செகராச சேகரத்தில் 1500 விருத்தம் உள்ளதெனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் செகராச சேகர வைத்தியத்தில் 1576 செய்யுள்வரையுள்ளன. நூலைச் செய்வித்தோனாகிய மன்னனின் வெற்றி, கொடை, புகழ் என்பனவற்றைக் குறிப்பிடும் மரபுக்கு அமைய இந்நூலில் பல இடங்களில் செகராச சேகரன் புகழ் கூறப்படுவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக அங்காதிபாதம் கூறும் பகுதியில் ''செயம்பெறு சிங்கை நாடன் செகராச சேகரன்றான்'' என்றும் முகவாத சன்னிபற்றிக் கூறும் செய்யுளில்,

"செகராச சேகரனெனும்
சிங்கையா ரியனையெதி ரொன்னார்க ளென்னவே
திசை கெட்டகன்று விடுமே" என்றும் பாம்புக் கடிபற்றிக் கூறும் பகுதியில்,

"இலங்குமணி முடிபுனையு மிலங்கை வேந்தர்
சீரிய பொன் றிறையளக்கச் செங்கோ லோச்சுஞ்
செகராச சேகரமன் சிங்கைமேவு
மாரியர்கோன் வெண்குடையினிழலே செய்யும்....."

என்றும் செகராச சேகரன் புகழ் பாடப்பட்டுள்ளது. இந்நூலை ஆக்கியோன் யாரெனத் தெரியாவிடினும் செகராச சேகரன் என்னும் சிம்மாசனப் பெயருடையோன் ஒருவன் காலத்தில் இயற்றப் பெற்றதெனக் கருதலாம். பல்வேறு வியாதி வருமுறையையும் அவற்றின் குணங்குறிகளையும் அவற்றுக்கான மருந்து வகைகளையும் இந்நூல் எடுத்துக் கூறுகிறது.

செகராச சேகரமாலை மூலத்தையும் உரையையும் வண்ணார் பண்ணை வி.சபாபதி ஐயர் சுபகிருது வருடம் (1902) ஆனிமாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் - ஸ்ரீ பாஸ்கரயந்திரசாலையிற் பதிப்பித்துள்ளார். 1905 இல் கொக்குவில் சோதிடப்பிரகாச யந்திரசாலையில் ச.இ.சிவராமலிங்க ஐயராலும் 1942 இல் அதே யந்திரசாலையில் இ.சி.இரகுநாதையர் புத்துரையுடனும் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இதேநூல் அச்சுவேலியைச் சேர்ந்த ச.தம்பிமுத்துப் பிள்ளையினால் 1932இல் அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலையில் பதிப்பிக்கப்பெற்றது. இப்பதிப்புக்களில் பல பாடபேதங்கள் காணப்படுகின்றன.

**பரராச சேகரம் :**

யாழ்ப்பாணவேந்தர் காலத்தைய மற்றொரு வைத்திய நூல் பரராசசேகரம் என்பதாகும். யாழ்ப்பாண வேந்தர்கள் வைத்தியத் துறையில் கொண்டிருந்த ஆர்வத்தினைப் பிரதிபலிப்பதாகவே இக்காலத்தெழுந்த வைத்திய நூல்கள் விளங்குகின்றன. பரராச சேகரம் என்னும் இந்நூல் நல்லூரைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி செய்த பரராச சேகரனின் காலத்தது (கி.பி.1478-1519) எனப் பேராசிரியர் ஆ.சதாசிவம் குறிப்பிட்டுள்ளார். பரராசசேகரம் 12000 செய்யுள் கொண்ட தென்றும் அச்சில் வந்தவை 8000 செய்யுள் எனவும் அகத்திய வைத்திய சிந்தாமணி, தன்வந்திரி வைத்திய சிந்தாமணி இரண்டையும் தழுவி எழுந்தது எனவும் பேராசிரியர் சதாசிவம் கருதுகின்றார்.

இந்நூல் ஏழு பாகங்களாகத் தற்போது வெளிவந்துள்ளது. ஏழாலையைச் சேர்ந்த வைத்தியர் ஐ. பொன்னையாபிள்ளை இதனைப் பதிப்பித்துள்ளார்.

"பரராச சேகரம் ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசவையிலே கூட்டுமுயற்சியாக இருந்திருக்கக் கூடும்" எனப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை குறிப்பிட்டுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கது. காலப்போக்கில் இந்நூலில் இருந்த பல செய்யுட்கள் மறைந்து விட்டதாகவும் கிடைக்கப் பெற்ற செய்யுட்களைக் கொண்டே ஏழு பாகங்களும் பதிப்பிக்கப் பட்டுள்ளதாகவும் கருதப்படுகிறது.

## மதவழித் தொன்மை நூல்கள்:

ஈழத்தில் எழுந்த மதவழித் தொன்மை நூல்களில் குறிப்பிடத்தக்கவை தட்சிண கைலாச புராணமும் திருக்கரைசைப் புராணமுமாகும். தமிழகத்தில் தலபுராணங்கள் தோன்றுதற்கு முன்னரே ஈழத்தில் தட்சிண கைலாச புராணம் தோன்றிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தேவாரப் பாடல் பெற்ற திருக்கோணமலைத் தலத்தைப் பற்றியும் அங்கு எழுந்தருளியிருக்கும் கோணேசரையும் மாதுமையம்மையாரையும் பற்றிக்கூறும் தலபுராணமாகும். வடமொழியில் உள்ள மச்சேந்திய புராணத்தை ஆதாரமாகக் கொண்டு இந்நூல் படைக்கப் பட்டது. இந்நூல் சிங்கைச் செகராச சேகரமன்னனின் வேண்டுகோட்படி பாடப்பட்டதெனக் கருதப்படுகிறது. பண்டிதராசர் என்பவரே இத்தல புராணத்தைப் பாடியவரென்றும் இந்நூலுக்குக் கைலாச புராணம் என்றே அவர் பெயரிட்டிருந்தாரென்றும் தெரிகிறது.

''கைலாச புராண ஆசிரியரைப் பற்றி வரலாற்றாய்வாளர்கள் மத்தியில் மாறுபாடான கருத்துக்கள் நிலவிவருகின்றமை விசனத்துக்குரிய விடயமாகும். இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஈழத்து மகா வித்துவான்களாகிய பலர் இத்தடுமாற்றத்தின் காரணமாய் அமைந்தமையும் கவலைக்குரிய ஒன்றாகும்.''[2] என்பது பண்டிதர் கா.செ.நடராசாவின் கருத்தாகும். கைலாச புராணம் முதன்முதலாகக் காரைநகர் வாசியான கார்த்திகேய ஐயர் குமாரர் சிதம்பர ஐயராலே சென்னையில் உள்ள 'கலாரத் நாகர' என்னும் அச்சுக் கூடத்தில் 1887ஆம் ஆண்டு அச்சிடப் பெற்றது. அதில் இந்நூல் யாழ்ப்பாணத்து மகா வித்துவான் சிங்கைச் செகராச சேகரன் இயற்றியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பின்பு யாழ்ப்பாணத்துப் புலோலியூரிற் பிறந்தவரும் மட்டக்களப்பு காரேறு தீவில் வசித்தவருமாகிய பு.பொ.வைத்திலிங்க தேசிகர் 1916ஆம் ஆண்டில் பருத்தித்துறை தும்பை நகர் கலாநிதி யந்திரசாலையில் பதிப்பித்து வெளியிட்ட நூலில் பிரம்மஸ்ரீ பண்டிதராசர் அருளிச் செய்தது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிவசிதம்பர ஐயர் பதிப்பிலே காப்புச் செய்யுள் நீங்கலாக 632 செய்யுள்களும் வைத்திலிங்க தேசிகர் பதிப்பிலே காப்புச் செய்யுள் நீங்கலாக 635 செய்யுள்களும் காணப்படுகின்றன. நூலாசிரியர் யாரென்பது குறித்துப் பதிப்பாசிரியர்களிடையே முரண்பாடு நிலவிய போதிலும் நூலியற்றப்பட்ட காலம் சயவீர சிங்கையாரியனது காலம் எனத்துணியலாம்.

இந்நூலுக்குக் கவி வீரராகவர் என்பவர் பாடிய சிறப்புப் பாயிரம் பண்டிதராசரே இதன் ஆசிரியர் என்பதை உறுதிப்படுத்துகிறது. அப்பாயிரச் செய்யுளின் ஒருபகுதி வருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இடப வான்கொடி யெழுதிய பெருமான்
சிங்கை யாதிபன் சேதுகாவலன்
கங்கை நாயகன் கருங்கடற் சேர்ப்பன்
பௌவ மேற்றுயில் பராபரன் சூட்டிய
தெய்வ மாமுடிச் செகராச சேகரன்
அவனது காலத் தத்திரி கோணைச்
சிவனது கோயிற் சிவமறை முதல்வோன்
அருமறை யுபநிட மாகமஞ் சோதிடம்
விரிதமிழ் வரையற விளங்கிய குரவோன்
சேயினுந் திறலான் தயாநிதி யனையான்
முப்புரி நூற்பயன் முளரியந் தாமன்
செப்பரும் பண்டித ராசசி காமணி
என்னு நாமத் தெங்குரு பெருமான்
மன்னு நாற் கவியும் வல்லநா வலனே"

கோணேச கல்வெட்டைப் பாடிய கவிராசர் வழங்கியுள்ள மற்றொரு சிறப்புப்பாயிரம் பின்வருமாறு கூறுகிறது.

''நடிக்கும் பரத மியலிசை நாடக நாற்கவிதை
நொடிக்குமுன் பாடப்ரபந்தங் கணிதநன் னூல் சிவநூல்
படிக்க நிகழ்த்தப் புராணா கமஞ்சொல் பரம்பரையாய்
வடிக்குந் தமிழ் வல்ல பண்டித ராசன் வரவித்தையே''

நல்லூர் அரசகேசரியினாற் பாடப்பட்ட மற்றோர் சிறப்புப்பாயிரமும் செகராச சேகரனே இதனைப் பாடியதாகச் சுட்டுகின்றது.

''தேவரும் புகழ் செகராசசேகரக்
காவலன் கருணையிற் கடவுண் மாநதி
மாவுறை தென் கயிலாய மான்மியம்
பாவிய றமிழினாற் பகர்ந்திட் டானரோ"

தட்சிண கைலாய புராணமென அழைக்கப்பெறும் கைலாச புராணம் வடமொழியில் உள்ள மச்சேந்திரிய புராணத்தைத் தழுவி ஆக்கப்பட்டதென்பதைப் பின்வரும் செய்யுள் உறுதிப்படுத்துகிறது.

Library
Central College
National School



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மீதுயர்ந்த வுருத்திரரும் விரிபதுமப்
பெருமலரின் விரிஞ்ஞர் தாமும்
போதுதிரு மாதவரு மாதவர்க்கு
ளொரு பெரிய புனித மீனு
மாதரவி லிறைஞ்சுகதை கயிலாய
புராணமென வறைய லுற்றேன்
மாதுரிய மச்சேந்திய வடபுரா
ணத்தியல்பு மருவத் தானே."

(பதிகம்:11)

தட்சிணை கைலாச புராணம் காப்புச் செய்யுளும் பதினைந்து பாடல்கொண்ட பாயிரமும் நீங்கலாக ஏழு சருக்கங்களையும் 620 விருத்தப் பாடல்களையும் கொண்டுள்ளது. இலக்கியச் சுவையும் வரலாற்று நோக்கும் கொண்டதாக இந்நூல் விளங்குகிறது. ஈழ மண்டலச் சருக்கம், திருமலைச் சருக்கம், புவனோற்பத்திச் சருக்கம், அர்ச்சனாவிதிச் சருக்கம், மச்சாவதாரச் சருக்கம், தரிசனா முத்திச் சருக்கம், திருநகரச்சருக்கம் என்னும் ஏழு சருக்கங்களும் ஆக்கியோனின் ஆற்றலைப் புலப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. இதில் வரும் ஈழமண்டலச் சருக்கம், திருநகரச் சருக்கம் என்பன ஆக்கியோனின் தேசியப் பற்றைத் தெளிவுறக் காட்டும் வகையில் அமைந்துள்ளன. இனிய சந்தங்கள் பொருந்திய விருத்தப் பாக்களில் அமைந்துள்ள இந்நூல் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய முறையிலும் சிலேடை, மடக்கு முதலிய இலக்கியப் பண்புகள் விரவியதாகவும் உள்ளது. இத்தகைய இலக்கியப் பண்புகள் பொருந்திய நூல் இதற்கு முன்னர் ஈழத்தில் உருவாகவில்லை என்றால் அது மிகையல்ல. ஈழத்தில் தமிழரின் ஆதிக்கம் வலுப்பெற்றிருந்த ஒரு காலகட்டத்தில், சைவசமயம் உன்னத நிலையிலிருந்த வேளையில் கைலாசபுராணம் உருப்பெற்றதெனலாம்.

**திருக்கரைசைப்புராணம் :**

திருக்கரைசைப் புராணம் திருகோணமலைக்கு அருகில் உள்ள மகாவலி கங்கைக் கரையிலே, கரைசைப் பதியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் புகழை விரித்துக் கூறும் வகையில் அமைந்துள்ளது. ஈழத்திருநாட்டின் எழிலார்ந்த பெருமைகளையும் மகாவலி கங்கையின் சிறப்பையும் இந்நூல் பரக்கக் கூறுகிறது. கரைசைப் பதியை அகத்தியத் தாபனம் என்றும் அழைப்பர். அகத்திய முனிவரே இதனைத் தாபித்தார் எனவும் கூறுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கரைசைப் புராணம் செய்தவர் யாரென்பது இதுவரை புலப்படவில்லை. நூற்பாயிரத்தில் வரும் குருவணக்கம், புராண வரலாறு ஆதியனவற்றின் சான்று கொண்டு இந்நூலாசிரியர் ஈசானச் சிவன் குருவருள் கொண்டவரென்றும் ''கொற்றங்குடிவாழும் பிரான் சரணத்துறுதி கொண்ட''வரென்றும் தெரிகிறது. இந்நூலாசிரியர் உமாபதி சிவாசாரியாரின் சீடர்களுள் ஒருவர் என்பாருளர் எனக்குறிப்பிட்டுள்ளார் சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர். இவரே திருக்கரைசைப் புராணத்திற்குப் பொழிப்புரை கண்டவராவார். இப்புராணத்தின் பதிப்பாசிரியரான திருகோணமலை வே.அகிலேசபிள்ளையவர்கள் இந்நூலாசிரியர் பற்றிக் குறிப்பிடுமிடத்துச் ''சிலர்,உமாபதி சிவாசாரியார் பரம்பரையினுள்ளார் ஒருவர் என்பர்''[3] எனச் சுட்டியுள்ளார்.

''உமாபதி சிவாசாரியார் 1304 இல் கொடிக்கவி என்னும் நூலை இயற்றினார். எனவே கி.பி.1380-1414 காலப்பகுதியில் அரசு செலுத்திய சிங்கைச் செகராச சேகர மகாராசாவின் வேண்டுகோளுக்கிணங்கிப் பண்டிதராசர் போன்ற ஒரு புலவராலேயே திருக்கரைசைப்புராணம் இயற்றப்பட்டது எனக்கோடல் பொருந்தும்.''[4] எனக் கலாநிதி ஆ.சதாசிவம் குறிப்பிட்டுள்ளார்.

''இந்நூல் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தது என்பதற்கு ஆதாரமாக நூலகத்தே எவ்வித குறிப்புங் காணப்படவில்லை. எனவே இதற்கும் ஆரியச்சக்கரவர்த்திகளுக்கும் தொடர்பு காட்டவும் முடியவில்லை.''[5] என்பது கலாநிதி க.செ.நடராசாவின் கருத்தாகும்.

திருக்கரைசைப் புராணத்தில் காப்புச்செய்யுள் உட்பட 170 பாடல்கள் காணப்படுகின்றன. காப்புச் செய்யுள் நீங்கலாகப் பாயிரத்திலே 14 செய்யுள்கள் உள்ளன. பாயிரத்திலே கடவுள் வாழ்த்து, குரு வணக்கம், புராண வரலாறு அவையடக்கம் ஆகியன கூறப்பட்டுள்ளன. நூலின்கண் இலங்கைச் சருக்கம், கங்கைச் சருக்கம், தாபனச்சருக்கம், பூசைச்சருக்கம் ஆகிய சருக்கங்கள் கொண்டதாக 155 செய்யுள்கள் உள்ளன.

தலபுராணமாக இது விளங்கிய போதிலும் சீரிய வருணனைகளும் சிலேடை அணிகளும் கொண்டதாக மிளிர்கிறது. எடுத்துக்காட்டாகத் தாபனச் சருக்கத்தில் வரும் மூன்றாவது பாடலை நோக்குவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆடுகின்ற பாலன்னங்கள் பெடையுடன் அணைகின்ற
- செயனோக்கித்
தேடுகின்ற வான்களை கடியாதுளந் திகைத்து நிற்பனகண்டு
காடு கொண்ட பூங்கருங்குழற் கடைசியர் கனத னத்திடையே
நாடு மள்ளர்கள் குவளை கொண்டெறிதர நகைத்தன வரக்
- காம்பல்''

ஈழ நாட்டின் வளத்தினையும் மக்கள் மாண்பினையும் பெரிதும் விதந்தோதும் சருக்கமாக இலங்கைச் சருக்கம் அமைந்துள்ளது.

"காடெலாங் களிநல் யானை கரையெலாம் பவளக்குப்பை
நாடெலா மிரத்னராசி நகரெலாம் நல்லோர்சங்கம்
வீடெலாஞ் செம்பொற் கூரை வெளியெலாஞ் செந்நெற்குன்றங்
கோடெலாம் மஞ்ஞையீட்டம் குழியெலாங் கழுநீர்ப்போது."

(இலங்கைச் சுருக்கம், 21)

சீரியமுறையில் அமைந்துள்ள திருக்கரைசைப் புராணம் வடமொழியில் சூதமுனிவர் அருளிய புராணம் ஒன்றைத் தழுவியே படைக்கப்பட்ட தென்பதைப் பாயிரம் 13ஆம் செய்யுளில் நூலாசிரியர்

"சூதமுனி யருளிச் செய்த மிக்க திரும் வடபாடைப்
புராணத்தைத் தென்கலையின் விருத்தப்பாவால்"

பாடியமைபற்றிக் குறிப்பிட்டுள்ளார். எனினும் அந்த வடமொழி மூல நூல் எதுவென்பதை அவர் சுட்டவில்லை.

**வியாக்கிரபாத புராணம்:**

வடமொழியில் உள்ள வியாக்கிரபாத மான்மியம் என்னும் நூலின் மொழி பெயர்ப்பாக அமைந்ததே வியாக்கிரபாத புராணமாகும். இந்நூலை அளவெட்டியிற் பிறந்தவரும் பின்னாளில் சிதம்பரத்தில் வாழ்ந்தவருமான வைத்திய நாதத் தம்பிரான் எனவழங்கும் வைத்தியநாத முனிவர் செய்துள்ளார். இப்புராணம் அச்சில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர் தாமியற்றிய தமிழ்ப் புலவர் சரித்திரம் என்னும் நூலில் இது குறித்துக் குறிப்பிட்டுள்ளதுடன் இதில் வரும் இரு செய்யுள்களையும் அதற்குரியதெனச் சுட்டியுள்ளார். இப்பாடல்களில் ஒன்று விநாயகப்பெருமானையும் மற்றையது சிவபெருமானையும் போற்றும் வகையில் அமைந்துள்ளது. வியாக்கிரபாத புராணமும் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்ததென்றே கருதப்படுகிறது. இந்நூல் தொடர்பான மேலதிக விபரங்கள் எதுவும் கிடைப்பதாயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கதிரை மலைப்பள்ளு:**

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தெழுந்த பொதுமக்கள் சார்பு இலக்கிய வகைகளில் ஒன்றெனப் பெரிதும் விதந்து கூறப்படுவது கதிரைமலைப்பள்ளு நூலாகும். இது ஈழத்தெழுந்த பள்ளு நூல்களுட் காலத்தால் முந்தியதெனக் கருதப்படும் சிறப்புக்குரியது. இதனைப் பின்பற்றியே தமிழகத்தில் பள்ளுப் பிரபந்தங்கள் தோன்றின என்பர். இதனைக் கதிரை மலையப்பர் பள்ளு எனவும் அழைப்பர். இந்நூல் 130 செய்யுட்களைக் கொண்டுள்ளது. பள்ளுப் பிரபந்தத்தின் இலக்கணங்கள் யாவும் செவ்வையாக அமைந்த நூலாக இது மிளிர்கிறது. நாட்டார் இலக்கியப் பாங்கும் பண்பும் நிறைந்து காணப்படும் மக்கள் இலக்கியமாகப் படிப்போர் உளம் கவரும் தன்மை மிக்கதாக இந்நூல் விளங்குகிறது.

இந்நூலை ஆக்கியோனின் பெயர் தெரியவில்லை. நூலில் விருத்தம், சிந்து, தரு ஆகிய பாவகைகள் கையாளப்பட்டுள்ளன. இந்நூலின் செய்யுள் நடையை மனங்கொண்டு நல்லூர் பரராச சேகரன் (கி.பி.1478-1519) காலத்தையதாக இது இருக்கலாமெனக் கலாநிதி சதாசிவம் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூல் எழுந்த காலத்தை உறுதிசெய்தற்கான சான்றுகள் எதுவும் இதுவரை கிட்டவில்லை. கதிரை மலைப்பள்ளு கதிர்காமக் கந்தனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பள்ளு இலக்கிய மரபுக்கமைய மூத்தபள்ளி, இளையபள்ளி, பள்ளன், பண்ணைத் தலைவன் ஆகியோரைப் பாத்திரங்களாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது. பாடல்களில் எளிமையும் இனிமையும் எள்ளல் சுவையும் இலக்கிய நயமும் தவழும் சொற்கள் பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முல்லைத் தீவைச் சேர்ந்த தா.கைலாச பிள்ளை அவர்களால் 1906ஆம் ஆண்டில் இந்நூல் அச்சிற் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலை 1935 ஆம் ஆண்டு பதிப்பித்த வழக்கறிஞர் தெல்லிப்பழை வ.குமாரசுவாமி சில ஏட்டுப் பிரதிகளில் இடைச்செருகலாகவும் பாடபேதமாகவும் காணப்படும் ஏழு பாடல்களை எடுத்துக்காட்டியுள்ளார். இந்நூலில் மூத்த பள்ளி மகாவலி கங்கை பாயும் ஈழநாட்டவளாகவும் இளைய பள்ளி பகீரதா கங்கைவயற் பள்ளியாகவும் கூறப்படுகின்றனர்.

பள்ளியர் தத்தம் நாட்டுவளங் கூறும் வகையில் அமைந்த பாடல்கள் நூலாசிரியரின் கவித்துவ ஆற்றலையும் பயிர்த்தொழில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்த பட்டறிவினையும் நன்கு புலப்படுத்துவனவாகவுள்ளன. பொதுமக்கள் சார்பு இலக்கியம் என்றவகையில் பேச்சுவழக்குச் சொற்களும் பாடல்களில் விரவியுள்ளமையைக் காணமுடிகிறது. கதிரை மலைப்பள்ளு ஆசிரியரின் கவித்துவத்துக்கும் கற்பனைத் திறனுக்கும் எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடல்களைக் குறிப்பிடலாம்.

**நஞ்சுபோல் விழி மங்கையர் கூடி**
**நயங்கள் பேசி யிசை பாடி யாடி**
**பஞ்சு போலடி மெல்ல நடந்து**
**பணைத்த கொங்கை கனத்திடை தொய்ய**
**விஞ்சு கோதை விரித்த நறும்புனல்**
**மீதுலாவி விளையாடக் கண்டு**
**மஞ்சு மஞ்சி மலையி லொளிக்கின்ற**
**மாவலி கங்கை நாடெங்கள் நாடே.**

(செய்யுள்6)

**அணி யிளங்கதி ராயிர முள்ள**
**அருக்கன் போய்க்குட பாலிடை மேவ**
**மணி கொணர்ந்து மணிவிளக் கேற்றிடும்**
**மாவலி கங்கை நாடெங்கள் நாடே.**

(செய்யுள் 18)

**காய்ச்சுத் தோயலுடன் சோறு மிட்டுக்**
**கடனுக் காகவே கைமரக் காலால்**
**பாய்ச்சியே செந்நெல் முத்தளக் கின்ற**
**பகீரதா கங்கை நாடெங்கள் நாடே**

(செய்யுள் 19)

**வேணிச் சங்கரர் தொண்டர்க ளென்று**
**வீடு தோறு மிரப் பவர்க் கெல்லாம்**
**மாணிக் கமள்ளிப் பிச்சை கொடுத்திடும்**
**மாவலி கங்கை நாடெங்கள் நாடே** (செய்யுள் 20)

இளைய பள்ளி தன் ஆண்டையின் பெருமை கூறும் வகையிலான பாடல்களில் விநாயகர் பிரபாவமும் மூத்த பள்ளி தன் ஆண்டையின் பெருமை கூறும் பாடல்களில் சுப்பிரமணியர் பிரபாவமும் கூறப்படுகின்றன.

மருத நிலத்திலே பெருகி வெள்ளம் வருதலைப் பற்றிப் பாடும் போதும் கவிஞர் அதனை இறைவனின் கருணையோடு இணைத்துச் சுவை படக்கூறுகின்றமை நோக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"பெருகு புகழ் கொண்டு யர்தென் கதிரைப்**
**பெருமான் தனது தொண்டர் மேற்**
**பெருத்த கருணை வெள்ளம் போலப்**
**பெருகி யெங்கனு மருவியே........**
**தாழ்ந்து மிகுந்து மருதங்கடந்து**
**தழைக்கு நெய்தல் புகுந்ததே"**

(செய்யுள் 46)

எனத் தம் பக்தியுணர்வைப் புலப்படுத்துகின்றார்.

இந்நூலில் வரும் பண்ணைக்காரன் பாத்திரம் பற்றிய அறிமுகமும் பள்ளன், பள்ளியரின் உரையாடல்களும் எளிமையும் சுவையும் மிக்கனவாகத் திகழ்கின்றன. இயல்பாகவே நாடகப் பாங்குடையதாகவும் கற்றோரையும் மற்றோரையும் கவர்ந்திடும் வகையிலும் அமைந்துள்ள கதிரை மலைப்பள்ளு ஈழத்தில் உள்ள பள்ளு நூல்களுள் தனிச் சிறப்பு மிக்கதெனத் துணிந்து கூறலாம்.

**கண்ணகி வழக்குரை:**

இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் ஈழத்து மக்களின் இதயங்கவர்ந்த இலக்கியமாக மிளிர்கிறது. இதன் சில பகுதிகள் பொதுமக்களின் விருப்புக்கேற்பச் சில புதுச்சேர்க்கைகளுடன் ஒரு புது இலக்கியமாக - காவியமாக உருப்பெற்றுள்ளது. ஈழத்தின் கிழக்குப் பகுதிகளில் கண்ணகி வழக்குரை காவியமெனவும் வடபகுதியில் கோவலனார் கதை என்றும் முல்லைத்தீவுப் பகுதியில் சிலம்பு கூறல் என்றும் இது வழங்கி வருகிறது.

கண்ணகி வழக்குரை காவியம் என்னும் இந்நூல் வரம்பெறுகாதை முதலாகப் பதினைந்து கதைகள் கொண்டது. கண்ணகி பாண்டிய மன்னனுடன் வழக்குரைப்பதோடு நூல் முற்றுப் பெறுகிறது. தாழிசை, அகவல், வெண்பா, சிந்து முதலிய யாப்புகளாலான 2219 பாடல்கள் கொண்டதாக இந்நூல் விளங்குகிறது. சிலப்பதிகாரத்தைத் தழுவி இந்நூல் ஆக்கப்பெற்ற தெனினும் இதன் முதல் மூன்று அதிகாரங்களும் சிலப்பதிகாரத்தில் இடம்பெறாதவையாகும். சிலப்பதிகாரத்தில் உள்ள வஞ்சிக் காண்டப்பகுதியும் இதில் இடம் பெறவில்லை. நூற்கதைகள், பாடல்கள் என்பனவற்றின் எண்ணிக்கை பல ஏடுகளில் வேறு பட்டுக்காணப்படுவதாகக் கலாநிதி. ஆ.சதாசிவம் குறிப்பிட்டுள்ளார்.[6]

கோவலனார் கதை என்ற நூலும் பொருளளவில் இதே போன்று அமைந்துள்ள போதிலும் அதிற் சில சில வேறுபாடுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. ஈழத்தெழுந்த பொது மக்கள் சார்ந்த நூல்களில் ஒன்றாகக் கருதப்படும் கண்ணகி வழக்குரை காவியத்தைப் பாடியவர் யாரென்பதை நூலின் அகத்தே காணப்படும் செய்யுள்கள் சிலவற்றின் மூலமே அறிந்து கொள்ள வேண்டிய நிலைமையுள்ளது. நூலாசிரியர் தமது பெயரைப் பாடல்கள் சிலவற்றின் மூலம் அறியத் தந்துள்ளார். அப்பாடல்களில் ஆரியர்கோன், அதியரசன், தேவையர்கோன், காங்கேசன், சகவீரன் என்ற பெயர்கள் ஆசிரியரை இனங்காண உதவுகின்ற குறிப்புக்களாக உள்ளன என இலக்கிய கலாநிதி வித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராசா குறிப்பிட்டுள்ளார்.[7]

**"திருவிருக்கும் மணிமார்பன் சிறந்த தமிழ் ஆரியர்கோன்**
**மருவிருக்கும் மார்பணிந்த மண்டலத்தில் வணிகர் மைந்தன்**
**தருவிருக்கும் கைத்தலத்தான் தந்தி வண்ணப் பெருமாள்காண்**
**குருகுலத்தோர் கொண்டாட இக்கதையைப் பாடிவைத்தேன்,"**

என்ற பாடலில் இக்கதையைப் பாடியவர் ஆரியர் கோன் எனச் சுட்டப்படுகின்றார். இதனால் நூலாசிரியர் ஆரியச் சக்கரவர்த்திகளில் ஒருவராக இருக்கலாமெனக் கருதலாம். மற்றொரு பாடலில்;

**"மழையனைய கொடைக் கரத்தோன்**
**வருணகுலந் தனிலுதித்தோன்**
**பழையமறை முனிமரபோன் பவளமனைக் காவலன்**
**அழகன் வழி அரசுகொண்ட அதியரசன் அன்புடனே**
**வழுதியுடன் கண்ணகையார் வழக்குரையைப் பாடினனே"**

என வருவதன் மூலம் ஆசிரியர் அரச மரபினர் என்பது உறுதியாகிறது. அதியரசன் என்ற சொல் ஆசிரியர் அரசமரபினர் என்பதை அறிந்திட உதவுகிறது. மேலும்,

**"அவனி பயில் குடிநயினாப் பணிக்க னெனுபவம் மிகுந்தோன்**
**கவளமதக் களிற்றண்ணல் காங்கேசன் தேவையர்கோன்**
**தவனென விளங்குபுகட் சகவீரன் றாரணியிற்**
**சிவனருளா லிக்கதையைச் செந்தமிழ்ப் பா மாலை செய்தான்"**

என்ற பாடலில் காங்கேசன், தேவையர் கோன், சகவீரன் என மூன்று முக்கிய பெயர்கள் வருகின்றன. இவற்றையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஆரியர்கோன், காங்கேசன், தேவையர் கோன், சகவீரன் ஆகிய பெயர்கள் யாவும் ஆரியச் சக்கரவர்த்திகளில் ஒருவரையே குறிப்பிடுவதாகத் துணியலாம். எனவேதான் சகவீரன் என்ற சிறப்புப் பெயர்பெற்ற ஐந்தாம் செகராச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகர மன்னனே கண்ணகி வழக்குரையைப் பாடினான் எனக்கருதலாம்.

**இரகு வம்சம்:**

ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சி செய்த காலத்தில் ஆக்கப்பெற்ற காவியங்கள், தலபுராணங்கள் பலவும் வடமொழியில் உள்ள நூல்களைத் தழுவியனவாக ஆக்கப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்க காவியமாக மிளிர்வது இரகுவம்சம். இந்நூல் காளிதாச மகா கவியினால் வடமொழியில் ஆக்கப் பெற்ற இரகுவம்சம் என்னும் காவியத்தின் தமிழாக்கமேயாகும். இதனை இக்காவியத்தின் பாயிரச் செய்யுளே தெளிவு படுத்துகிறது.

**"வன்றி சைக்காளி தாசன் வடமொழி**
**தென்றி சைத்தமி ழானனி செப்புகே**
**னன்றி சைக்கு முரைவழி நன்னெடுங்**
**குன்றி சைப்பது போலுங் குறிப்பரோ."**

இக்காவியத்தை தமிழில் தந்தவர் அரசகேசரி என்னும் புலவராவார். யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகள் பரம்பரையில் வந்த அரச கேசரியே முதன் முதலாக ஈழத்திற் காவியம் செய்த பெருமைக்குரியவராவார். இவர் நல்லூரிலிருந்து ஆட்சி செலுத்திய எதிர்மன்னசிங்கன் என்னும் பெயரினையுடைய எட்டாம் பரராச சேகர மன்னனின் மருகனாவார்.

இரகு வம்சத்திலே திலீப மகாராசன் காமதேனுவை வழிபட்டு இரகு என்பவனைப் புத்திரனாகப் பெற்ற கதையும் இரகுவின் கதையும் இரகுவின் மகன் அயன்கதையும், அயன் மகன் தசரதச் சக்கரவர்த்தியின் கதையும் தசரதன் மகன் இராமன் கதையும் இராமன் மகன் குசன் கதையும் பிறவும் கூறப்பட்டுள்ளன.

இந்நூல் 2444 செய்யுள்களைக் கொண்டுள்ளது. செய்யுள் நடை எளிதில் பொருள் விளங்க முடியாத சொல் நடை கொண்டுள்ளதாகவுள்ளது. பொதுக் காண்டம், சிறப்புக் காண்டம், பொதுச் சிறப்புக் காண்டம் என மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ள இந்நூல் ஆற்றுப் படலம் முதல் இந்துமதி பிறப்பு நீங்குபடலம் ஈறாகப் பதினாறு படலங்களைக் கொண்டுள்ளது.

அரசகேசரி படைத்த இரகுவம்ச காவியத்தை ஆழ்ந்து நோக்குமிடத்து அவற்றில் கம்பராமாயணச் செய்யுள்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்குப் பெரிதும் காணப்படுகின்றதெனலாம். ''வடமொழியிலும் தமிழ் மொழியிலும் ஆழ்ந்த புலமைமிக்க அரசகேசரி தாம் வாழ்ந்த காலத்திற்குரியதான கடினமான செய்யுள் நடையினையே கையாண்டுள்ளார். கம்பன் காவியத்தில் கையாண்ட, ''சொற்கள், சொற்றொடர்கள், உவமை, உருவகங்கள் முதலானவற்றை அரச கேசரி தாராளமாகக் கையாண்டுள்ள போதிலும் கம்பராமாயணத்தின் தரத்தை இரகுவம்சத்தினால் எட்டமுடியவில்லை''[8] எனக் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா குறிப்பிட்டுள்ளமையும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

கம்பனின் செல்வாக்குக்கு அரச கேசரி உட்பட்டமைக்கு அவர் பாடிய பாயிரச் செய்யுள் ஒன்றே எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

**"உலகம் யாவையு நிற்பன வத்தொழில்**
**விலக லாது விளைத்தும் விளைத்திலா**
**திலகு நீர்மைய தெப்பொரு ளெப்பொரு**
**ளலகி லாத வருட் கடன் மூழ்குவாம்"**

கம்பன் பாடிய ''உலகம் யாவையும் தாமுளவாக்கலும்........'' என்னும் செய்யுளை அடியொற்றியதாகவே மேற்காணும் செய்யுள் அமைந்திருப்பது நோக்கத்தக்கது.

இந்நூலினை நாவலர் பெருமானின் மருகர் நல்லூர் வித்துவ சிரோமணி ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் யாழ்ப்பாணம் வித்தியாநுபாலனயந்திரசாலையிலே பதிப்பித்து சர்வசித்து வருடம் ஆவணிமாதம் (1887) வெளியிட்டுள்ளார். சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் இந்நூலில் உள்ள அரிதிலுணர்தற் பாலனவாகிய சில செய்யுட்களுக்கும் சொற்றொடர்களுக்கும் உரையெழுதி **'இரகுவமிசக் கருப்பொருள்** என்னும் பெயரில் வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய மற்றொரு நூலான **'இரகுவம்ச சரிதாமிர்தம்'** என்னும் நூல் சுன்னாகம் தனலட்சுமி புத்தகசாலையாரால் 1930இல் வெளியிடப்பட்டது. இந்நூலில் உள்ள பதினாறு படலங்களுக்குப் புன்னாலைக் கட்டுவன் வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்கள் பதவுரை எழுதி வெளியிட்டுள்ளமையும் இங்கு மனங்கொள்ளத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரகுவம்சம் எழுதிய அரசகேசரி, தட்சிண கைலாச புராணத்திற்குச் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளமையும் நினைவு கூறத்தக்கது.

**(ஈ) ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியப் பண்புகள்.**

யாழ்ப்பாண வேந்தர்கள் காலத்தெழுந்த இலக்கியங்களை ஆராயுமிடத்து அவற்றிற் காணப்படும் இலக்கியப் பண்புகளைப் பின்வரும் முறையில் வகைப்படுத்தலாம்.

(i) சோதிடம், வைத்தியம், சிற்பம் முதலிய கலைகளைப் பேணுவனவாகக் காணப்படுதல்.

(ii) வடமொழி நூல்களை மூல ஆதாரமாகக் கொண்ட மொழி பெயர்ப்புகளாக அமைதல்

(iii) ஈழத்துத் தமிழ் மக்களின் பண்டைய பாரம்பரியத்தை எடுத்துக் கூறுவனவாக அமைந்திருத்தல்,

(iv) ஆரியச் சக்கரவர்த்திகளின் புகழ் பாடுதலாக விளங்கியமை.

(v) விருத்தப்பா செல்வாக்குப் பெற்றிருத்தல்.

(vi) வரலாற்றுப் பேண்முறை வெளிப்படுத்தப்படல்.

(vii) பொதுமக்கள் சார்பு இலக்கியங்கள் தோற்றம் பெற்றமை.

(viii) காவியப் பண்பு, மதக் கருத்துக்கள், வித்துவத்தன்மை ஆகியன வலுப்பெறல்.

இத்தகைய இலக்கியப் பண்புகளே பிற்காலத்தில் ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு அடிகோலின எனலாம். ஆரியச் சக்கர வர்த்திகள் ஆட்சிக் காலத் தொடக்கத்தில் எழுந்த தமிழ் நூல்கள் குறிப்பாகச் சரசோதிமாலை, செகராச சேகரமாலை, பரராச சேகரம், இரகுவம்சம் முதலியன வடமொழி மொழி பெயர்ப்பாகவே உள்ளன. வடமொழிச் செல்வாக்கு மிக்கிருந்த காலமாயினும் இம்மொழி பெயர்ப்பு நூல்களில் வடமொழிச் சொற்கள் மிக அருகிக் காணப்படுதலும் செந்தமிழ்ப் பண்பு மிக்கிருத்தலும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கனவாகும்.

இக்காலத்து நூல்களில் நூல்களை இயற்றுவித்த பாராக்கிரமபாகு (பண்டிதபராக்கிரமபாகு), செகராச சேகரன், பரராச சேகரன் முதலியோர் பெரிதும் போற்றிப் புகழப்படுதலைக் காணமுடிகிறது. இக்காலப் பகுதியில் தமிழகத்தில் விருத்தப்பா பெரிதும் செல்வாக்குப் பெற்றிருந்தமை போன்று ஈழத்திலும் செல்வாக்குப் பெற்றிருந்தமையைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துத் தேசியப் பண்புகளைப் பெரிதும் கொண்டதாக இக்காலத்தெழுந்த திருக்கரைசைப் புராணம் திகழ்கிறது. கயபாகு மன்னன் காலத்திலிருந்து (கி.பி.114-136) ஈழத்தில் கண்ணகி வழிபாடு சிறப்புற்றிருந்தது. தமிழ், சிங்கள மக்கள் பத்தினித் தெய்வமாகக் கண்ணகியை வழிபட்டனர். சிலப்பதிகாரக் காவியம் பழகு தமிழிற் கண்ணகி வழக்குரை என்னும் பெயரில் காவியம் ஆக்கப்பட்டது. கதிரைமலைப் பள்ளு பொதுமக்களின் வாழ்க்கைப் பண்புகளைச் சித்திரிக்கும் வகையில் அவர்தம் இன்ப, துன்ப, உணர்வுகளைப் பிரதிபலித்துக் காட்டுகிறது.

ஈழத்திற்குரிய சிறப்பான பண்புகள் பலவற்றைக் கொண்ட திருக்கரைசைப் புராணம், கண்ணகி வழக்குரை, கதிரை மலைப் பள்ளு ஆகியன ஆரியச் சக்கர வர்த்திகள் கால இலக்கியப் பண்புகளுக்கு ஏற்ற எடுத்துக் காட்டுக்களாக விளங்குகின்றன. இக்காலத்துத் தோன்றியதாகக் கருதப்படும் பரராசசேகரன் உலா, வியாக்கிரபாத புராணம், இராசமுறை ஆகிய மூன்று நூல்களும் பிற்காலத்தில் கிடைக்கப்பெறாமை நமது இலக்கியப் பாரம்பரியத்திற்குப் பேரிழப்பாகவே அமைந்துள்ளது.

**அடிக்குறிப்புக்கள்:**

1. **சிவத்தம்பி கா.** - புறநானூறு முதல் புதுக்கவிதைவரை, தமிழ் நூல் வெளியீட்டு விநியோக அமையம், கொழும்பு.
2. **நடராசா கா.செ.** - தக்ஷிண கைலாசபுராணம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு. மார்ச், 1995, பக்கம் -ix
3. **அகிலேசபிள்ளை வே.**- திருக்கரைசைப் புராணம் - பதிப்புரை
4. **சதாசிவம்.ஆ.** - ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம். சாகித்திய மண்டலம், கொழும்பு. 1966. பக்கம் 45
5. **நடராசா.க.செ.** - ஈழத்துத் தமிழ் இலக்கியவளர்ச்சி, கொழும்புத் தமிழ்ச்சங்கம், 1982.
6. **சதாசிவம்.ஆ** - மு.கு.நூல்
7. **நடராசா, F.X.C.** - ஈழத்துத்தமிழ் நூல் வரலாறு, குமரன் பதிப்பகம், கொழும்பு மீள் வெளியீடு 2001,பக்கம்:34
8. **சிவலிங்கராசா.சி** - ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி, தனலக்குமி புத்தகசாலை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், டிசம்பர். 2001.பக்கம் 57.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல்: 3

# போர்த்துக் கேயர் ஆட்சிக்காலம். (கி.பி.1621-1658)

## (அ) அரசியல் நிலை :

வரலாற்று நகர்வினடிப்படையில் ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றை ஆராயுமிடத்து ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சிக் காலத்தையடுத்துப் போர்த்துக்கேயர் ஆட்சிக்காலம் முக்கியத்துவம் பெறுகிறது. கி.பி. 1505ஆம் ஆண்டிலிருந்து போர்த்துக்கேயர் இலங்கையின் தென்மேற்குப் பகுதியைத் தமது ஆளுகைக்குட்பட்ட பகுதிகளாக ஆக்கிக் கொண்டனரெனினும் அவர்களால் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்ற முடியவில்லை. 1543ஆம் ஆண்டிலிருந்தே யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றப் பெருமுயற்சி செய்தனர். எனினும் 1621ஆம் ஆண்டுவரை அவர்களது முயற்சி பயன்தரவில்லை. 1621இல் போர்த்துக் கேயர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றி 37 ஆண்டுகள் (1658வரை) தமது ஆட்சியை நிலை நாட்டினார். இவர்களது ஆட்சிக்காலத்தில் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்து நிலவிய அமைதியும், இலக்கிய எழுச்சியும் நிலை பெறவில்லை. தமிழ்ப் புரவலர்களாகவும் புலவர்களாகவும் விளங்கிய பரம்பரையினரிடமிருந்து அரசு கைமாறியமையே இதற்குக் காரணமாகும். வேற்றுமொழி பேசுபவர்களான போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் கத்தோலிக்க மதப் பிரசாரமே முக்கியத்துவம் பெற்றிருந்தது எனலாம். கி.பி. 1658இல் ஒல்லாந்தரிடம் ஆட்சியதிகாரத்தை இழக்கும் வரை இவர்களது ஆட்சியில் குறிப்பிடத்தக்க இலக்கிய வளர்ச்சி எதுவும் ஏற்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஆ) போர்த்துக் கேயர் ஆட்சிக்காலத்தெழுந்த நூல்கள்:

போர்த்துக்கேயர் வேற்று மொழி பேசுபவர்களாக இருந்தமையால் இவர்கள் முன்னவர் போன்று தமிழ் மொழியைப் போற்றி வளர்க்கும் பணியிலீடுபட்டனரெனக் கூறமுடியாது. அக்கால அரசியல் நிலையும் அதற்கேற்றதாக அமையவில்லை. இக்காலத்தெழுந்த தமிழிலக்கியங்களைப் பற்றிப் பூரணமாக அறிந்து கொள்ளவும் முடியவில்லை. போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் ஞானப்பள்ளு, ஞானானந்த புராணம், அர்ச், யாகப்பர் அம்மானை ஆகிய மூன்று நூல்களே ஆக்கப்பட்டனவாகத் தெரிகிறது. இம்மூன்று நூல்களும் கத்தோலிக்க சமயம் சார்ந்தவை என்பதும் குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர்காலத்தில் நிலவிவந்த சைவசமய வழிபாட்டு மரபுகள், சடங்காசாரங்கள் யாவும் ஆட்சியாளரின் அதிகாரத்தால் தடுக்கப்பட்டமையால் சைவசமயம் சார்ந்த நூல்கள் எதுவும் தோன்றுதற்கு வாய்ப்பேற்படவில்லை. கிறிஸ்தவ சமயத்திற்கும் கிறிஸ்தவ வழிபாடுகளுக்கும் முக்கியத்துவமளிக்கப் பட்டதன் காரணமாக இக்காலப் பகுதியில் எழுந்த மூன்று நூல்களும் கத்தோலிக்க மதம் சார்ந்ததாகவே படைக்கப்பட்டன. ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் பலர் இக்காலப்பகுதியில் ஈழநாட்டை விட்டுப் புலம் பெயர்ந்து தமிழ் நாட்டுக்குச் சென்று அங்கு சைவத் தமிழ்ப் பணிகளில் ஈடுபட்டனரெனவும் தெரிகிறது. குறிப்பாக யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலிருந்து போர்த்துக்கேயர் தம் ஆட்சிக்காலத்தில் புலம் பெயர்ந்து தமிழ் நாடு சென்ற ஞானப்பிரகாசரைக் கூறலாம். இவர் சிதம்பரத்தில் தங்கியிருந்து சைவத் தமிழ்ப்பணிகள் பலவற்றை ஆற்றினார் என்பர்.

இக்காலப் பகுதியில் சைவ, இஸ்லாமிய சமயச் சார்பு நூல்களையோ, சமயம் சாராத ஆக்க, அறிவியல் நூல்களையோ காணமுடியவில்லை.

### ஞானப்பள்ளு.

போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் ஈழத்தில் எழுந்த நூல்களுள் குறிப்பிடத்தக்க நூலாகக் கருதப்படுவது ஞானப்பள்ளு என்னும் பள்ளு நூலாகும். இது 1642இல் படைக்கப்பட்ட தென்கிறார் நல்லூர் சுவாமி ஞானப் பிரகாசர். பள்ளுப் பிரபந்த இலக்கியமான இந்நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு நாதரைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு கத்தோலிக்க மதத்தைப் போற்றும் வகையிலும் மக்கள் மத்தியில் பிரசாரப் படுத்தும் குறிக்கோளுடனும் படைக்கப்பட்டுள்ளது. இதில் தேசியக் கருத்துக்கள் எதுவும் பொருந்தப் பெற்றதாகவில்லை. பள்ளு இலக்கிய, இலக்கண மரபுக்கமைய இதில் இடம் பெறும் முக்கிய பாத்திரங்களான மூத்த பள்ளி, பள்ளன் இருவரும் ஜெருசலை நாட்டவராகவும் இளைய பள்ளி உரோமாபுரி நாட்டவராகவும் சித்திரிக்கப்படுகின்றனர். பண்ணைக்காரன் கத்தோலிக்க மத பீடத்தின் அதியுயர் தலைமையகமாக விளங்கும் உரோமாபுரி என்னும் பண்ணையின் உரிமையாளனாகவும் படைக்கப் பட்டுள்ளான்.

பள்ளியர் தம் உரையாடலில் 'உரோமாபுரி நாடெங்கள் நாடே'', 'ஜெருசலைத்திரு நாடெங்கள் நாடே' எனப் போற்றிப் பாடப்படும் உரோமாபுரி, ஜெருசலை இரண்டும் கத்தோலிக்க புனித தலங்கள் என்பது ஈண்டு மனங் கொள்ளத்தக்கது. இதன் மூலம் நூலாசிரியர் கத்தோலிக்க மதத்தைப் போற்றுவதோடு போர்த்துக் கேயர் ஆட்சியினையும் போற்றுபவராகவே தென்படுகிறார்.

ஞானப்பள்ளு நூலினை ஆக்கியோன் யாரென்பது இதுவரை புலப்படவில்லை. கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த ஒருவரே இதனை ஆக்கியுள்ளார் எனலாம். சிந்து, கலிப்பா, விருத்தப்பா, வெண்பா ஆகிய பலவகை யாப்புவகைகளால் ஆக்கப் பெற்றுள்ள இந்நூலில் 257 செய்யுட்கள் உள்ளன. நூலாசிரியர் தமது சமயத்தை ஈழவள நாட்டிலே பரப்பும் முயற்சிகள் பலவற்றை மேற்கொண்ட போர்த்துக்கேய மன்னனைப் போற்றும் வகையில் இந்நூலில் பாடல்கள் பல அமைந்துள்ளமையைக் காணமுடிகிறது.

''பேரான பாராளும் பிடுத்துக்கால் மனுவென்றன் பிறதானம் வீசவே கூவாய் குயிலே' என இந்நூலில் உள்ள ''குயிற்சிந்து'' என்னும் பகுதியில் வரும் தொடர் குறிப்பிடுகின்றது. இதில்வரும் பிடுத்துக்கால் என்பது போர்த்துக்கல் நாட்டையே குறிப்பிடுகின்றது. போர்த்துக்கல் மன்னனை வாழ்த்துவதோடு மட்டுமன்றி இராசப் பிரதிநிதிகளையும் நீடுழி வாழ்கவெனவும் வாழ்த்துகின்றார் நூலாசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நேரான மன்னவர்கள் நேய அதிபதிகள் நீடூழி வாழவே கூவாய் குயிலே" என்னும் கவிதைத்தொடர் இதனை நமக்குணர்த்துகிறது. தமது சமயத்தை ஈழ நாட்டிலே பரப்பும் முயற்சிகளில் முன்னின்றுழைக்கும் போர்த்துக்கேய மன்னனையும் இராசப் பிரதிநிதிகளையும் வாழ்த்தும் வகையிலேயே இப்பாடல் அமைகின்றதே தவிர அம்மன்னனின் தமிழ்ப் பற்றினைப் போற்றுவதாக இதனைக் கொள்ளலாகாது.

போர்த்துக்கேயர் காலக் கல்வி, சமூக, இலக்கியச் சூழல் எத்தகையதாயமைந்திருந்தது என்பதற்கு ஞானப்பள்ளு சிறந்த சான்றாக அமைந்துள்ளது எனலாம். நூலாசிரியரைப் பொறுத்தவரையில் அவர் தமிழிலக்கியங்களிலும் நீதி நூல்களிலும் நல்ல பரிச்சயமுடையவராகவும் புலமைத்திறன் மிக்கவராகவும் தென்படுகின்றார். பள்ளுநூல்களில் பெரிதும் இடம்பெறும் சிருங்காரச் சுவையினை ஞானப்பள்ளில் காணமுடியவில்லை. கிறிஸ்தவ சமயச் சார்புடைய நூலாதலால் ஆசிரியர் இச்சுவையைப் பெரிதும் தவிர்த்துள்ளார் எனலாம். சிறந்த ஓசைநயமும் கவிவளமும் கொண்ட இப்பள்ளுப் பிரபந்தம் இயேசு சபையைச் சேர்ந்த செபஸ்தியான் பொஞ்சகோ சுவாமிகளின் உதவியுடன் பாடப்பட்டது என்பதை இதன் ஆசிரிய வணக்கம் நமக்குப் புலப்படுத்துகிறது.

**"நாதனுத் தமயேசு தோழமைச் சபையதனில்**
**நன்மைகுடி கொண்ட முனிவன்**
**நம்பியசன் னாசிபதி னாலுகற் பனைகள் மிக**
**நழுவாதி யற்றி வருவோன்**
**சேதங்க ளேதங்கள் பேதங்களில்லாத**
**செவ்வஸ்தி யாம் பெருஞ்சீர்ச்**
**செக்கெனுந் தேசிகரி னுதவியாற் பள்ளிசை**
**செப்பத்து ணிந்தே னம்மா."**

செவ்வஸ்தியாம் பெருஞ்சீர்த் தேசிகன் என இப்பாடலிற் குறிப்பிடப்படுபவர் செபஸ்தியான் சுவாமிகளே யாகும் என்றும் இவர் 1644ஆம் ஆண்டு கொழும்பில் இருந்த இயேசு சபையினரின் கலாசாலையிலே தலைவராக விளங்கியவரென்றும்;[1] கலாநிதி எஸ்.சிவலிங்கராசா குறிப்பிட்டுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அறிவற்ற பாமர மக்களுக்குக் கிறிஸ்தவ மதத்தைப் பற்றிய கருத்துக்களைப் புலப்படுத்த வேண்டுமென்னும் குறிக்கோளுடன் படைக்கப்பட்ட இப்பள்ளுப் பிரபந்தத்திலே இடம்பெறும் அறிவுறுத்தல் என்னும் பகுதி ஆழ்ந்து நோக்குதற்குரியதாகும். கிறிஸ்தவ மதத்தைப் போற்றுவதோடல்லாது கிறிஸ்தவமல்லாத ஏனைய மதங்களை மூடமதங்களெனச் சாடும் வகையில் அமைந்த பாடல்களும் இவ் அறிவுறுத்தல் பகுதியில் இடம் பெற்றுள்ளன.

மழை பொழிதல் என்னும் பகுதியின் பின் இடம் பெறும் அறிவுறுத்தல் பாடல் ஒன்றினை நோக்குவோம்.

**"ஈட்டி யீட்டிப் புதைக்கும் தனங்களும்**
**இரப்ப வர்க்கொன்று மீயாம னங்களும்**
**மூட்டி மூட்டி முழுநர குக்கிடு**
**மோச வாழ்க்கையும் முந்துகு ணங்களும்**
**கூட்டை விட்டுயிர் போகின்ற வேளையிற்**
**கூடி நம்முடன் வாராது மாந்தரே**
**போட்டு வித்தொழி லம்பரத் தாதிமுன்**
**போக வேணும் புரியுஞ்ச னங்களே."**

இத்தகைய அறிவுறுத்தற் பாடல்கள் யாவும் பிரசாரத்தன்மை கொண்டனவாகவும் மக்களுக்குப் புத்திபுகட்டும் வகையில் அமைந்தனவாகவுமே விளங்குகின்றன.

சுருங்கக் கூறின் போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் ஈழத்தில் எழுந்த தமிழ் நூல்களிலும், ஈழத்து இலக்கிய வரலாற்றிலும் ஞானப்பள்ளு எனும் பிரபந்தத்திற்குச் சிறப்பானதோர் இடமுண்டெனத் துணிந்து கூறலாம்.

**அர்ச். யாகப்பர் அம்மானை:**

போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் ஈழத்தில் எழுந்த சமயச்சார்பு இலக்கியங்களில் சந்தியோகுமையோர் அம்மானை என அழைக்கப்பெறும் அர்ச். யாகப்பர் அம்மானையும் குறிப்பிடத்தக்கதோர் நூலாகும். இந்நூலைத் தெல்லிப்பழையில் வாழ்ந்த பேதுருப்புலவர் இயற்றியுள்ளார். இந்நூல் கி.பி.1647இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றப்பட்டதென்பதையும், நூல் இயற்றப்பட்டதன் நோக்கத்தையும் நூலில் வரும் பொதுப்பாயிரம் நன்கு புலப்படுத்துகிறது. இயேசு சபைக்குருவான சுவாங் கறுவால் லூயிஸ் என்னும் மதகுருவின் வேண்டுகோளிற்கமையவே இவ்வம்மானை இயற்றப்பட்டுள்ளது. பெருங்காப்பிய இலக்கணங்கள் பல பொருந்திய ஒரு காவியமாக இது காணப்படுகிறது. நூற் பாயிரத்தினை நூலாசிரியரின் மாணவர் ஒருவரேபாடியுள்ளார். இப்பாயிரத்தில் பேதுருப் புலவர் ஆரியர் கோத்திரத்தோன் எனக் குறிப்பிடப்படுகின்றார். பாயிரத்தின் ஒருபகுதிவருமாறு:-

''ஆரியர் கோத்திரத்தோன் அன்புநெறி நீதியுள்ளோன்
சீரியபே துரென்போன் சிந்தைமிகக் கொண்டாடி
நம்புங் கிரணமென நானிலமெங்கும் விளங்குங்
கொம்பாஞ்ய தேயேசுக் கூட்டத்தி லுள்ள குரு
தவசெபங்க ளிற்சிறந்த தன்மநெறி நீதியுள்ள
சுவாங்கறுவால் லூயிசென்னுந் தூயோ னுரைப்படிக்கு
எப்பொருட்குங் கர்த்தாவை எங்கும் நிறைவோனை
தப்பில்லா நீதியுறை தாய்மரியை பெற்றெடுத்து
ஆண்டா யிரமு மறுநூறு மாறேழும்
மீண்டுமோ ரஞ்சும் விளங்கவே சென்றவந்நாள்
கார்த்திகை மார்கழியாங் காணுமிரு மாதமதில்
கீர்த்தியுள்ள செந்தமிழாற் கிளத்தினா ரிக்கதையை
அந்தமுட னிதனை அம்மானைப் பாவனையாய்ச்
செந்தமிழி னாலறியச் செப்பினார் யாவருக்கும்
ஆனதினா லிந்த வரியகதை காரணமாய்
மாநகரோ ரேகேட்டு மகிழ்ச்சியது கொள்வீரே
இக்கதையைப் பாடினது என்னுடைய ஆசிரியன்
தக்கமன தாய்க்கேட்டுத் தற்பரனைப் போற்றிடுவீர்.''

யாழ்ப்பாண மாவட்டத்தில் பச்சிலைப் பள்ளிப்பகுதியில் உள்ள கிளாலி என்னும் இடத்தில் யாகப்பர் என்னும் புனிதரின் பெயரிலமைந்த தேவாலயம் உள்ளது. இத்தேவாலயத்தில் வருடந்தோறும் இடம்பெறும் திருவிழாவின் போது இவ்வம்மானை படிக்கப்படுவது வழக்கமாகும். இந்து ஆலயங்களில் இடம் பெறும் புராணபடனம்: பிள்ளையார் கதை, சித்திரபுத்திரனார் கதை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி வழக்குரை முதலானவை படிக்கப்படுவது போல இவ்வம்மானைப் படிப்பும் நடைபெறுகிறது. இந்நூல் பொதுப்பாயிரம், முடிவுரை நீங்கலாக 53 பகுதிகளைக் கொண்டுள்ளது. நூலின் தொடக்கத்திலும் பிறபகுதியிலும் தேவாலய வரலாறு கூறப்பட்டுள்ளது.

அர்ச். யாகப்பர் அம்மானை ஓசை நயமும் கவிவளமும் கொண்டதாகத் திகழ்கிறது. யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் காலத்தில் நிலவிய தமிழிலக்கியப் பாரம்பரியம் திசைமாறிப் போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவ சமயப் பிரசாரத்தைக் குறிக்கோளாகக் கொண்டு செல்வதை அவதானிக்க முடிகிறது.

**ஞானானந்தபுராணம்.**

தெல்லிப்பழையில் வாழ்ந்த தொம்பிலிப்பு என்பவரால் இயற்றப்பெற்ற ஞானானந்த புராணம் 1104 விருத்தப் பாக்களைக் கொண்டுள்ளது. தொம்தியோகு முதலியின் விருப்பத்திற்கமைய இயற்றப்பெற்ற இப்புராணம் கிறிஸ்தவ மத விளக்கமாகத் திகழ்கிறது. இந்நூல் இயற்றப்பெற்ற காலம் குறித்து உறுதியான விபரம் எதுவும் தெரியவில்லை. சிறந்த காவியங்களுக்குரிய பண்புகளைக் கொண்டமைந்த இந்நூலில் ஆசிரியரின் புலமையாற்றல் நன்கு பளிச்சிடுகிறது. எடுத்துக் காட்டாக ஒரு பாடலை நோக்குவோம்.

**''என்றினைய நிகழ்ந்தவண்ண மருளப்ப**
**னன்னைதன்பா லிசைப்ப வெய்தி**
**பொன்னுடலம் வெயிர் பொடிப்பப் பொருமியுள்ளம்**
**பறையடிப்பப் புலன்வாய் விம்ம**
**நின்றனன்மெய் தள்ளாடி நெடுந்தாரை**
**கண்பனிப்ப நிலத்தில் வீழ்ந்து**
**துன்று மல ரடியிறைஞ்சித் தோன்றல்படுந்**
**துயரமெலாஞ் சொல்ல லுற்றான்."**

போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் அவர்களது சமயப் பிரசாரத்திற்குப் பயன்தரும் வகையிலேயே இலக்கியங்கள் படைக்கப்பட்டன. இக்காலப்பகுதியில் இயற்றப்பெற்ற ஞானப் பள்ளு, அர்ச்.யாகப்பர் அம்மானை, ஞானானந்த புராணம் என்னும் மூன்று நூல்களும் இதற்கு நல்ல சான்றுகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் அக்காலத்துச் சமூக, சமய, இலக்கிய நிலைமைகளை அறிந்து கொள்ள இந்நூல்கள் பெரிதும் பயன்படுகின்றன எனலாம்.

**(இ) போர்த்துக்கேயர் ஆட்சிக்கால ,லக்கியப் பண்புகள்.**

ஆரியச்சக்கரவர்த்திகள் ஆட்சிக் கால இலக்கியப் பண்புகளுக்கும் போர்த்துக்கேயர் ஆட்சிக்கால இலக்கியப் பண்புகளுக்கும் இடையே பாரிய வேறுபாடுகளைக் காணமுடிகிறது. போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத் தமிழ் இலக்கியங்களில் வடமொழிச் சொற்கள் பெரிதும் பயின்றுவருவதைக் காணமுடிகிறது. யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் காலத்தெழுந்த சரசோதிமாலை, செகராச சேகரமாலை, பரராச சேகரம், இரகுவம்சம் முதலியன வடமொழி பெயர்ப்புக்களாக இருந்தபோதிலும் அவை பெரும்பாலும் செந்தமிழ் மரபையொட்டியன வாகவே அமைந்திருந்தன எனலாம். வடமொழிச் சொற்கள் அவற்றில் அரிதாகவே காணப்பட்டன. ஆனால் போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தெழுந்த நூல்களில் வடமொழிச் சொற்கள் பெரிதும் விரவிக் காணப்படுகின்றன.

போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தெழுந்த இலக்கியங்கள் அனைத்தும் கத்தோலிக்க மதம் சார்ந்ததாகவே காணப்படுகின்றன. அவற்றில் வரும் நாட்டு, நகர வருணனைகள் யாவும் ஜெருசலேம், உரோமாபுரி முதலிய கத்தோலிக்க புனித தலங்கள் பற்றியனவாகவே அமைந்துள்ளன. ஈழநாட்டு வருணனைகளோ தேசியக் கருத்துக்களோ அந்நூல்களில் காணப்படவில்லை.

போர்த்துக்கேயர் காலத் தமிழ்நூல்கள் கூறும் பொருள்கள் யாவும் கிறிஸ்தவ போதனைகளும் மேல்நாட்டு மக்கள் வாழ்க்கை முறைகளுமாகவே அமைந்துள்ளன. செந்தமிழ் மரபுக்கு மாறாகப் பேச்சுவழக்குச் சொற்களைப் பயன்படுத்தும் முறையினைப் போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தெழுந்த தமிழ் நூல்களில் காணமுடிகிறது. ``போர்த்துக்கேயர் காலத்தில் தோன்றிய கத்தோலிக்கச் செய்யுள்கள் செந்நெறிமரபைச் சார்ந்தனவாகவும் வாய்மொழி மரபைச் சார்ந்தனவாகவும் இருப்பதை அவதானிக்கலாம்''[2] எனப் பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிட்டுடள்ளமையும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச். யாகப்பர் அம்மானை இனிய ஓசையும் விழுமிய நடையுமுடையதாய்க் காணப்படுகிறது. இது தமிழ் மக்கள் தம் வழிபாட்டுமரபுடன் ஒன்றியிருந்த மரபொன்றினைத் தழுவியே பாடப்பட்டுள்ளதெனலாம். இக்காலத்தெழுந்த நூல்கள் நாடகப் பாங்கு கொண்டனவாகவும் தென்படுகின்றன. பள்ளு, அம்மானை முதலிய இலக்கிய வடிவங்கள் சிலவற்றில் நாடகப் பண்பு காணப்படினும் அவை முற்றாக நாடகங்கள் எனக் கூறுவதற்கில்லை. இந்நூல்களில் நாட்டார் இலக்கியப்பாங்கும் இணைந்திருப்பதைக் காணமுடிகிறது.

இக்காலப்பகுதியில் சைவமதம் சார்ந்த நூல்கள் எதுவும் தோன்றியதாகத் தெரியவில்லை. ஆட்சியாளர் பிறமதங்கள் மீது கொண்டிருந்த கடுமையான அடக்குமுறை இதற்குக் காரணமாகலாம்.

சுருங்கக் கூறின் போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் தோன்றிய நூல்கள் யாவும் கத்தோலிக்க மதம் சார்ந்ததாகவும் மேலைத்தேய மக்களின் வாழ்க்கை முறைகளைப் பெரிதும் போற்றுவனவாகவும், தேசியக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளியாதனவாகவும், வடமொழிச் சொற்களுக்கும் பேச்சு வழக்குச் சொற்களுக்கும் பெரிதும் இடமளிப்பனவாகவும் விளங்கின எனலாம்.

**அடிக்குறிப்புக்கள்.**

1. **சிவலிங்கராசா.சி.** - ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி, தனலக்குமி, புத்தகசாலை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், டிசம்பர், 2001, பக்கம் 67
2. **சிவத்தம்பி.கா.** - புறநானூறு முதல் புதுக்கவிதைவரை, தமிழ்நூல் வெளியீட்டு விநியோக அமையம், கொழும்பு. பக்கம் 28.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல்: 3

# ஒல்லாந்தர் காலம்

## (கி.பி.1658 - 1796)

ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றை ஆராயப்புகுவோர் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் எழுந்த நூல்கள் குறித்து அதிக ஆர்வம் காட்டுதல் இயல்பாகும். தமிழ்ப் பிரதேசங்களில் கல்விப்பணிகள் மட்டுமன்றிச் சமூக, சட்டத்துறைகளில் சீர்திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்ட காலமும் இதுவெனலாம். போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் நிலவிய அடக்குமுறைகள் அகன்று சமய வழிபாட்டுச் சுதந்திரம் சிறிது நெகிழ்ச்சித்தன்மையை அடைந்த காலப்பகுதியும் இதுவேயாகும். முன்னர் என்றுமில்லா வகையில் பல்வேறு பாவகைகளில் பல்வேறு நூல்கள் தோற்றம் பெற்றதும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலேயாகும்.

புராணம், காவியம், தூது, அம்மானை, காதல், பிள்ளைத் தமிழ், அந்தாதி, கோவை, பள்ளு, ஊஞ்சல், பதிகம், துதி, நாடகம், மருத்துவம், சோதிடம், ஆதியாம் பல்வேறு துறை சார்ந்த நூல்கள் இக்காலப்பகுதியில் முகிழ்த்தன. இதன் காரணமாகவே ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் ஒல்லாந்தர் காலம் முக்கியத்துவம் பெற்றுள்ளது எனலாம்.

### (அ) அரசியல் நிலை :-

ஐரோப்பிய தேசத்தவரான போர்த்துக் கேயரிடமிருந்து மற்றொரு ஐரோப்பிய நாட்டவரான ஒல்லாந்தர் இலங்கையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டமை இலங்கையின் அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும். கி.பி. 1638இல் மட்டக்களப்பைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் 1639இல் திருக்கோணமலையையும் 1658இல் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றினர். கண்டி இராச்சியம் தவிர்ந்த இலங்கையின் ஏனைய பகுதிகளைத் தமது ஆளுகைக்குட்படுத்திய ஒல்லாந்தர் 138 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தனர். இவர்களது ஆட்சிக்காலத்தில் நாட்டில் சமாதானம் நிலவியது. கோட்டைகள் கட்டுவதில் வல்லவர்களான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர் மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, ஆனையிறவு போன்ற இடங்களில் பல கோட்டைகளை அமைத்து அரண் செய்தனர். அவற்றை இன்றும் கூட நாம் காணலாம்.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கல்வித்துறையில் பல முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணப்பகுதி மக்களிடையே நீண்ட காலமாக நிலவி வந்த தேச வழமை என்னும் நியாயப் பிரமாணங்களைத் தொகுத்து வெளியிட்டதோடு றோமன் டச்சுச் சட்டத்துடன், இத்தேசவழமையையும் நீதிமன்றங்களில் நடைமுறைப்படுத்தவும் வழிசெய்தனர். இன்றும் இத்தேசவழமை யாழ்ப்பாணத்தில் நீதிபரிபாலனத்துறையில் பேணப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதே போன்று மட்டக்களப்பில் முக்குகச் சட்டத்தையும் நடைமுறைப்படுத்தினர். மட்டக்களப்பு மான்மியம் இதனை உறுதிப்படுத்துகிறது. போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் மறுக்கப்பட்டிருந்த சைவ வழிபாட்டு மரபுகள் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் ஓரளவு தளர்த்தப்பட்டன. இதன்பேறாகச் சைவசமயத்தவர்கள் ஓரளவு சமய சுதந்திரமுடையவர்களாக விளங்கினார்கள் என்பதை இக்காலத்தெழுந்த இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. ''ஒல்லாந்தர் தமது சமயமான புரொடத்தாந்து கிறிஸ்தவத்தை மக்களிடையே பரப்பவிரும்பினரேனும் போர்த்துக்கேயரைப் போல் அட்டூழியங்களைச் செய்து மக்களைத் துன்புறுத்தவில்லை. அவர்கள் யாழ்ப்பாணத்தை ஆண்ட காலத்திலே சைவசமயிகள் ஓரளவு சுதந்திரமாக வாழ்ந்தார்கள் என்பதை அக்காலத்திய தமிழிலக்கியங்களிலிருந்து அறிய முடிகிறது''[1] எனப் பேராசிரியர் ஆ.சதாசிவம் ஒல்லாந்தர் காலம் குறித்துக் குறிப்பிட்டுள்ளமை இங்கு மனங்கொள்ளத்தக்கது.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில், இலங்கையில் போர்த்துக்கேயரால் பரப்பப்பட்ட கத்தோலிக்க மதத்திற்குப் பல நெருக்கடிகள் ஏற்பட்ட போதிலும் கத்தோலிக்க சமயச் சார்பான பல நூல்கள் இக்காலப்பகுதியில் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். நாட்டில் சமாதானம் நிலவியமையால் பல தமிழிலக்கிய நூல்கள் தோற்றம் பெற்றன எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) ஒல்லாந்தர் காலத்தெழுந்த தமிழ் நூல்கள்:

ஒல்லாந்தர் காலத்தில் பல்வேறு வகையான தமிழிலக்கிய நூல்கள் படைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பின்வரும் முறையில் வகுக்கலாம்.

1. சமயம் சார்ந்த நூல்கள் :

சிவராத்திரிபுராணம், பிள்ளையார் கதை, ஏகாதசிப் புராணம், யோசேப்பு புராணம், பிள்ளையார் புராணம், குருநாதசுவாமி கிள்ளை விடுதூது, திருச்செல்வர் காவியம், மறைசை அந்தாதி, கல்வளை அந்தாதி, புலியூர் யமக அந்தாதி, திருச்செல்வர் அம்மானை, வெருகல் சித்திர வேலாயுதர் காதல், வட்டுநகர் பிட்டிவயற் பத்திரகாளியம்மை பதிகம், பத்திர காளியம்மை ஊஞ்சல், இணுவில் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ், பஞ்சவர்ணத்தூது, கஞ்சன் காவியம், வலைவீசு புராணம், இணுவில் சிவகாமியம்மை பதிகம், மூவிராசர் வாசகப்பா, பிள்ளைக்கவி, பச்சாத்தாபப் பதிகம், இரட்சகப் பதிகம், கீர்த்தனத் திரட்டு, காசியாத்திரை விளக்கம் முதலியன.

2. உள்ளூர்ப் பிரபுக்களைப் பெருமைப்படுத்தும் வகையில் அமைந்தவை:-

கரவை வேலன் கோவை, தண்டிகைக் கனகராயன் பள்ளு, மருதப்பக் குறவஞ்சி, சந்திர சேகரக் குறவஞ்சி.

3. வைத்தியம், சோதிடம் சார்ந்த நூல்கள்:-

அமுதாகரம், சந்தான தீபிகை

4. வரலாற்றுத் தொடர்பானவை:-

யாழ்ப்பாண வைபவமாலை

5. நாடகங்கள்: (கூத்துக்கள்)

அலங்காரரூபன், மலைய நந்தினி. அதிரூபவதி, வாளபிமன், அனுவுருத்திரநாடகம்.

சமயம் சார்ந்த நூல்கள்:

ஒல்லாந்தர் காலத்தெழுந்த சமய நூல்கள் யாவும் மக்கள் சமய வாழ்க்கையிலும் கோயில் வழிபாட்டிலும் கொண்டிருந்த நம்பிக்கையைப் பிரதிபலிப்பனவாகவே விளங்கின. அவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தின் தேவையை நிறைவேற்றுவனவாகவே தென்படுகின்றன. ஒல்லாந்தர் காலத்தில் தோன்றிய சமய நூல்களுள் சிவராத்திரி புராணம், ஏகாதசிப்புராணம், பிள்ளையார் கதை, குருநாத சுவாமி கிள்ளை விடு தூது என்பன தனிச்சிறப்பு வாய்ந்தவை. இவற்றைச் சுன்னாகம் வரத பண்டிதர் இயற்றியிருந்தார். இவர் வரத கவிராயர், வரதராச கவிராசர், வரதராச பண்டிதர் எனவும் அழைக்கப்பட்டார்.

வரதபண்டிதர் இயற்றிய சிவராத்திரி புராணம் காப்புச் செய்யுள் ஒன்றினையும், நூற் சிறப்புப் பாயிரச் செய்யுள் இரண்டினையும், கடவுள் வாழ்த்துப் பாக்கள் இருபதினையும், தற்சிறப்புப் பாயிரச் செய்யுள் மூன்றினையும் சிவராத்திரி யுற்பவச்சருக்கம் முதலாகச் சாலி கோத்திரச் சருக்கமீறாக அமையும் ஒன்பது சருக்கங்களில் உள்ள 691 பாடல்களையும் கொண்டுள்ளது. இந்நூலுக்கு அக்காலத்திருந்த தமிழ்ப் பெரும் புலவர்களான நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர், மாதகல் மயில் வாகனப்புலவர் ஆகியோர் சிறப்புப் பாயிரம் வழங்கிச் சிறப்பித்துள்ளனர். சைவர்களுக்குச் சிவராத்திரி போன்று வைஷ்ணவர்களுக்கு ஏகாதசிவிரதம் சிறப்புடையதாகும். இச்சிறப்புக்குரிய விரதம் குறித்தும் அதனை அநுட்டிப்போர் பெறும் பயன்கள் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறுவது ஏகாதசிப் புராணம். இதனையும் வரத பண்டிதரே இயற்றியுள்ளார். இதில் காப்புச் செய்யுள் ஒன்றும் வாழ்த்துப் பாடல்கள் ஐந்தும் அவையடக்கப் பாடல் ஒன்றும், மூன்று சருக்கங்களிலும் உள்ள 258 விருத்தப்பாடல்களும் அடங்கியுள்ளன.

பிள்ளையார் கதையில் ஆனைமுகனின் அவதாரம், அவன் கயமுகாசுரனை அழித்தமை, ஆவணிச் சதுர்த்தி, மார்க்கழிச் சஷ்டி (பிள்ளையார் பெருங்கதை விரதம்) ஆதியாம் விரதங்களின் மகிமை குறித்தும் அவற்றை அநுட்டிக்கும் முறை, அவற்றாற் பெறும் பயன் ஆதியன குறித்தும் கூறப்பட்டுள்ளது.

வரதபண்டிதர் இயற்றிய மற்றொரு நூல் குருநாத சுவாமி கிள்ளைவிடுதூது என்பதாகும். இது காங்கேசன் துறையில் உள்ள கண்ணியவளை என்னுமிடத்தில் எழுந்தருளியுள்ள குருநாத சுவாமி மீது பாடப்பெற்ற தூதுப் பிரபந்தமாகும். குருநாத சுவாமியின் சிறப்பினைச் சித்திரிக்கும் வகையில் இத்தூது நூல் அமைந்துள்ளது. இது காப்புச் செய்யுள் ஒன்றினையும் அடையடக்கப் பாடல் ஒன்றினையும் கலிவெண்பாவாலான 216 கண்ணிகளையும் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் கட்டியெழுப்பப்பட்ட கோயில்கள் போன்று ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலும் பல கோயில்கள் எழுப்பப்பட்டன. இக்கோயில்களில் படித்துப் பயன் சொல்வதற்குப் பிள்ளையார்கதை, பிள்ளையார் புராணம் சிவராத்திரிபுராணம் போன்றன பெரிதும் வேண்டப்பட்டன. ஒல்லாந்தர் காலத்தில் சைவமக்கள் விரதங்கள் அநுட்டிக்கும்போது பாராயணம் செய்யவும் படித்துப் பயன்பெறவும் உதவும் வகையில் இந்நூல்கள் அமைந்திருந்தன.

"ஒல்லாந்தர் காலத்தில் விரத மகிமைகள் கூறும் இலக்கியங்கள் படைத்தவர் என்ற வகையிலே வரதபண்டிதர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவராகக் காணப்படுகின்றார். ஈழத்துப் புராணபடன மரபும் பாராயண மரபும் ஒன்றிணைந்து செல்கின்றதன்மையை இவரின் இலக்கியங்களிற் காணலாம்."[2] எனக் கலாநிதி எஸ். சிவலிங்கராசா குறிப்பிட்டுள்ளமையும் இங்கு மனங் கொள்ளத்தக்கது.

சைவமக்களால் பெரிதும் அநுட்டிக்கப்படும் விரதங்களான பிள்ளையார் ஷஷ்டி (பிள்ளையார் பெருங்கதை விரதம்), சிவராத்திரி விரதம், ஏகாதசி விரதம் போன்றவற்றைத் தேர்ந்தெடுத்து அவ்விரதங்களின் மகிமைகளை விளக்கும் வகையில் வரதபண்டிதர் புராணங்கள் படைத்தமை அவர் மீது சைவமக்கள் பெருமதிப்புக் கொள்ளக் காரணமாயிற்று எனலாம். பிள்ளையார் கதை பாராயண மரபினையும், பிள்ளையார் புராணம் புராணபடன முறையையும் மனங் கொண்டு எழுதப் பட்டவை என்பதை இந்நூல்களின் பொருள் மரபுகள் நன்கு புலப்படுத்துகின்றன. இவற்றைக் கற்பதும் கேட்பதும் பெரும்பயன் நல்க வல்லன என்பதைக் ''கற்றவரும் நோற்றவரும் காதலித்துக் கேட்டவரும் பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு'' என்பன போன்ற நூற்பாயிரச் செய்யுட்கள் தெளிவு படுத்துகின்றன.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் விரத மகிமைகள் கூறும் புராணங்கள் எழுந்தமை போன்று தலங்களின் பெருமை கூறும் சைவ இலக்கியங்கள் பல் படைக்கப்பட்டுள்ளன. அவை அக்காலச் சமூக, சமய நிலைமைகளைப் படம் பிடித்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன. இக்காலப்பகுதியில் வாழ்ந்த புலமை சான்ற புலவர்கள் பலர் தத்தம் ஊரில் உள்ள தலங்களின் சிறப்புக்களைச் சித்திரிக்கும் வகையில் பல்வேறு நூல்களைப் படைத்துள்ளனர். அவற்றுள் கண்ணியவளை குருநாத சுவாமி கிள்ளைவிடுதூது வெருகல் சித்திர வேலாயுதர் காதல், இணுவில் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ், இணுவில் சிவகாமியம்மை துதி, கல்வளையந்தாதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைசையந்தாதி, புலியூரந்தாதி, வட்டுக்கோட்டை பிட்டியம்பதி பத்திரகாளி ஊஞ்சல் என்பன குறிப்பிடத்தக்கனவாகும்.

**ஸ்ரீ சித்திர வேலாயுதர் காதல்:**

ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம் பெற்ற சைவ சமயம் சார்ந்த நூல்களுள் வெருகல் ஸ்ரீ சித்திர வேலாயுதர் காதல் என்னும் நூல் சிறந்த இலக்கியமாகவும் மிளிர்கிறது. வெருகல் பதியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சித்திரவேலாயுதர் குறித்த இந்நூலில் லௌகிக் காதல் வெளிப்படையாகவும் தெய்வீகக்காதல் உட்பொருளாகவும் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. ஜீவப் பிரம்ம ஐக்கியத்தை (ஜீவன் - ஆன்மா, பிரம்மம் - இறைவன், பரமாத்மா) சித்தாந்தக் கோட்பாட்டின்படி நிறுவியுள்ளது. தம்பலகாமத்தைச் சேர்ந்த ஐ. வீரக்கோன் முதலியார் இதனை ஆக்கியவராவார். இவர் புலமை சான்ற பெருந்தகை என்பதை நூலை ஆராய்வோர் நன்குணர்வர்.

இந்நூல் அவையடக்கம், வெருகலம்பதிச்சிறப்பு, சித்திர வேலாயுதர் வீதியுலா, முத்து மோகனப் பெண்காதல் ஆகிய அம்சங்களை அழகாகவும் விரிவாகவும் சித்திரிக்கிறது. காப்புச் செய்யுள் ஒன்றினையும் 421 கண்ணிகளையும் கொண்டுள்ளதாகப் படைக்கப்பட்ட இந்நூலில் கண்டி மன்னனான இராசசிங்கன் பல இடங்களில் புகழப்பட்டுள்ளான். எனவே அவனது ஆட்சிக் காலத்தே இந்நூலாசிரியர் வாழ்ந்துள்ளார் எனத்துணியலாம். தேசத்தின் வன்னிமை பற்றிச் சொல்லும் நூலாசிரியர் தேசத்தின் மீது மேலாண்மை பெற்று விளங்கும் முடி மன்னனைப் பற்றி விரிவாகக் குறிப்பிடுகின்றார். எடுத்துக் காட்டாக

**எண்டிசையு மேத்து மிரவி குலத்துதித்தோன்**
**கண்டி நகராளுங் கவினுலவு இராசசிங்கன்**
**மானமுடன் மிக்க வயனிலமுந் தோப்புகளும்**
**மானியமா வீந்த புகழ் படைத்த பூபாலன்** **(372)**

**மாணிக்கம் வைத்திழைத்த வன்னப் பதக்கமுடன்**
**பூணணிகளீந்து புகழ் படைத்த பூபாலன்** **(373)**

**கண்டி நகராளுங் கனகமுடி ராசசிங்கன்**
**தெண்டனிடும் போதெனது சேதியை நீ சொல்லாதை** **(374)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பாடல் வரிகளைக் குறிப்பிடலாம். இந்நூலில் குறிப்பிடப்படும் கண்டி மன்னன் இராச சிங்கன் கி.பி.1628-1687 வரை கண்டி இராச்சியத்தை ஆண்ட இரண்டாம் இராசசிங்கனாக இருக்கலாமெனப் பேராசிரியர் சி.பத்மநாதன் குறிப்பிட்டுள்ளமையும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

"இராசசிங்கமன்னன் சில தானங்களைக் கோயிலுக்கு வழங்கியிருந்தான். வயல் நிலங்களையும் தோப்புகளையும் மானியமாக அவன் கொடுத்தானென்று இந்நூலிலே கூறப்பெற்றுள்ளது. மேலும் மாணிக்கக் கற்கள் பதித்துச் செய்யப்பட்ட பதக்கத்தையும் வேறு ஆபரணங்களையும் மன்னன் வழங்கினான் என்றும் சொல்லப்படுகிறது."[3] எனப் பேராசிரியர் சி. பத்மநாதன் வெருகல் ஸ்ரீ சித்திர வேலாயுதர் காதல்என்னும் நூலில், "தேசத்துக்கோயில் - மறைந்து போன வரலாற்றம்சங்களை மீட்பதற்கு மூலமான பிரபந்தம்" என்னும் கட்டுரையிற் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றைக் கொண்டு நோக்குமிடத்து வெருகல் ஸ்ரீ சித்திர வேலாயுதர் காதல் என்னும் நூல் 17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தென்றும் நூலாசிரியர் வீரக்கோன் முதலியார் இரண்டாம் இராச சிங்க மன்னன் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவரென்றும் துணியலாம். பேரின்பம், சிற்றின்பம் கலந்த சிறந்ததோர் காவியமாக இந்நூல் மிளிர்கின்றது. நூலாசிரியர் தேசத்து வளங்களையும் பிறகோயில்களையும் வழிபாட்டு நெறிகளையும் ஊர்கள் பலவற்றையும் சிறப்பாகவும் சுருக்கமாகவும் இந்நூலில் வருணித்துள்ளமை அவரது புலமைத் திறனைப் புலப்படுத்துவதாயுள்ளது.

**பறாளை விநாயகர் பள்ளு:**

ஒல்லாந்தர் காலத்து வாழ்ந்த ஈழத்துப் பெரும் புலவரான நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பெற்ற தலம் சார்ந்த நூல் பறாளை விநாயகர் பள்ளு ஆகும். சுழிபுரம் பறாளைப் பதியில் எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற இப் பள்ளுப் பிரபந்தம் ஈழத்தில் எழுந்த சிறந்த பள்ளு நூலாகக் கருதப் படுகிறது. இப்பள்ளு நூலில் வரும் பள்ளியரில் ஒருத்தி ஈழநாட்டவள், மற்றவள் சோழ நாட்டவள். ஈழமண்டலத்துக்கும் சோழ மண்டலத்துக்கு முள்ள தொடர்பினைக் கருத்திற் கொண்டே சின்னத்தம்பிப் புலவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கலாம். ஒல்லாந்தர் காலத்து ஈழத்துக் கவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளத்தைப் பிரதிபலிப்பதாக இந்நூல் விளங்குகின்றதெனலாம். எடுத்துக் காட்டாகச் சில பாடல்களை நோக்குவோம்.

"போற்று மாதுளை மாணிக்க வித்தைப்
பொதிந்த சோதிக் கனிபல தூங்குந்
தாற்று வாழை யிலைசென்று மாகத்
தரணிமே லால வட்டமசைக்குந்
தோற்று மாசினி முட்புறச் செம்பழஞ்
சுட்ட பொன்னின் சுளைபல தூற்று
மேற்று வாளை கமுகிற் குதித்திடு
மீழ மண்டல நாடெங்க ணாடே."

"காடெல்லாங்கரி மான்மதஞ் சேரும்
கடலெல் லாம் வெள் வலம்புரி யூரும்
நாடெல் லாங்கதிர்ச் சாலி தழைக்கும்
நரம்பெல் லாமிசை யேழை யழைக்கும்
வீடெல் லாம்வள்ளைப் பாட்டொலி □னும் - விண்
மீனெல் லாந்தண் டலைத்தலை காணுந்
தோடெல் லாம்பொறி வண்டுபண் பாடிய
சோழமண்டல நாடெங்க ணாடே"

"மஞ்ச ளாவிய மாடங்க டோறும்
மயில்கள் போன்மட வார்கணஞ் சூழ
அஞ்ச ரோருகப் பள்ளியில் வான்சிறை
அன்ன வன்னக் குழாம் விளை யாடுந்
துஞ்சு மேதி சுறாக்களைச் சீறச்
சுறாக்க ளோடிப் பலாக் கனி கீறி
இஞ்சி வேலியின் மஞ்சலிற் போய் விழும்
ஈழ மண்டல நாடெங்க ணாடே."

"மாரி மேகந் தவழ் மலைச் சாரலின்
மந்தி வைத்த மணிப்பத்ம ராகஞ்
சூரியோதயம் போல விளங்கிய
சோழ மண்டல நாடெங்க ணாடே."

"பண்ணிற் றோயப் பொருண் முடிப் புக்கட்டிப்
பாடும் பாவலர்க் கீந்திட வென்றே
எண்ணிப் பொன்முடிப் புக்கட்டி வைத்திடும்
ஈழ மண்டல நாடெங்க ணாடே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறாளை விநாயகரின் பெருமை கூறும் இப்பள்ளு நூல் சிந்து விருத்தம், கலிப்பா ஆகிய பாவகைகளில் அமைந்த 130 பாடல்களைக் கொண்டுள்ளது. ஒல்லாந்தர் காலத்தெழுந்த பள்ளுப் பிரபந்தங்களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகவும் இது மிளிர்கிறது.

**அந்தாதி நூல்கள்:-**

ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த தலம் சார்ந்த சைவ நூல்களில் கல்வளையந்தாதி, மறைசையந்தாதி, புலியூர் அந்தாதி என்பன குறிப்பிடத்தக்க அந்தாதி நூல்களாகும்.

சண்டிலிப்பாயில் உள்ள கல்வளை என்னுமிடத்தில் எழுந்தருளியுள்ள விநாயகர் மீது பாடப்பட்டது கல்வளை அந்தாதியாகும். இதனை நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர் பாடியுள்ளார். இவரே மறைசையந்தாதியையும் பாடியுள்ளார். கட்டளைக் கலித்துறை யாப்பினால் ஆக்கப்பெற்ற கல்வளையந் தாதி நூறு செய்யுட்களையுடையது.

திருமறைக் காட்டுறை வேதாரணியேசுவரர் மீது பாடப்பட்டது மறைசையந்தாதியாகும். இது கட்டளைக் கலித்துறை திரிபந்தாதியாக விளங்குகிறது.

புலியூரந்தாதி சிதம்பரத்தில் உள்ள சிதம்பரேஸ்வரப் பெருமானைப் போற்றிப் பாடப்பட்ட மற்றொரு அந்தாதியாகும். இதனை மயில் வாகனப் புலவர் பாடியுள்ளார். இந்நூலில் கடவுள் வாழ்த்துச் செய்யுள் நீங்கலாக நூறு கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் உள்ளன. இது நூற்றந்தாதியாகவும் யமக அந்தாதியாகவும் திகழ்கிறது.

**பஞ்சவர்ணத்தூது:**

ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த தூதுப் பிரபந்தங்களில் குறிப்பிடத்தக்கது இணுவில் சின்னத்தம்பிப் புலவர் இயற்றிய பஞ்சவர்ணத்தூது ஆகும். 'கதிர்காமசேகர மானா முதலியார்' எனப் பட்டப்பெயர் பெற்ற இவர் ஒல்லாந்தர் ஆட்சிக் கால இறுதியில் வாழ்ந்தவராவார். இணுவில் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ், இணுவைச் சிவகாமியம்மை பதிகம் என்பனவற்றையும் இவர் இயற்றியுள்ளார். நொண்டி நாடகம், கோவலன் நாடகம், அனுவுருத்திர நாடகம் முதலிய வற்றிலும் இவரது செய்யுட்களைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் மக்களால் வழிபாட்டுத் தெய்வமாகப் போற்றப்படும் இளந்தாரி என்னும் கைலாய நாதனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு பாடப் பட்டுள்ள அருமையான இலக்கியம் பஞ்சவர்ணத்தூதாகும். சமயச்சார்புடையதாகவும் வரலாற்றுத் தன்மை கொண்டதாகவும் விளங்கும் இந்நூல் பாரம்பரிய வழிபாட்டு மரபுகளை அடியொற்றிச் செல்லும் வகையில் அமைந்துள்ளது.

இணுவில் சின்னத் தம்பிப் புலவர் இயற்றிய சிவகாமியம்மை பதிகம் பன்னிரு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தால் ஆன பத்துச் செய்யுட்களையுடையது. எடுத்துக் காட்டாக இதில் வரும் ஒரு செய்யுளை நோக்குவோம்.

**"பெற்றவணீ யானுனது பிள்ளையுல கோரறிய**
**அற்றமிலாச் செல்வ மருளிவளர்த் தன்பு தந்தாய்**
**இற்றைவரை யுந்தனியே யான்வருந்த வெங்கொளித்தாய்**
**சிற்றிடையின் னன்னை சிவகாம சுந்தரியே."**

புலமைத்திறன் நன்கு வாய்க்கப் பெற்ற இணுவில் சின்னத் தம்பிப் புலவரின் செய்யுட்டிறனைச் சிவகாமியம்மை பிள்ளைத் தமிழிலும், பஞ்சவர்ணத்தூதிலும் நன்கு காணலாம்.

ஒல்லாந்தர் காலத்தெழுந்த சைவமதம் சார்ந்த நூல்களுள் கூழங்கைத் தம்பிரான் இயற்றிய நல்லைக் கலி வெண்பா, சித்தி விநாயகர் திருவிரட்டை மணிமாலை என்பனவும் வட்டுக்கோட்டை பா.கணபதி ஐயர் பாடிய வண்ணை வைத்திலிங்கக் குறவஞ்சி, வட்டுநகர்ப் பிட்டிவயற் பத்திரகாளியம்மை பதிகம், பத்திரகாளியம்மை ஊஞ்சல் முதலியனவும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த க. முத்துக்குமாரர் பாடிய கஞ்சன் காவியம், வலைவீசு புராணம் என்பனவும் குறிப்பிடத்தக்கவையாகும்.

**கிறிஸ்தவ சமய நூல்கள்:-**

போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் ஈழத்தில் வேரூன்றிய கத்தோலிக்க சமயம் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்ட போதிலும் அதன் வளர்ச்சி குன்றவில்லை. போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் தோற்றம் பெற்ற கத்தோலிக்க இலக்கியங்களிலும் பார்க்க ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலேயே பெருமளவு இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. இவற்றுள் அருளப்ப நாவலர் என அழைக்கப்பட்ட தெல்லிப்பழை பூலோகசிங்க முதலியார் இயற்றிய திருச்செல்வர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியம், கூழங்கைத் தம்பிரான் பாடிய யோசேப்பு புராணம், வயாவிளான் வாசியான பிராஞ்சிசுப்பிள்ளை இயற்றிய மூவிராசர் வாசகப்பா, பிள்ளைக்கவி, தசவாக்கிய விளக்கப்பதிகம், திருவாசகம், கீர்த்தனத் திரட்டு, பச்சாத்தாபப் பதிகம், இரட்சகப் பதிகம் என்பனவும் யாக்கோமே கொன்சல் வேஸ் அடிகளார் இயற்றிய தேவ அருள் வேதபுராணம், சத்திய வேதாகம சங்ஷேபம், சுவிசேஷ விருத்தியுரை, ஞான உணர்ச்சி, வியாகுல பிரசங்கம் முதலியனவும் கூழங்கைத் தம்பிரானிடம் தமிழ் பயின்ற காபிரியேல் பச்சகோ (Gabriel Pacheco) எழுதிய தேவப் பிரசையின் திருக்கதை, தேவமாதா அழுகைக்குரவை, நவதின உற்சவம் போன்றனவும் குறிப்பிடத்தக்க கிறித்தவ நூல்களாகும்.

**திருச்செல்வர்காவியம்:-**

காரைநகரில் பிறந்து தெல்லிப்பழையில் வாழ்ந்த பூலோக சிங்க முதலியார் என்னும் அருளப்ப நாவலரால் இயற்றப் பெற்றது திருச்செல்வர்காவியம். இதனைத் திருச்செல்வராசா காவியம் என்றும் அழைப்பர். தண்டமிழ்ச் சான்றோனாக விளங்கிய பூலோகசிங்க முதலியார் இயற்றிய இந்நூல் சிந்து தேசத்திலே கி.பி.எட்டாம் நூற்றாண்டிலே செங்கோல் செலுத்திய ''அபினேர்'' என்னும் அஞ்ஞான மன்னனுக்கு மெய்ஞ்ஞான மைந்தனாகப் பிறந்து, இளமையிலேயே அற்புதமாய்ச் சத்திய வேதத்திற் சேர்ந்து; ஈற்றிலே வனஞ் சென்று தவஞ் செய்து வீட்டின்பம் அடைந்த திருச்செல்வராயன் சரித்திரத்தைக் கூறுகிறது. அர்ச்சியசிட்ட தமசேனு அருளப்பர் கி.பி.733ஆம் ஆண்டு எழுதிவைத்த இச்சரித்திரத்தைச் சத்திய வேதகுருமார் மொழிபெயர்த்துக் கொடுக்க அதன் அருமையுணர்ந்த அருளப்பநாவலர் அதனைக் காவியமாகப் பாடினார் என்பர்.

இக்காவியம் காப்புச் செய்யுள் ஒன்றினையும் கடவுள் வாழ்த்துப் பாக்கள் ஆறினையும் அவையடக்கச் செய்யுள்கள் பதினொன்றினையும் பாயிரச் செய்யுள்கள் பதினேழினையும். 24 படலங்களில் 1912 பாடல்களையும் பெற்று விளங்குகிறது சொற்சுவை, பொருட்சுவை செறிந்தும் அணியலங்காரம் பொலிந்தும் விளங்கும் இக்காவியம் ஒல்லாந்தர் காலத்தெழுந்த மிகச் சிறந்த காவியம் எனலாம். இதற்கெடுத்துக் காட்டாகப் பின்வரும் இருபாடல்கள் நோக்கத்தக்கன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆடகச் சிலம்பொலி யரவக் கிண்கிணி
பாடகச் சீறடி பரதப் பண்ணுறச்
சூடகக் கரங்களிற் கண்க டோய்தர
நாடகத் தியல் பெற நாறு நாட்டினார்.

(நாட்டுப் படலம் 32)

"தாங்கனிந்து மாதரா ரிரப்ப மந்தி தாழையின்
றேங்கனிக ளைத்திருப்பி வீழ்த்தவந்து சேர்ந்துராய்
மாங்கனிகள் சிந்திவண் கமுகினெற்றி வாழையின்
தீங்கனி யுகுத்திழிந்து சம்பிரத்திற் சிக்குமே."

(நாட்டுப் படலம் 73)

இந்நூலாசிரியர் கம்பராமாயணம், சீவக சிந்தாமணி போன்ற காவியங்களில் மிக்க பரிச்சயமுடையவரென்பதை அவரது பாடல்களிலிருந்து நன்குணரமுடிகிறது. திருத்தக்க தேவர் இயற்றிய சீவக சிந்தாமணியில் வரும் ஆற்றுச் செய்திகளைப் போன்று அருளப்ப நாவலர் தமது காவியத்தில் நாட்டுப் படலத்தில் நன்கடக்கியுள்ளமையைக் காணமுடிகிறது.

வீதி காண் படலம், உபதேசப்படலம், ஞானஸ்நானப் படலம், தர்க்க சாஸ்திரப் படலம், திருவவதாரப் படலம் போன்றனவற்றில் வரும் பாடல்கள் யாவும் இக்காவியம் சிறந்த தமிழிலக்கியமாகக் கருதப்படத்தக்கதென உறுதிப்படுத்துகின்றன. இந்நூலைச் "சன்மார்க்க போதினிப்" பத்திராதிபர் ச.தம்பிமுத்துப் பிள்ளை 1896ஆம் ஆண்டில் அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலையிற் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

**திருச்செல்வர் அம்மானை:**

காவியப் பயிற்சி மிக்கோருக்கெனத் திருச் செல்வர் காவியம் பாடிய அருளப்ப நாவலர் சாதாரண மக்களும் இக்காவியப் பொருளை அறிந்திட வேண்டுமென்னும் ஆவலால் பாடியதே திருச்செல்வர் அம்மானை ஆகும். காவியத்தின் காப்புச் செய்யுளையே கொண்டிலங்கும் இந்நூல் அம்மானை அமைப்பிலும் காவியத்தினையே பின்பற்றுகிறது. திருச்செல்வர் காவியத்தில் வரும் 24படலங்களும் அம்மானையிற் காணப்படுகின்றன. பூலோகசிங்கமுதலியார், பழந் தமிழிலக்கியங்களில் நன்கு பரிச்சயமுடையவரென்பதையும் புலமைத்திறன் வாய்ந்தவர் என்பதையும் அவரது இரு நூல்களையும் நன்கு கற்போர் உணர்ந்து கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யோசேப்பு புராணம்:**

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் எழுந்த கிறித்தவ சமய நூல்களுள் கூழங்கைத்தம்பிரான் எழுதிய யோசேப்பு புராணம் குறிப்பிடத்தக்கதொன்றாகும். சைவ சமய விரத மகிமைகளை விளக்குதற்குச் சைவர்கள் புராண வகையைப் பயன்படுத்தியமை போன்று ஈழத்திலே கிறித்தவர்களும் புராணவகையைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதற்கு யோசேப்பு புராணம், திருவாக்குப்புராணம், ஞானானந்தபுராணம் என்பன எடுத்துக் காட்டாக உள்ளன.

காஞ்சிபுரத்திற் பிறந்த கூழங்கைத் தம்பிரான் (இவரது இயற்பெயர் தெரியவில்லை) யாழ்ப்பாணம் வந்து குடியேறித் தமிழ்ப்பணியாற்றிய பேரறிஞர் ஆவார். இவர் இயற்றிய யோசேப்புப் புராணம் அர்ச்சியேட்டர் யோசேப்புவின் வரலாறு கூறும் நூலாகும். இது 21 படலங்களும் 1023 விருத்தச் செய்யுள்களும் கொண்டதென்பர். இப்புராணம் அச்சேற்றப்பட்டதாகத் தெரியவில்லை. சைமன் காசிச் செட்டியவர்கள் எடுத்துக் காட்டியுள்ள ஆற்றுப் படலத்திலிடம் பெற்றுள்ள ஐந்து பாடல்கள் மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளன. இப்பாடல்களில் ஒன்றில் மெல்லோப் பாதிரியார் உவமையாகக் கூறப்பட்டுள்ளார். அப்பாடல் வருமாறு:-

**"திருவு லாங்கலைப் பிலிப்புமே லோன் குருச் சிந்தை**
**மருவு ஞானநல் லொளியென மின்னிமற் றொன்வாய்ச்**
**சுருதி யாமெனத் தொனித்தின்னோ னுயிர்க்கரு டொலைமாக்**
**கருணை யாமெனப் பொழிந்தது காரிருட் புயலே"**

"பிலிப்பு மேலோன் குரு" என இப்பாடலில் குறிப்பிடப் படுபவர் பிலிப்பு தெமெல்லோ பாதிரியாரே யாவார். இவர் கூழங்கைத்தம் பிரான் காலத்தவரென்றும் பன்மொழிப் புலமை வாய்ந்தவரென்றும் கூறப்படுகிறது. இவருடைய மருதப்பக் குறவஞ்சி என்னும் நூல் இதுவரை கிடைக்கவில்லை. இராசவாசல் முதலியார் மருதப்பிள்ளையின் பேரில் இக்குறவஞ்சி பாடப்பட்டதாக அறிய முடிகிறது.

ஒல்லாந்தர் காலத்தில் சமயக் கருத்துக்களைப் பரப்பவும் பக்தியுணர்வைப் பெருக்கவும் இலக்கியங்களைச் சிறப்பானதோர் ஊடகமாகப் பயன்படுத்தினர். ஈழத்தில் தோன்றிய கிறித்தவ இலக்கியங்கள் பல்வேறு தரத்தில் உள்ள மக்களின் தேவைகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்திற் கொண்டே படைக்கப்பட்டன எனலாம். புலமைப் பின்னணியுடைய எழுத்தறிவு பெற்ற சமூகத்திற்கும் எழுத்தறிவு பெறாத பாமரமக்களுக்கும் பயன்தரும் வகையில் இக்காலக் கிறித்தவ இலக்கியங்கள் படைக்கப்பட்டன. ஒல்லாந்தர் காலத்தில் தோன்றிய இலக்கியங்களில் இந்த இரு நிலைகளையும் நன்கு காணமுடிகிறது.

**2. உள்ளூர்ப் பிரபுக்களைப் பெருமைப்படுத்தும் வகையில் அமைந்தவை.**

ஒல்லாந்தர் காலத்தில் உள்ளூர்ப் பிரபுக்களை மேன்மைப் படுத்தும் வகையில் பல நூல்கள் தோற்றம் பெற்றன. அவற்றுள் கரவை வேலன் கோவை, தண்டிகைக் கனகராயன் பள்ளு, மருதப்பக் குறவஞ்சி, சந்திர சேகரக் குறவஞ்சி என்பன குறிப்பிடத்தக்கனவாகும். இவற்றின் தோற்றம் குறித்துக் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா குறிப்பிடும் கருத்தொன்றினை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுதல் பொருத்தமானதாக அமையலாம்.

“ஒல்லாந்தர் காலத்தில் நிலவுடைமையாளர்களிடையே தமது அதிகாரத்தைச் செலுத்துவதிலும் வரையறை செய்வதிலும் போட்டிகளும் நிலவியுள்ளன. இப்போட்டிகளினாலே தமது இருப்பையும் தொன்மையையும் நிலை நிறுத்த வேண்டிய அரசியற்றேவை ஒன்றும் உருவாகியிருக்கலாம். யாழ்ப்பாண மன்னர்கள் காலத்தில் இருந்து அதிகாரப் பதவி வகித்து வந்த சில குடும்பங்களின் செல்வாக்கு இக்காலப் பகுதியிலே வீழ்ச்சியுறப் புதிதாக உருவான நிலவுடைமையாளர்கள், தமது செல்வாக்கை நிலை நிறுத்த வேண்டித் தம் புகழைப்பாடும் இலக்கியங்களைத் தோற்றுவிக்க ஊக்கமளித்திருக்கலாம்.”4

இக்கருத்து உள்ளூர்ப் பிரபுக்களின் பெருமை கூறும் நூல்களின் தோற்றத்திற்கான காரணங்களைப் புலப்படுத்துகின்றது. உள்ளூர்ப்பிரபுக்கள் தம்புகழ் பாடப் பிரபலம் பெற்று விளங்கிய புலவர்களை அரவணைத்துப் பொருள் பல கொடுத்து இலக்கியங்களை உருவாக்கியிருக்கலாமெனவும் கருதப்படுகிறது. இவ்வகையில் ஒல்லாந்தர் காலத்தில் புகழ்பெற்று விளங்கிய நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர், மாவை சின்னக் குட்டிப் புலவர் ஆகியோரின் ஆக்கங்களைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கரவை வேலன் கோவை:-**

வடமராட்சியைச் சேர்ந்த கரவெட்டி என்னும் ஊரில் பெரும் நிலப் பிரபுவாய் விளங்கிய வேலாயுத முதலி என்னும் வேலாத்தை உடையாரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற கோவைப் பிரபந்தமே கரவை வேலன் கோவையாகும். பிரபுத்துவக் குடும்ப வரலாற்றுச் செய்திகளை விளக்கமாகக் கூறிச் செல்லும் இப்பிரபந்தம் சின்னத்தம்பிப் புலவரின் கவித்துவ ஆற்றல்களையும் நன்கு பிரதிபலித்துக் காட்டுவதாக உள்ளது. தமிழ்ப்புலவர்களையும் தமிழ் இலக்கியங்களையும் நேசிக்கும் பண்பு கொண்டவர் வேலாத்தை உடையாரென்னும் பொருளமைந்த பாடல்கள் பல இந்நூலில் காணப்படுகின்றன. இதன் மூலம் சின்னத்தம்பிப் புலவரை அவர் நன்கு அரவணைத்து ஆதரித்துள்ளாரென்பதை உணர்த்துவதற்கு எடுத்துக் காட்டாக,

**''புலவர் தமிழ் தனையே விரும்புங் கரவையில் வேலன்''**
**''பழங்கவி நாவலர் வெங்கலி தீரப் பைம் பொன்னை அள்ளி வழங்கிய மேகம் கரவையில் வேலன்''**

என்னும் பாடல்வரிகளைக் குறிப்பிடலாம். கரவை வேலன் கோவைப் பிரபந்தம் 425 கட்டளைக் கலித்துறைகளால் ஆக்கப்பெற்றுள்ளது. ஈழத்து இலக்கிய வரலாற்றில் இக்கோவைப் பிரபந்தம் அமைப்பிலும் ஆக்கத்திலும் மாற்றம் கொண்டதாகவே விளங்குகிறது. சின்னத்தம்பிப் புலவரின் புலமைத்திறனையும் ஈழத்துப் புலமை மரபுச் செழுமையையும் எடுத்துக் காட்டும் ஒரு கோவைப் பிரபந்தமாகவே இந்நூல் திகழ்கின்றது.

**தண்டிகைக் கனகராயன் பள்ளு:**

தெல்லிப்பழையைச் சேர்ந்த கனகநாயக முதலியாரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு மாவிட்டபுரம் சின்னக்குட்டிப் புலவரால் பாடப்பெற்ற பள்ளுப் பிரபந்தம் இதுவாகும். ஒல்லாந்தர் ஆட்சிக்கால இறுதிப் பகுதியில் வாழ்ந்தவர் சின்னக்குட்டிப் புலவர். பாட்டுடைத் தலைவனான தண்டிகைக் கனகராய முதலியின் பெருமையைப் பேசும் இப்பள்ளுப் பிரபந்தமே ஈழத்தில் தனிமனிதனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு முதன் முதலில் ஆக்கப்பெற்ற பள்ளு நூலாகும். பள்ளுப் பிரபந்த இலக்கணத்துக்கமைய ஆக்கப்பெற்ற இந்நூல் மூத்தபள்ளி, இளையபள்ளி, பள்ளன், பண்ணைக்காரன் ஆகிய நான்கு பாத்திரங்களைக் கொண்டுள்ளது. மூத்தபள்ளியின் மூலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடகாரைவளமும் இளையபள்ளியின் மூலம் தென் காரைவளமும் சிறப்பாகக் கூறப்படுகின்றது. 153 பாடல்களைக் கொண்ட இப்பள்ளுப் பிரபந்தத்தின் மூலம் கனகராய முதலியின் பெருமைகளை மட்டுமன்றி அக்காலத்தில் தெல்லிப்பழை, மயிலிட்டி, இருபாலை முதலிய இடங்களில் வாழ்ந்த பிரபுக்களின் பெருமைகளையும் நன்கு அறிய முடிகிறது.

இப்பள்ளுப் பிரபந்தத்தின் கவிவளத்துக்குச் சான்றாகப் பின்வரும் வடகாரை, தென்காரை நாட்டுச் சிறப்பினை விளக்கும் பாடல்களை எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

**''வன்ன மாங்கனி வூற்றிய யூற்றின்**
**வருக்கை வாழை பெருக்கிய சேற்றின்**
**கன்ன லென்னவே செந்நெல் வளர்ந்தோங்குந்**
**தென்கா ரைவள நாடெங்கள் நாடே.''**

**''காளை வெருண்டு கறுமி வயல்தொறுங்**
**கலந்த மள்ள ரொலியி னிற்றெறும்**
**வாளை பூகத்தின் பாளையைக் கீறும்**
**வடகா ரைவள நாடெங்கள் நாடே''**

ஒல்லாந்தர் கால இறுதிப்பகுதியில் நிலவிய ஈழத்துக் கவிதைச் சிறப்பினைத் தண்டிகைக் கனகராயன் பள்ளு தெற்றெனப் புலப்படுத்துவதாயுள்ளது.

**3. வைத்தியம், சோதிடம் சார்ந்த நூல்கள்:**

யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் காலத்திருந்தே வைத்தியம், சோதிடம் சார்ந்த நூல்கள் பல ஆக்கப் பெற்றமையை இயல் இரண்டில் விரிவாகக் குறிப்பிட்டோம். இதன் தொடர்ச்சியாக ஒல்லாந்தர் காலத்திலும் வைத்திய, சோதிட நூல்கள் சில தோன்றின. அவற்றில் சுன்னாகம் வரதபண்டிதர் இயற்றிய அமுதாகரம் என்னும் வைத்திய நூலும் அராலி இராமலிங்க முனிவர் ஆக்கிய சந்தான தீபிகை என்னும் சோதிட நூலும் குறிப்பிடத்தக்கனவாகும்.

அமுதாகரம் விசக்கடி முதலானவற்றுக்கு மருந்துரைக்கும் நூலாகவுள்ளது. ஈழத்து மருத்துவ பாரம்பரியத்தை விளக்கி நிற்கும் இந்நூலில் யாழ் - மாவட்டத்தில் நீண்டகாலமாக நிலவி வந்த விசக்கடி வைத்திய முறைகள் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாயிரம் நீங்கலாக 324 செய்யுட்களைக் கொண்டுள்ள அமுதாகரம் நூலைத் திருகோணமலையைச் சேர்ந்த க. தம்பையாபிள்ளை என்பவர் 1892ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்டுள்ளார். தமிழ் இலக்கிய, இலக்கணப் புலமையும் வைத்திய, சோதிட அனுபவமும் மிக்க வரதபண்டிதர் ஆக்கிய அமுதாகரம் ஈழத்து மருத்துவ நூல்களின் வரிசையில் முக்கிய இடம் பெறத்தக்கது எனலாம்.

ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த சோதிட நூல்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது அராலி இராமலிங்க முனிவர் இயற்றிய சந்தான தீபிகையாகும். வடமொழிச் சந்தான தீபிகையின் மொழிபெயர்ப்பான இந்நூல் இல்வாழ்க்கையின் பெரும்பேறாகக் கருதப்படும் சந்தான விருத்தியினை, அதற்கான கிரக நிலைகளை விரிவாக எடுத்துக் கூறும் 122 விருத்தப் பாக்களால் ஆக்கப்பெற்றுள்ளது. கிடைத்தற்கரியதாயுள்ள இந்நூலில் உள்ள எட்டுப் பாடல்களைப் பேராசிரியர் ஆ.சதாசிவம் தொகுத்தளித்த ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் நூலில் காணலாம்.

இந் நூலாசிரியரான இராமலிங்க முனிவர் தமது பதினெட்டாவது வயதில் (16-05-1667) வாக்கிய பஞ்சாங்கத்தை முதன் முதலிற் கணித்து வெளிப்படுத்தினாரெனவும் அறியமுடிகிறது.

**4. வரலாற்றுத் தொடர்பானவை:**

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் ஆக்கப்பெற்ற வரலாற்றுத் தொடர்பான நூலாக யாழ்ப்பாண வைபவ மாலை கருதப்படுகிறது. இதனை ஆக்கியவர் மாதகல் மயில்வாகனப் புலவர் ஆவார். இவரே புலியூரந்தாதி, ஞானாலங்கார ரூப நாடகம், காசியாத்திரைவிளக்கம் ஆகியவற்றையும் எழுதியவராவார். இவர் சுன்னாகம் வரதபண்டிதர், நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர் ஆகியோரது காலத்தவரென வரலாற்றாசிரியர் கூறுவர். 'யாழ்ப்பாண வைபவ மாலை' என்பது யாழ்ப்பாணச் சரித்திரத்தைக் கூறும் வசனநூலாகும். ஒல்லாந்தர் காலத்தில் வரலாற்று ரீதியில் எழுந்த நூலாக இது கருதப்படுகிறது. இந்நூல் கைலாயமாலை, வையாபாடல், பரராச சேகரனுலா, இராசமுறை என்னும் நூல்களை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட தென்பதை நூலின் சிறப்புப் பாயிரச் செய்யுள் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மயில்வாகனப் புலவர் இந்நூலில் யாழ்ப்பாடி வரலாறு வரை வையா பாடலைத் தழுவியும் கூழங்கைச் சக்கரவர்த்தியின் யாழ்ப்பாணக் குடியேற்றம் வரை கைலாய மாலையைத் தழுவியும் யாழ்ப்பாணத்தரசர்களின் வரிசை, பரராசசேகரன் வரலாறு ஆகிய இவைகளை இராசமுறையினையும் பரராசசேகரனுலாவையும் தழுவி எழுதியுள்ளாரென"[5] வண. சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிட்டுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கது. இந்நூலில் சரித்திர முரண்பாடுகள் சில காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நூலின் பாயிரச் செய்யுள்மூலம் இந்நூல் ஒல்லாந்த (உலாந்தேசு) அதிகாரியான மேக்கறூன் என்பவனின் வேண்டுதலின் பேரிலேயே ஆக்கப்பெற்றதென்பதும் புலனாகிறது.

**5. நாடகங்கள்:**

யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர்கள் காலப்பகுதியில் நாடகங்கள் (கூத்துக்கள்) நிகழ்ந்துள்ளன. எனினும் அவை தொடர்பான விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. போர்த்துக் கேயர் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க சமயம் சார்ந்த கூத்துக்கள் பல தோற்றம் பெற்றுள்ளன என்பதை அறியமுடிகிறது. அவை சாதாரண மக்களுக்குச் சமயம் சார்ந்த உண்மைகளை நிகழ்த்திக் காட்டுவனவாக விளங்கின. இதனால் இந்நாடகங்கள் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றன. கத்தோலிக்க மத குருமார்களும் இதற்குப் பேராதரவு நல்கினர்.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் தோற்றம் பெற்ற பள்ளு, குற வஞ்சி போன்ற இலக்கியங்கள் நாடகப் பாங்கினைக் கொண்டிருந்தன. எனினும் அவை அரங்குகளில் நிகழ்த்திக் காட்டப்பட்டதாகத் தெரியவில்லை. ஒல்லாந்தர் காலத்தில் நாடகக்கலை (கூத்துக்கலை) வளர்ச்சிக்கு உர மூட்டியவர்களில் வட்டுக்கோட்டை பா. கணபதி ஐயர், இணுவில் சின்னத்தம்பிப் புலவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கோராவர்.

கணபதி ஐயர் அலங்கார ரூபன் நாடகம், அதிரூபவதி நாடகம், மலையநந்தினி நாடகம், வாளபிமன் நாடகம் ஆதியாம் நாடகங்களைப் படைத்துள்ளார் எனத் தெரியவருகிறது. இதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாளபிமன் நாடகம் ஒன்றே இதுவரை நூல்வடிவில் வெளிவந்துள்ளது. பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் வாளபிமன் நாடகத்தை 1963 ஆம் ஆண்டில் பதிப்பித்துள்ளார். ஏனையவை யாவும் ஏட்டுப் பிரதிகளிலிருந்து பிரதி செய்யப்பட்டனவாகவே காணப்படுகின்றன. அண்ணாவிமார்களால் பேணப்பட்டுவரும் இவையாவும் பதிப்பிக்கப்படின் நாடகக் கலைவளர்ச்சிக்குப் பெரிதும் உதவுமெனத் துணிந்துரைக்கலாம்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மட்டுமன்றி மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, சிலாபம் போன்ற பகுதிகளிலும் சிறந்த நாடகாசிரியர்கள் இக்காலப் பகுதியில் வாழ்ந்துள்ளனர். அவர்களைப் பற்றிய பூரண விவரங்கள் இன்றுவரை கிடைப்பதாயில்லை.

இணுவில் சின்னத்தம்பிப்புலவர் எழுதிய அனுவுருத்திர நாடகம் ஒல்லாந்தர் காலத்தெழுந்த சிறந்த நாடக இலக்கியமாக உள்ளது. மட்டக்களப்புப் பிரதேச கலாமன்றம் 1969ஆம் ஆண்டு இதனை வெளியிட்டுள்ளது. பண்டிதர் வி.சி.கந்தையா இதன் பதிப்பாசிரியராவார். இணுவில் சின்னத்தம்பிப் புலவர் நொண்டி நாடகம், கோவலன் நாடகம் ஆகியவற்றையும் எழுதியுள்ளாரெனத் தெரிகிறது.

பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மன்னார் மாதோட்டப்பகுதியில் வாழ்ந்த லோரெஞ்சுப் புலவர் சிறந்த நாடகாசிரியராகத் திகழ்ந்துள்ளார்" எனப் பேராசிரியர் பொ.பூலோக சிங்கம் குறிப்பிட்டுள்ளார். இவரைப் போன்று மேலும் பல சிறந்த நாடகாசிரியர்கள் இக்காலப் பகுதியில் ஈழத்தில் வாழ்ந்திருக்கலாம்.

புராண, இதிகாசக் கதைகளை மையமாகக் கொண்ட நாடகங்கள் (கூத்துக்கள்) ஒல்லாந்தர் காலப்பகுதியில் பெரிதும் அரங்கேற்றப்பட்டன. அண்ணாவிமார்கள் மூலம் அவை மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றன. அவற்றில் இடம் பெற்றுள்ள பாடல்களை அவதானிக்குமிடத்து இக்காலப்பகுதியில் சிறந்த கவித்துவமிக்கோர் பலர் வாழ்ந்துள்ளனர் என்பதும் சீரிய கவிதைப் பாரம்பரியம் நிலவியதென்பதும் புலனாகிறது.

சுருங்கக் கூறின் ஈழத்துத் தமிழிலக்கியம் பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் செழிப்படைதற்கும் ஆக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்கள் பல தோன்றுதற்கும் வழி காட்டுவதாக ஒல்லாந்தர் கால இலக்கியப் பண்புகள் அமைந்திருந்தன எனலாம்.

## (இ) ஒல்லாந்தர் கால இலக்கியப் பண்புகள்:-

போர்த்துக் கேயர் காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களுடன் ஒல்லாந்தர் கால இலக்கியங்களை ஒப்பீட்டடிப்படையில் நோக்குமிடத்து அவற்றிடையே பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒல்லாந்தர் காலத்தெழுந்த இலக்கியங்களில் ஒரு பகுதியின கத்தோலிக்க சமயம் சார்ந்த இலக்கியங்களாகவே காணப்பட்டன. போர்த்துக்கேயர் காலத்தில் வேரூன்றிய கத்தோலிக்க சமயம் ஒல்லாந்தர் காலத்தில் சிறப்புற வளர்ந்தது. ஆட்சியாளர்களால் பல்வேறு நெருக்கடிகள் தோற்றுவிக்கப்பட்ட போதிலும் கத்தோலிக்க சமயம் சார்ந்த இலக்கியங்கள் பல இக்காலத்திலேயே சிறப்புற வெளியாயின எனலாம்.

குறிப்பாகப் பூலோக சிங்கமுதலியார் (அருளப்ப நாவலர்), கூழங்கைத் தம்பிரான், பிராஞ்சிசுப்பிள்ளை போன்ற புலமை வாய்ந்தோர் கத்தோலிக்க சமயம் சார்ந்த நூல்களை ஒல்லாந்தர் காலத்திலேயே படைத்தனர். இதே வேளை இந்து சமயம் சார்ந்த பல்வேறு நூல்களைப் படைத்தவர்களான வரத பண்டிதர், நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர், இணுவில் சின்னத்தம்பிப் புலவர், மாதகல் மயில்வாகனப் புலவர் போன்ற பெரும்புலவர்கள் ஒல்லாந்தர் காலத்திலேயே வாழ்ந்துள்ளனர். இவர்கள் இயற்றிய இலக்கியங்கள் தமிழ் நாட்டில் எழுந்த இலக்கியங்களைப் போன்று மிக உயர்ந்த தரத்தவை; செந்தமிழில் ஆக்கப்பட்டவை"[6] எனப் பேராசிரியர் ஆ.சதாசிவம் குறிப்பிட்டுள்ளார். ஒல்லாந்தர் கால இலக்கியப் பொருள் சமயப் பொருளாகவே பெரிதும் தோற்றம் பெற்றது.

நாயக்கர் காலத்தில் தமிழகத்திலே தோன்றிய இலக்கியங்களின் பண்பைப் பெரிதும் ஒத்ததாகவே ஈழத்தில் ஒல்லாந்தர் காலத்தில் தோன்றிய இலக்கியங்களும் அமைந்திருந்தன. மக்களின் தேவைக்கு ஏற்பவே அவை தோற்றம் பெற்றன எனலாம். ஒல்லாந்தர் காலத்தில் பலவகையான யாப்பு வகைகளைக் கொண்ட நூல்கள் பல உருவாயின. குறிப்பாக அந்தாதி, தூது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைத் தமிழ், பதிகம், பள்ளு, கோவைப் பிரபந்தங்கள் இக்காலப்பகுதியிலேயே பெரிதும் உருவாயின எனலாம். குறிப்பாக அந்தாதி இலக்கிய வடிவம் ஒல்லாந்தர் காலத்தில் பெரும் செல்வாக்குப் பெற்ற யாப்பு வடிவமாகத் திகழ்ந்துள்ளது. நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர் இயற்றிய கல்வளை அந்தாதி, மறைசை அந்தாதி என்பனவும் மாதகல் மயில்வாகனப் புலவர் இயற்றிய புலியூர் யமக அந்தாதியும் ஈழத்தில் தோற்றம் பெற்ற சிறந்த அந்தாதிகளாகக் கருதப்படுகின்றன. ஈழத்துப் புலவர்கள் அந்தாதி பாடுவதில் வல்லவர்கள் என்பதை இவை உலகுக்கு எடுத்துக் காட்டுவனவாயுள்ளன.

பொதுமக்கள் சார்ந்த இலக்கியங்கள் உருப்பெற்றமையும் ஒல்லாந்தர் கால இலக்கியப் பண்புகளில் குறிப்பிடத்தக்கதாகும். கதிரை மலைப் பள்ளு, ஞானப்பள்ளு என்னும் பொதுமக்கள் சார்ந்த பள்ளு நூல்கள் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலும் போர்த்துக்கேயர் காலத்திலும் தோற்றம் பெற்றன. அவை பொதுமக்களால் பெரிதும் போற்றப்படுவதைக் கண்ட நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவரும் மாவை சின்னக் குட்டிப் புலவரும் முறையே பறாளை விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு என்னும் பெயரிய நூல்களைப் படைத்தனர். கதிரைமலைப்பள்ளு, ஞானப் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு என்பன சமயம் சார்ந்தனவாயிருக்கத் தண்டிகைக் கனகராயன் பள்ளு தனிமனிதரது பெருமையைப் பாடுவதாக அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. இதே போன்று நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர் பாடிய கரவை வேலன் கோவையும் பொதுமக்கள் சார் இலக்கியமாகவே தோற்றம் பெற்றது. இவற்றை நுணுகி ஆராயுமிடத்துச் சமயம் சார்ந்த இலக்கிய வடிவங்கள் பல ஒல்லாந்தர்கால முற்பகுதியில் தோற்றம் பெற்ற போதிலும் பிற்பகுதியில் அந்நிலை மாறிப் பொதுமக்கள் சார் இலக்கியங்கள் உருப்பெறலாயிற்று எனலாம். ஒல்லாந்தர் காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான இலக்கியப் பண்பு மாற்றமாகவே இதனைக் கருதலாம்.

ஈழத்தில் வடமொழியின் செல்வாக்குப் பெரிதும் குறைந்திருந்த காலமாகவும் ஒல்லாந்தர் காலத்தைக் கருதலாம். ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் படைக்கப்பட்ட இலக்கியங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமொழிச் செல்வாக்குப் பெரிதும் காணப்பட்டது. பெரும்பாலான இலக்கியங்கள் வடமொழியில் உள்ள இலக்கியங்களின் மொழிப் பெயர்ப்பாகவும், தழுவல்களாகவுமே காணப்பட்டன. ஒல்லாந்தர் காலத்தில் இந்நிலை பெரிதும் மாற்றம் பெற்றது. இக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் தங்கள் சொந்தப் புலமையாற்றலை, கற்பனை ஆற்றலை வெளிப்படுத்தும் வகையிலேயே இலக்கியங்களைப் படைத்தனர். இப் புலவர்களின் புலமையாற்றல்கள் இக்காலப் பகுதியில் தமிழகத்தில் வாழ்ந்த புலவர்களுக்கு ஈடாகவே விளங்கின. பழைய செந்தமிழ்ச் சொற்கள் சின்னத்தம்பிப் புலவரது பாடல்களில் பரக்கக் காணப்படுகின்றன. இக்காலப் புலவர்களது தனித்துவமான ஆற்றலை இக்காலத்தெழுந்த இலக்கியங்களில் நன்கு காணமுடிகிறது.

''தமிழகத்துப் புலவர்கள் வடமொழி யாதிக்கத்தின் தீமையை உணருமுன் ஈழத்துப் புலவர்கள் உணர்ந்து விட்டார்கள்''[7] எனப் பேராசிரியர் ஆ.சதாசிவம் குறிப்பிட்டுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கது.

ஒல்லாந்தர் கால இலக்கியப் பண்புகளில் குறிப்பிடத்தக்க மற்றதோர் அம்சம் சமயப் பொதுமை பேணப்பட்டமையாகும். கத்தோலிக்க மதம் சார்ந்த யோசேப்புப் புராணம் பாடிய கூழங்கைத் தம்பிரான் சைவசமயம் சார்ந்த சித்தி விநாயகர் திருவிரட்டை மணிமாலை, நல்லைக் கலிவெண்பா ஆதியாம் நூல்களையும் பாடியுள்ளார். எம்மதமும் சம்மதம் என்ற உயரிய நோக்குடன் அவர் விளங்கினாரென்பதை இது எடுத்துக் காட்டுகிறது. இத்தகைய சமயப் பொதுமை பேணும் பண்பே பிற்காலத்தில் சமய வேற்றுமையின்றி இலக்கியங்கள் படைத்திடும் பண்பு வளரக் காலாயிற்று எனலாம்.

ஒல்லாந்தர் காலப் பிற்பகுதியில் வரலாற்று அம்சங்களைப் பேணும் உந்துதல் ஏற்பட்டதை உணரமுடிகிறது. இக்காலப்பகுதியில் வாழ்ந்த புலவர்கள் பலர் படைத்த நூல்களின் பெயர்கள் மட்டுமே கூறப்படுகின்ற போதிலும் அவர்களது செய்யுட்கள் பல பேணப்படாது அழிந்தொழிந்து விட்டன. எனினும் மாதகல் மயில்வாகனப் புலவர், கைலாயமாலை, வையாபாடல், பரராச சேகரன் உலா, இராசமுறை ஆகிய நூல்களையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ண பரம்பரையாக வழங்கி வந்த கதைகளையும் ஆதாரமாகக் கொண்டு யாழ்ப்பாண வைபவமாலை என்னும் வரலாற்று நூலை வசன நடையில் எழுதினார். இந்நூலின் மூலம் ஒல்லாந்தர் காலப் பிற்பகுதியில் நிலவிய ஈழத்து இலக்கியப் போக்கினை ஓரளவு உணர்ந்து கொள்ள முடிகிறது.

**அடிக்குறிப்புக்கள்:-**

1. **சதாசிவம் .ஆ** - ஈழத்துத் தமிழ்க்கவிதைக் களஞ்சியம்; சாகித்திய மண்டலம், கொழும்பு. 1966, பக்கம் 92.

2. **சிவலிங்கராசா .சி** - ஈழத்துத் தமிழிலக்கியச்செல்நெறி, தனலக்குமி புத்தகசாலை வெளியீடு, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், டிசம்பர் 2001.

3. **பத்மநாதன் .சி** - வெருகல் ஸ்ரீ சித்திர வேலாயுதர் காதல்; இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், கொழும்பு. யூன், 2000.

4. **சிவலிங்கராசா.சி** - மு.கு. நூல், பக்கம் 98

5. **ஞானப்பிரகாசர், வண** - யாழ்ப்பாண வைபவ விமர்சனம், அச்சுவேலி ஞானப் பிரகாச யந்திரசாலை,1928. பக்கம் 2.

6. **சதாசிவம் .ஆ** - மு.கு. நூல், பக்கம் 94.

7. **சதாசிவம் .ஆ** - மு.கு.நூல், பக்கம் 94.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல்: 5
## ஆங்கிலேயர் காலம்
## (19ஆம் நூற்றாண்டு)

### (அ) அரசியல் நிலை

ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் ஒல்லாந்தர் காலத்தையடுத்து வரும் காலப்பகுதி ஆங்கிலேயர் ஆட்சிக் காலமாகும். இக்காலப்பகுதி கி.பி.1796 முதல் 1947 இறுதிவரையான 152 ஆண்டுகளைக் கொண்டது. கி.பி.1796இல் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தினர் இலங்கையின் கரையோர மாகாணங்களின் ஆட்சிப் பொறுப்பை ஒல்லாந்தரிடமிருந்து கையேற்றனர். 1802இல் கரையோர மாகாணங்கள் பிரித்தானிய முடிக்குரிய குடியேற்ற நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டது. இதன் மூலம் இலங்கையில் ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பகுதிகள் அனைத்தும் பிரித்தானிய மன்னரின் நேரடி ஆட்சிப்புலமாக மாற்றம் பெற்றது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலங்களில் அவர்களால் கைப்பற்ற முடியாதிருந்த கண்டி இராச்சியம் 1815 இல் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது. பல நூற்றாண்டுகளாகத் தனித்தனி இராச்சியப் பிரிவுகளாக இருந்த இலங்கைப் பிரதேசங்கள் யாவும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே இராச்சியமாக ஆங்கிலேயரால் மாற்றப்பட்டது. இதன் காரணமாக இலங்கை வரலாற்றில் குறிப்பிடத்தக்க வகையில் சமூக, பொருளாதார பண்பாட்டுத் துறைகளில் பல்வேறு மாற்றங்கள் உருவாயின. பிரித்தானியர் இலங்கை மக்களின் கோரிக்கைகளுக்கிணங்க அரசியல் துறையில் படிப்படியாகச் சில சீர்திருத்தங்களைப் புகுத்தினர். 1831 முதல் அரசியற் சீர்திருத்தங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டன. இச்சீர்திருத்தங்களின் பேறாக அரசியல் அதிகாரம் படிப்படியாக இலங்கை மக்களின் கைக்கு வரத்தொடங்கியது. ஈற்றில் 04-02-1948இல் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது; பிரித்தானியர் ஆட்சி முடிவுக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயர் ஆட்சியின் போது நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்கும் வகையில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டது. தேயிலை, இறப்பர், கோப்பிச் செய்கைகள் விருத்தி செய்யப்பட்டன. நாட்டின் பலபகுதிகளிலும் புகையிரதப் பாதைகளும் புதிய வீதிகளும் அமைக்கப்பட்டன. போக்குவரத்து, தபால், தந்தி வசதிகள் பெருகின. கல்வித்துறையில் பல புதிய மாற்றங்கள் உருவாயின. ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. நாட்டின் செம்மைசார் நல்லாட்சிக்குச், சீரிய நிருவாகக் கட்டமைப்புக்குத் தகுந்த உத்தியோகத்தர்கள் தேவைப்பட்டனர்.

இத்தகையோரைப் பெறும் நோக்குடன் நகரங்களில் ஆங்கிலப் பாடசாலைகள் பல ஆரம்பிக்கப்பட்டன. ஆங்கிலக் கல்வி பயின்றோர் பலருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. இதன் பேறாக ஆங்கிலக்கல்வி கற்ற மத்தியதர வகுப்பினர் எனப் புதிய ஒரு வர்க்கத்தினர் தோற்றம் பெற்றனர். மரபுவழிக் கல்விமுறை மாற்றம் பெற்றது; நிறுவனக் கல்விமுறை தோற்றம் பெற்றுப் பெரிதும் வளர்ந்தது. இக்காலப்பகுதியில் மேலை நாடுகளிலிருந்து கிறித்தவ மதக்குழுக்கள் பல இங்கு வந்து மதப் பிரசாரங்களில் ஈடுபட்டன. இப்பிரசாரத்தின் பேறாகவும் பொருளாதார வளத்தை விருத்தி செய்யும் நோக்குடனும், அரசபதவிகள், சலுகைகள் பெறும் நோக்குடனும் ஆட்சியாளரின் தூண்டுதலின்றியே மக்கள் சிலர் கிறித்தவ மதத்தைத் தழுவிக் கொண்டனர். இதனால் கல்வி, பண்பாட்டுத் துறைகளில் நவீன மாற்றங்கள் புகுந்தன. ஆங்கிலக் கல்வி கற்றோர் மேலை நாடுகளில் உள்ள நவீன இலக்கிய ஆக்கங்களை அறிந்து கொள்ளவும் அத்தகைய ஆக்கங்களைப் படைக்கவும் ஆர்வம் கொண்டனர். இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சியினை நோக்க வேண்டியுள்ளது.

## (ஆ) 19ஆம் நூற்றாண்டில் ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சி

ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டு தனிச்சிறப்புக்குரியது. இக்காலப்பகுதியில் முன்னர் என்றுமில்லாவகையில் தமிழ் மொழியில் இலக்கியங்கள் பல தோற்றம் பெற்றன. தமிழ்ப்புலவர்கள் பலர் சிறந்த செய்யுட்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனைந்தனர். அவை பெரும்பாலும் சமயம் சார்ந்தனவாகவே விளங்கின. பலதுறைகளிலும் தனித்துவத்துடன் செயற்பட்ட புலவர்கள் பலர் இக்காலப் பகுதியில் வாழ்ந்தனர். 19ஆம் நூற்றாண்டின் ஈழத்து இலக்கிய முயற்சிகளின் முக்கியத்துவம் குறித்துக் கலாநிதி பொ.பூலோகசிங்கம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றிலே முன்னைய காலப்பிரிவுகளிலும் குறிப்பிடத்தக்கதாகவும் சிறந்ததாகவும் மிளிர்வது பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆகும். இந்நூற்றாண்டிலே தமிழ் இலக்கியம் புதிய பல சக்திகளின் தாக்கங்களினாற் பாதிக்கப்பட்டு வளர்ச்சியடைந்தது.[1]"

"புதிய பல சக்திகள்" எனக் கலாநிதி பூலோக சிங்கம் குறிப்பிட்டுள்ளமை இக்காலப்பகுதியில் இடம்பெற்ற மிஷனரிமார்களின் வருகை, ஆங்கிலக் கல்விப் பரவலாக்கம், அச்சியந்திரங்களின் பயன்பாடு, சமயப்பிரசார முயற்சிகள் பத்திரிகைகளின் தோற்றம் ஆதியனவற்றைக் குறிப்பிடுவதாகக் கருதலாம். குறிப்பாக ஆங்கிலக் கல்விப் பரம்பலும் அச்சுயந்திரப் பயன்பாடும் இக்கால இலக்கியச் செல்நெறியைப் பாதித்த அடிப்படைக் காரணிகளாக விளங்குகின்றன.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களில் கல்வித்துறையில் ஓரளவு மாற்றங்கள் இடம்பெற்றன எனினும் கல்வியானது சகலருக்கும் உரியது என்ற உணர்வு ஏற்படுத்தப்படவில்லை. ஒல்லாந்தர் காலப் பகுதியில் நிறுவப்பட்ட கோயிற்பற்றுப் பாடசாலைகள், ஒல்லாந்தர் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கல்வி, நடவடிக்கைகள் எனலாம். இதன் மூலம் கல்வியை நிறுவன மயப்படுத்த ஒல்லாந்தர் முயன்றனர் என்பதை உணர முடிகிறது. எனினும் இம்முயற்சியும் சமயஞ் சார்ந்த நடவடிக்கையாகவே விளங்கியது.

அமெரிக்க மிஷனரிகளின் வருகை யாழ்ப்பாணக் கல்வி நிலையில் பாரிய மாற்றங்களைத் தோற்றுவித்தது. மதம் பரப்புதலையே நோக்கமாகக் கொண்ட மிஷனரிகள் கல்விக் கூடாகவே அதனைச் செயற்படுத்த முனைந்தனர். மாணவர்களின் திறமையை நன்கு அவதானித்துக் கல்வியை விருத்தி செய்யவும் தமது சமயத்தைப் பரப்பவும் முற்பட்டனர். அமெரிக்க மிஷனரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி மெதடிஸ்த, அக்கிலிக்கன் திருச்சபைகளைச் சார்ந்தோரும் இலங்கையில் கல்விவளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றினர். இவர்கள் முதலில் ஆரம்பப் பாடசாலைகளை நிறுவியதோடு, பின்னர் உயர்தர கல்லூரிகளையும் நிறுவினர். இதன்மூலம் ஆங்கிலக் கல்விப் போதனை பரவலாயிற்று. அதே வேளையில் இலக்கிய, இலக்கண, அறிவியல் சார்ந்த நூல்களையும் மிஷனரிகள் கற்பித்தனர். மிஷனரிமாரின் வருகைக்கு முன்னர் மரபுவழிக் கல்வியை நன்கு பெற்றிருந்தோர் பின்னர் நிறுவன வழிவந்த மேலை நாட்டினரது கல்வியையும் நன்கு பெறும் வாய்ப்பினைப் பெற்றனர். மேலைப் புலக் கல்வியை நன்கு கற்றோர் அதற்கேற்பத் தமிழ்க் கல்வி கலை, இலக்கியச் செயற்பாடுகளில் புதிய மாற்றங்களை உருவாக்க வேண்டுமென்னும் உணர்வு பெற்றனர்.

தமிழ் இலக்கியம், சமயம், பண்பாடு சார்ந்த துறைகளில் தனித்துவத்தைப் பேண வேண்டுமென இவர்கள் முயன்றனர். மிஷனரிமார்களின் செயற்பாடுகளே இதற்கும் காரணமாக அமைந்தது. ஆங்கிலமொழியில் புலமைபெற்ற தமிழர், அம்மொழியில் உள்ள நாவல், சிறுகதை, கட்டுரை, நாடகம், அகராதி போன்றவற்றைத் தமிழிலும் படைத்திட விரும்பினர்.

19ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் தமிழ் இலக்கிய நூல்கள் பல வெளிவருவதற்கு உந்து சக்தியாக அமைந்தது அச்சுயந்திரப் பயன்பாடென்றால் அது மிகையல்ல. ஒல்லாந்தர் ஆட்சிக்காலப் பகுதியிலேயே அச்சுயந்திரப் பயன்பாடு தொடங்கிவிட்டதெனினும் அவை மிஷனரிமாரினதும் மேலைநாட்டு நிறுவனங்களினதும் ஏகபோக உரிமையாகவே இருந்தன. கிறிஸ்தவ சமயப் பிரசாரத்திற்குப் பயன்படும் வகையிலேயே அவை பயன்படுத்தப்பட்டன. ஆனால் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மிஷனரிமார்களுக்கு மட்டும் ஏகபோக உரிமையாக இருந்த அச்சுயந்திரப் பயன்பாட்டுமுறை மாற்றம் பெற்றது. சுதேசிகளும் அச்சு யந்திரசாலைகளை உருவாக்க அனுமதி வழங்கப்பட்டது. இதன்பேறாகச் சுதேசிகளால், அச்சு இயந்திரசாலைகள் பல நிறுவப்பட்டன. அச்சுக் கலையின் பயன்பாடும் விருத்தியடைந்தது. ஏடுகளில் உறங்கிய தமிழ்மொழி கடதாசிகளில் பவனிவரத் தொடங்கியது. துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகைகள், இலக்கண,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய, சமய நூல்கள் பல மக்கள் கைக்குக் கிடைக்கும் வாய்ப்பேற்பட்டது. தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு இது பெரிதும் உதவியது.

நல்லூர் தவத்திரு ஆறுமுக நாவலர் அவர்கள் 1849ஆம் ஆண்டு நல்லூரில் நிறுவிய வித்தியாநு பாலன யந்திரசாலை வரலாற்று முக்கியத்துவம் பெற்றது எனலாம். இவ்வச்சகத்திலிருந்தே தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம், சைவசமயம் சார்ந்த பல்வேறு நூல்களும், கண்டனப் பிரசுரங்களும் வெளியாயின. இதன் மூலம் நாவலரவர்கள் பெரும் புரட்சியொன்றையே உருவாக்கினார் எனலாம். கிறித்தவ மதத்தவரால் சைவசமயத்துக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட பிரசாரங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் பல்வேறு துண்டுப் பிரசுரங்களும் கண்டனங்களும் இவ்வச்சகத்திலிருந்து வெளியாயின. இவை மட்டுமன்றி இதுவரைகாலமும் ஏடுகளில் கிடந்த இலக்கிய, இலக்கண, புராண நூல்கள், நிகண்டுகள், பாடநூல்கள் பலவும் அச்சியந்திரப் பயன்பாட்டினால் நூல் வடிவம் பெற்றன. நாவலர் அவர்கள் நிறுவிய அச்சகத்தைத் தொடர்ந்து வல்வையிற் பாரதி நிலைய முத்திராட்சரசாலை, அச்சுவேலியில் ஞானப்பிரகாசயந்திரசாலை, வயாவிளானில் ஜய ஸ்ரீ சாரதாபீடேந்திரசாலை, கொக்குவிலில் சோதிடப் பிரகாசயந்திரசாலை, யாழ்ப்பாணத்தில் சைவப் பிரகாச யந்திரசாலை முதலிய பல அச்சகங்கள் தோன்றின. இவற்றின் மூலம் பல்வேறு நூல்கள் வெளிவரலாயின.

19ஆம் நூற்றாண்டில் ஈழத்தவர்கள் கலை இலக்கியத் துறைகளில் சாதனைகள் நிலைநாட்டுவதற்கு அச்சியந்திரப் பாவனையே அடித்தளமாக அமைந்தது என்றாலது மிகையல்ல.

19ஆம் நூற்றாண்டில் கல்வித்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகப் பாடசாலைகளில் கற்றல், கற்பித்தற் செயற்பாடுகளுக்குப் பயன்படும் வகையில் பாடநூல்கள் பல வெளியாயின. பாடசாலைகளுக்கெனப் பாடத்திட்டங்களை வகுத்துச் செயற்பட்ட மிஷனரிமார் பாடசாலை மாணவர்களுக்கான பாடநூல்களையும் அச்சிட்டு வெளியிட்டனர். அவர்களிடமிருந்த அச்சு யந்திர வசதிகள் இப் பணிக்குப் பெரிதும் உதவின. வேதப் பொழிப்பு, வேத வினாவிடை, விவிலியத்தின் சில பகுதிகள் ஆகியவற்றைத் தமிழிலே அச்சிட்டுப் பாடநூல்களாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தினர். அதே வேளையில் பாலபோதம் என்னும் தமிழ் நூல் வரிசையையும் ஆக்கி வெளியிட்டனர். பின்னாளிற் ஆறுமுக நாவலர் பாலபாடம் என்னும் நூல்வரிசையை வெளியிடுதற்குப் பாலபோதம் வழிகாட்டியாக அமைந்தது எனலாம். இது குறித்துப் பேராசிரியர் கா.இந்திரபாலா பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை கவனத்திற் கொள்ளத்தக்கது.

"1835 ஆம் ஆண்டு மிஷனரிமார் யாழ்ப்பாணப் பாடநூற் சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்திப் புவியியல் போன்ற புதிய துறைகளில் நூல்கள் வெளிவர உதவி புரிந்தனர். அவர்களுடைய பிரசுரங்களிலே தலைசிறந்தது பாலபோதம் என்றழைக்கப்பட்ட ஒன்றிலிருந்து ஐந்து வரையிலான தமிழ்ப் பாடநூல் வரிசையாகும். இந்த நூல்வரிசையே ஆறுமுக நாவலரின் பாலபாடம் என்ற பாடநூல் வரிசைக்கு வழிகாட்டியாக இருந்தது. இதுவே தமிழில் எழுந்த நவீனப் பாடநூல் வரிசையாகும்.[2]"

நாவலரது கல்விப்பணிகளில் அவரது பாடநூல் வெளியீடுகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. சிறுவர்களுக்குப் பயன்படும் வகையில் பால பாடங்களை ஆக்கியதோடு மாணவர்களின் மொழியறிவு விருத்திக்காக இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை போன்றவற்றையும் எழுதி வெளியிட்டார். சைவவினாவிடை, நித்திய கருமவிதி, பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் போன்றவற்றைச் சைவ சமயிகளுக்காக வெளியிட்டார். சைவசமயிகள் இவற்றைப் பெரிதும் வரவேற்றனர். நாவலரது நூல் வெளியீட்டுப் பணி இவற்றோடு நின்றுவிடவில்லை. அரிய தமிழ் நூல்கள் பலவற்றைப் பதிப்பித்து வெளியிடுவதிலும் ஈடுபட்டார். இதன் பொருட்டுச் சென்னை மாநகரிலும் அச்சுயந்திரசாலை ஒன்றை நிறுவினார். நாவலரது நூற்பதிப்புப் பணி விரிவடைந்தது. தமிழ் அறிஞர் பலரும் அன்று மட்டுமன்று இன்றும் நாவலரது நூற் பதிப்புக்களே செம்பதிப்புக்கள் என நாடித் தேடி வாங்குவதைக் காணலாம்.

19ஆம் நூற்றாண்டில் உருவான நவீன கல்விப்போக்கின் மற்றொரு அம்சம் அறிவியல் சார்ந்த பாடநூல்களின் தோற்றமாகும். அளவையியல், கணிதம், புவியியல் தொடர்பான பல்வேறு நூல்கள் இக்காலப் பகுதியில் வெளியாயின. இவற்றைச் சுயமாக ஆக்கியும் தொகுத்தும் தழுவியும் பல அறிஞர்கள் படைத்தனர். மிஷனரிகளின் பங்களிப்பு இது விடயத்தில் பெரிதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியது. அமெரிக்க மிஷனரிகள் பாலபோதம் என்ற தமிழ்ப் பாடநூல்களை வெளியிட்டமை போல்று பால கணிதம் என்னும் நூலையும் வெளியிட்டனர். இதனைத் தொடர்ந்து வில்லியம் நெவின்ஸ் என்பவர் நியாய இலக்கணம் என்ற நூலையும் கறோல் விசுவநாதபிள்ளை வீச கணிதம் என்ற நூலையும் வெளியிட்டார். ஜே.ஆர். ஆர்ணல்ட், சுவாம்பிள்ளை, ஆறுமுக நாவலர் என்போர் முறையே வானசாத்திரம், கணக்கதிகாரம், இலங்கைப் பூமிசாத்திரம் போன்றவற்றை வெளியிட்டனர். இதே வேளையில் ஈழத்துக்குப் பெருமை சேர்க்கும் வகையில் முதன் முதலாகத் தமிழ் மொழியில் விஞ்ஞான நூல்களை வெளியிட்ட பெருமையும் அமெரிக்க மிஷனரிகளையே சாரும்.

மானிப்பாயிலே மருத்துவப் பணியை மேற்கொண்டிருந்த டாக்டர் கிறீனும் அவரைச் சார்ந்த குழுவினரும் மருத்துவ நூல்கள் பலவற்றை ஆக்கினர். இரணவைத்தியம் (1867), மனுஷ அங்காதிபாதம் (1872) வைத்தியாகரம் (1872), மனுஷ சுகரணம் (1876) 'கெமிஸ்தம்' (1875) இந்து பதார்த்த சாரம் (1884) முதலியவை இக்காலத்தெழுந்த மருத்துவத்துறை சார்ந்த நூல்களாகும். இவர்களின் இத் தலையாய பணிகுறித்துப் பேராசிரியர் க. கைலாசபதி பின்வருமாறு கூறியுள்ளார்.

"இலங்கையைப் பொறுத்தமட்டில் இருதுறைகள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவையாய் உள்ளன. விஞ்ஞானத்துறையில் சென்ற நூற்றாண்டின் (19ஆம்.நூ.ஆ) பிற்பகுதியில், இன்று கூடப் பெருமைப் படத்தக்க சில நூல்களை டாக்டர் கிறீனும் அவரைச் சார்ந்தோரும் சுயமாக எழுதியும் மொழி பெயர்த்தும் ஆக்கினர். 1850 ஆம் ஆண்டளவில் வைத்தியர் கிறீன் விஞ்ஞானத்தை அதுவும் சிக்கல் நிறைந்த வைத்தியவியலை மாணவருக்குத் தமிழில் போதிக்கமுற்பட்டார்.[3]"

டாக்டர் கிறீனின் இப்பணி ஈழத்து அறிவியல் வளர்ச்சித் துறையினை ஆய்வு செய்வோருக்கு அடித்தளமாக அமையும் என்பது உறுதி. 19ஆம் நூற்றாண்டிலே ஆரம்பித்த பாடநூற் பரம்பலானது 20ஆம் நூற்றாண்டில் பாரிய வளர்ச்சி கண்டது. டாக்டர் கிறீனைத் தொடர்ந்து சுப்பிரமணியபிள்ளையின் பதார்த்த விஞ்ஞானம், பால வைத்தியம், பிரசவ வைத்தியம் ஆதியாம் நூல்களும் நாகேசஐயரின் அமுத நுணுக்கம் என்னும் விஷ வைத்திய நூலும் வெளியாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (i) உரைநடை வளர்ச்சி:-

ஆறுமுக நாவலர் தமது நூல்களை வசன நடையிலேயே பெரிதும் எழுதினார். 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சில உரைநடை நூல்கள் வெளியாயிருந்த போதிலும் நாவலரது காலத்திலேயே தமிழ் உரைநடை பெரிதும் வளர்ச்சி பெற்றது எனலாம். தமிழ் உரை நடை வளர்ச்சிக்கு வழிகோலிய பெருமை நாவலரையே சாரும். இதன் காரணமாகவே தமிழ் கூறு நல்லுலகு நாவலரை 'வசனநடை கைவந்த வல்லாளர்' எனவும், 'தமிழ் உரைநடையின் தந்தை' எனவும் போற்றியது. நாவலரின் இவ்வரும்பணியை நவாலியூர் க.சோமசுந்தரப்புலவர்;

"அன்னநடை பிடியினடை அழகுநடை
அல்லவென அகற்றி யந்நாட்
பன்னுமுது புலவரிடஞ் செய்யுணடை
பயின்ற தமிழ்ப் பாவை யாட்கு
வன்னநடை வழங்குநடை வசனநடை
யெனப் பயிற்றி வைத்த ஆசான்
மன்னுமருள் நாவலன்றன் னழியாநல்
லொழுக்கநடை வாழி வாழி."- என வாழ்த்திப் போற்றுகின்றார்.

"செய்யுள் நடையிலே முழுகித் திளைத்துக் கொண்டிருந்த தமிழ் மகளைப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஆறுமுக நாவலர் கண்டு, 'ஓ, தமிழ் மகளே, இனி வழங்கும் நடை வசனநடை; அதுதான் உனக்கு ஏற்ற வன்ன நடை' என்று புத்திமதி கூறித் தமது நல்லொழுக்க நடைபோன்ற ஆற்றொழுக்கு நடையை அந்தத் தமிழ் மகளுக்கு நன்கு பயிற்றி வைத்தார். அவள் பயின்ற வசன நடைக்கு ஆசான் அவர்[4]" எனப் புலவர் கூறுவதாக இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் கூறியுள்ளமை நாவலர் தம் உரைநடைத்திறனுக்கு நற்சான்றாக அமைகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன்னரே, மாதகல் மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை போன்ற உரைநடை நூல்கள் சில தோற்றம் பெற்றிருந்த போதிலும் நாவலருக்குப் பின்னரே தமிழ் உரைநடை வளம் பெற்றமையைக் காணமுடிகிறது. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரையுஞ் செய்யுள் நடையே உவந்தது எனக் கொண்டிருந்த நிலையை மாற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனநடையே உவந்தது; அதுவே அனைவர்க்கும் ஏற்றது எனப் புதுவழி காட்டிய பெருமை ஆறுமுக நாவலரையே சாரும். அவரது வழிகாட்டுதலின் பேறாகவே ஈழத்திலும் தமிழகத்திலும் வசனநடை முக்கியத்துவம் பெற்றதெனலாம்.

19ஆம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை வளர்ச்சியை நோக்குமிடத்து நாவலருக்குப்பின் சி.வை.தாமோதரம்பிள்ளை, கறோல் விசுவநாதபிள்ளை, சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை. ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை முதலானோர் தமிழ் உரைநடையின் வளர்ச்சிக்கும் வலுவுக்கும் பெருந் தொண்டாற்றினர். தமிழ் உரைநடையிலே பொருட் பொருத்தத்திற்கேற்பக் குறியீடுகளை முதன் முதலாகப் பயன்படுத்திய பெருமையும் நாவலரையே சாரும். நாவலரைத் தொடர்ந்து அவர் வழிநின்று கல்விப் பணியாற்றியோர் மொழி, இலக்கிய இலக்கணத்துறை சார்ந்த பல பாடநூல்களை வெளியிட்டுள்ளனர். ''இவ்வகையில் சவுந்தர நாயகம் பிள்ளையின் நன்னூற் சுருக்கம் (1862), நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளையின் தமிழ் வியாகரணம் (1886) தாவீது யேசேப்பின் இலக்கணத் தெளிவு (1893), குமாரசுவாமிப் புலவரின் இலக்கணச் சந்திரிகை (1897) முதலியவை குறிப்பிடக்கூடியன[5]'' எனக் கலாநிதி சி.சிவலிங்கராசா குறிப்பிட்டுள்ளமையும் இங்கு கருத்திற் கொள்ளத்தக்கது.

## (ii) கவிதைத்துறை:

பத்தொன்பதாம் நூற்றாண்டில் முன்னர் என்றுமில்லா வகையில் ஈழத்தில் தமிழ்க் கவிதைத்துறை எழுச்சி பெற்றிலங்கியது. முன்னைய காலங்களில் இலக்கியப் பொருளாக விளங்கிய சமயமே பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் முக்கிய இலக்கியப் பொருளாக விளங்கியது. பல்வேறு யாப்பு முறைகளில் கவிதைகள் பல தோற்றம் பெற்றன. புராணம், தூது, அம்மானை பிள்ளைத்தமிழ், நான்மணிமாலை, மும்மணிக்கோவை, கலம்பகம், வெண்பா, அகவல், மான்மியம், சதகம், பதிகம், மடல், பள்ளு, குறவஞ்சி, ஊஞ்சல் முதலான இலக்கிய வடிவங்கள் பல தோற்றம் பெற்றன. மரபு இலக்கிய வகைப்பட்டனவாகவே இவ்விலக்கிய வடிவங்கள் தோன்றின. இந்து, கிறித்தவ, இஸ்லாமிய மதம் சார்ந்தனவாகவே இவை பெரிதும் அமைந்துள்ளன. நல்லை நகர் ஆறுமுக நாவலர் காட்டிய வழியில் அவரால் தோற்றுவிக்கப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றபுலவர் பரம்பரையினர் செந்தமிழ் மரபு தவறாவகையில் அரிய பல கவிதைகளைச், சமயம் சார்ந்த வகையில் படைத்தனர். கிறித்தவர்கள் இக்காலப்பகுதியில் பழைய சமயங்களை எதிர்க்க முற்பட்டமையால் சமயம் சார்ந்த பிரசுரங்கள் பெருகின. நாவலரைத் தொடர்ந்து சங்கரபண்டிதர், சபாபதி நாவலர், காசிவாசி செந்தி நாதையர் முதலியோர் சைவத்தைப் பலவழிகளிலும் பேண முற்பட்டனர் சமயக் கருத்துக்களை விளக்கும் நூல்கள், தலசம்பந்தமான நூல்கள் பல உருவாயின. தத்தமது ஊரில் உள்ள தலங்களின் பெருமையை நிலை நாட்டவேண்டுமென விரும்பிய புலமை படைத்தோர் தலசம்பந்தமான நூல்களை ஆக்குவதில் ஆர்வம் காட்டினர். இதன்மூலம் தமிழ்ப் புலமை மரபு விரிவு பெற்றது. தமிழ் நாடு, மலாயா, சிங்கப்பூர் முதலாம் நாடுகளில் உள்ள தலங்கள் மீதும் பிரபந்தங்கள் பாடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. தமிழ்ப் புலமை சான்றோர் பலர் கவிதையமைப்பிலும் பல உத்திகளைக் கையாண்டனர். சிலேடை, இயமகம், திரிபு, மடக்கு, சித்திரக் கவி முதலானவற்றைத் தமது படைப்புக்களில் புகுத்தினர்.

நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவருக்குப் பின்னர் போற்றப்பட்ட பெரும் புலவர்கள் இருவர். ஒருவர் சுன்னாகத்தில் வாழ்ந்த முத்துக்குமார கவிராசர். மற்றவர் இருபாலையில் வாழ்ந்த சேனாதிராய முதலியார். இருவரும் கவிமேகங்கள். இந்தக் கவிமேகங்கள் பொழிந்த பாடல்கள் கங்கையும் காவிரியும் போல. எடுத்துக்காட்டாக இருபாடல்களை நோக்குவோம்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலிலே வேட்டைத்திருவிழா, முருகப்பெருமான் தாவிப்பாயும் குதிரையில் பவனிவருகிறார். கண்கொள்ளாக்காட்சியது. இருகவிராயர்களும் இக்காட்சியைக் காண்கின்றனர். இந்த வேளையிலே சேனாதிராய முதலியார் முத்துக்குமார கவிராயரைப் பார்த்து முருகப் பெருமானின் இத்திருக்காட்சியைப் பற்றிப் பாடும் என்கிறார். பாடுகிறார் முத்துக்குமார கவிராயர்.

"முடிவி லாதுறை சுன்னாகத் தான்வழி
முந்தித் தாவடி கொக்குவின் மீதுவந்(து)
அடைய வோர் பெண்கொ டிகாமத் தாளசைந்(து)
ஆனைக் கோட்டைவெ ளிகட் டுடைவிட்டாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவி லான்வரப் பன்னாலை யான் மிக
உருத்த னன்கடம் புற்றமல் லாகத்தில்
தடைவி டாதனை யென்றுப லாலிகண்
சார வந்தனள் ஓரிள வாலையே"

யாழ்ப்பாணத்து ஊர்ப்பேர்களைக் கொண்டே அவர் தமது கவிதையை நயம்படப் பாடினார். அவரது புலமைத்திறன் அதில் பிரதிபலித்தது. மற்றொரு சந்தர்ப்பத்தில் நல்லூரில் இரு கவிராயர்களும் சந்திக்கிறார்கள். நல்லூர்க்கந்தனின் கொடியேற்றுவிழா. கும்ப மாசத்திலே (மாசிமாதம்) சட்டித் திதியிலே நிகழ்கிறது. முத்துக்குமார கவிராயர் சேனாதிராய முதலியாரைப் பார்த்து உமது சுவாமியைப் பற்றிப் பாடும் என்கிறார். பாடுகிறார் சேனாதிராய முதலியார்.

"திருவாரும் நல்லைநகர்ச் செவ்வேற் பெருமானார்
இருபாலைக் குயத்தியரோ டின்பமுற்றா ரம்மானை
இருவாலைக் குயத்தியரோ டின்பமுற்றா ராமாயின்
தருவாரோ சட்டிகுடஞ் சாறுவைக்க அம்மானை
தருவார்காண் சட்டிகுடஞ் சாறுவைக்க அம்மானை."

திருவாரும் நல்லை நகர்ச் செவ்வேற் பெருமானார் இருபாலையிலே குயத்தியரோடு சம்பந்தம் வைத்திருக்கின்றார். அப்படியானால் சட்டிகுடம் சாறு வைக்கத் தருவாரோ? எனக் கேட்கும் வகையில் மேலோட்டமாகப் பார்ப்போர் கருதுவர். ஆயின் அதன் உட்பொருள் ஆழ்ந்த கருத்தமைந்தது. இரண்டு இளம் பெண்களுடன் (வள்ளி, தெய்வ நாயகிகள்) இன்பமுற்ற செவ்வேற்பெருமான் கும்ப (மாசி) மாதத்திலே சட்டித் திதியிலே திருவிழாத் தொடங்க (கொடியேற்றஞ்செய்ய) திருவருள் பாலிப்பார் என்பதே இதன் உட்பொருளாகும்.

இந்த இருபுலவர்களினதும் இப்பாடல்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்து இலக்கியச் செல் நெறியின் போக்கினை எடுத்துக் காட்டுகின்றன எனலாம். தமிழ் நாட்டில் நாயக்கர் கால இலக்கியப் போக்கின் தாக்கத்தையும் இங்கு உணரமுடிகிறது. சேனாதிராச முதலியார் (1750-1840) நல்லை வெண்பா, நல்லையந்தாதி நல்லைக் குறவஞ்சி, நீராவிக் கலிவெண்பா முதலியவற்றைப் பாடியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிராசர் என்றும் வரகவி என்றும் போற்றப்பட்ட முத்துக்குமார கவிராசர் சுன்னாகத்து மயிலணியில் வாழ்ந்தவர். இருபாலைச் சேனாதிராச முதலியாரின் நெருங்கிய நண்பர். இவர் ஞானக்கும்மி, இயேசு மதபரிகாரம், சுன்னாகம் ஐயனார் ஊஞ்சல், சிதம்பரம் நடராசர் தோத்திரம், முத்தக பஞ்சவிஞ்சதி ஆதியாம் நூல்களை ஆக்கியுள்ளார்.

## (iii) புராணங்கள்:-

புராணம் என்பது பழைமை என்னும் பொருள் கொண்டது. பழைமையான செய்திகளையும் நிகழ்வுகளையும் அழகுபட விரித்து உரைப்பது புராணமாகும். 19ஆம் நூற்றாண்டில் முன்னர் எக்காலத்தையும் விட மிக அதிகமான புராணங்கள் தோற்றம் பெற்றுள்ளன. கனகி புராணம், தாலபுராணம் ஆகியவற்றைத் தொடர்ந்து மக்கள் மனதில் இடம் பெற்றுள்ள மற்றொரு புராணமாகத் திரிகோணாசல புராணம் திகழ்கிறது. இதனை மா.முத்துக்குமாருப் புலவர் இயற்றினார். வடமொழியில் உள்ள மச்ச புராணத்தைத் தழுவி இது ஆக்கப் பெற்றது. திரிகோணாசல புராணத்தில் கவிநயம் மிக்க பாடல்கள் பல காணப்படுகின்றன. இக்காலப்பகுதியில் நகுல கிரித்தலம் தொடர்பான இரு புராணங்கள் தோன்றியுள்ளன.

மாதகல் சு.ஏரம்பையர் நகுலாசல புராணத்தையும் கா. அப்பாசாமி ஐயர் நகுல கிரிப் புராணத்தையும் இயற்றினர். வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. வைத்திலிங்கபிள்ளை சாதிநிர்ணய புராணத்தையும் அளவெட்டி வே. கனகசபைப் புலவர் திருவாக்குப் புராணத்தையும் இயற்றினர். யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணையைச் சேர்ந்த கணேச பண்டிதரால் ஆக்கப் பெற்றது இளசைப் புராணம். திருவண்ணாமலை ஆதீனத்து வித்துவானாகத் திகழ்ந்த கணேச பண்டிதர் தமிழ் நாட்டில் இளையாற்றங்குடியில் தங்கியிருந்த வேளையில் அங்குள்ள வணிகர் ஒருவரின் கேள்விப்படி இளசைப் புராணத்தைப் பாடினார் என்பர். தமிழகத்துத் தலங்கள் குறித்தும் ஈழத்துப் புலவர்கள் புராணங்கள் பாடியுள்ளனர் என்பதற்கு இளசைப் புராணமும் கோப்பாய் சபாபதி நாவலர் இயற்றிய சிதம்பர சபா நாதபுராணமும் எடுத்துக் காட்டுக்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கனகிபுராணம்:-**

கனகி என்ற நடனமாது ஒருத்தியைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு யாழ்ப்பாண உயர்வர்க்கப் பிரமுகர்களைக் கிண்டல் செய்யும் வகையில் சுப்பையனார் என்பவரால் அங்கதச்சுவை ததும்ப உருவாக்கப் பட்டது கனகிபுராணம். கனகி சயமரம் (சுயம்வரம்) என்றும் இது அழைக்கப்பட்டது. ஏறக்குறைய நானூறு விருத்தப்பாக்களால் ஆனது. அதனில் பெரும்பகுதி கிடைத்திலது. ஒரு சில செய்யுட்கள் மாத்திரமே தற்போது கிடைக்கப்பெற்றுள்ளதென இதனைப் பதிப்பித்த நவாலியூர் ந.சி.கந்தையாபிள்ளை, வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். இந்நூல் குறித்து முன்னாள் வித்தியாதிபதியும் அறிஞருமான க.ச.அருள் நந்தி அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"இந்நூலினுக்குக் கவியலங்காரப் பண்பு உண்டென்பதை மறுக்க முடியாது. இன்னிசை, சொற்சுவை, நகைச்சுவை, அழுகைச்சுவை, உவப்பான உவமைகள் இவையெல்லாம் நன்கமைந்திருக்கக் காணலாம்.[6]"

அங்கதச்சுவை ததும்பும் கனகிபுராணம் அக்காலப்பகுதியில் வாழ்ந்த பிரபுக்களின் ஒழுக்கக் கேட்டைச் சுட்டிக்காட்டும் வகையில் அமைந்துள்ளதோடு அதன் ஆசிரியர் சுப்பையனாரின் புலமைத்திறனைப் புலப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது. புராணம் என்ற சட்டகத்தை வைத்துக்கொண்டு பிரபுத்துவ சமுதாயத்தை ஒரு கலக்குக் கலக்கி விடுகிறார் புலவர். அவரது இந்நூல் 19ஆம் நூற்றாண்டின் ஈழத்து இலக்கியச் செல் நெறியில் புதியதோர் புரட்சியை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. கனகிபுராணத்தில் தோழி கூற்றாகவரும் செய்யுள் ஒன்றை நோக்குவோம்.

**''ஈட்டுந் தனத்தையே விரும்பி**
**யிரண்டு தனமுந் தான் கொடுத்து**
**மூட்டுங் காமக் கனலெழுப் பும்**
**முகில்போலளகக் கனக மின்னே!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப் புறத்தி லிருப்போரில்
நல்லவுடையும் பொய்ம் மொழியும்
காட்டும் மானிப் பாயாரைக்
கண்ணாற் பாரும், பெண்ணாரே."

மானிப்பாயிலிருந்து வந்த பெரியாரை அறிமுகப்படுத்திய தோழி மற்றொரு பிரபுவை அறிமுகம் செய்வதைப் பின்வரும் பாடல் எடுத்துரைக்கிறது.

"பொன்னைப் பொருவு மருமத்திற்
புடை கொண் டெழுந்த வனமுலையாய்
மின்னைச் சிரிக்கு நுண்ணிடையாய்,
வேய்த்தோட் கனகே யிவணிருப்போன்
தன்னைப் போல வேறொருவர்
தரணி தலத்தி லுள்ளாரோ?
வென்னப் பேசும் நன்னியிவன்
இடறுப் பூச்சி மெய்யானே."

கனகி புராணம் பாடியதன் மூலம் பொது மகளிர் வாழ்க்கையின் இழிவும் அவரை விழைவோரது கயமையும் நன்கு விளக்கமுறச் செய்தார் சுப்பையனார். பொது மகளிர்க்கும் இளைஞர்க்கும் அறிவு கொளுத்தினால் அவர்கள் திருந்தி நடப்பர் என்ற நோக்குடனேயே இப் புராணத்தை அவர் பாடினார் எனக் கருதலாம்.

இக்காலப் பகுதியில் எழுந்த மற்றொரு புராணம் தாலபுராணமாகும். இதனைப் பாடியவர் அச்சுவேலி வாசியான நீ.காசி நாதப் புலவராவார். பூலோக கற்பகதரு எனப் போற்றப்படும் பனைமரம் மக்கள் வாழ்வியலோடு இரண்டறக் கலந்ததாகும். பொருளாதார நோக்கில் முக்கியத்துவம் பெறுவது. இதன் அருமையினை வெகு அழகாகக் பாடியுள்ளார் புலவர். தால புராணம் நூல் வடிவில் வந்ததாகத் தெரியவில்லை. வாய்மொழிக் கேள்வியால் பெறப்பட்ட பாடல்கள் சிலவற்றை இலக்கிய கலாநிதி எவ்.எக்ஸ்.ஸி. நடராசா அவர்கள் தமது ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு என்னும் நூலில் வெளியிட்டுள்ளார். எடுத்துக்காட்டாக அதில் உள்ள ஒரு பாடல் வருமாறு:-

"அரிதனை பரப்பி மட்டை அம்மென நிரப்பி ஆடை
அரிதுகி லுடுத்து தாலம் அளவிலா துயிரைக் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியது கண்டு வெட்கித்து அளந்திடு படியை விட்டு
அரியுரு வடிவெடுத்து அவனியிற் புகுந்தாரன்றே."

பனையின் பயன்களைக் கூறும் வகையில் அமைந்த தாலபுராணம் கலிவெண்பா யாப்பிலமைந்தது. இதனைப் "பனங்காய்ப் பாரதம்" எனவும் அழைப்பர். பனையின் பயன்களைப் பாடுபொருளாகக் கொண்டு பாடியமையாலே இது தாலபுராணம் எனப் போற்றப்படுகிறது. புராண வகைகளில் இது புதுமை எனலாம்.

சமூகச் செய்திகளைப் பாடு பொருளாகக் கொண்டு அங்கதச் சுவை ததும்பப் பாடப்பட்ட புராணங்களில் கனகி புராணத்தை அடுத்து விதந்துரைக்கத்தக்கது கோட்டுப் புராணமாகும். கோப்பாயில் வாழ்ந்த. வே.இராமலிங்கம் என்பவரே இதனை இயற்றியவராவார். இந்நூல் குறித்து 'பாவலர் சரித்திர தீபக' ஆசிரியர் அ.சதாசிவம்பிள்ளை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "நீதித் தலஞ் சென்று வியாச்சியம் நடத்தும் வாதி, பிரதிவாதிகளுக்கு நேரிடும் பணநஷ்டம், கஷ்டம், அல்லல், தொல்லைகளையும், அந்நீதிஸ்தலங்களில் 'உதரநிமித்தம்' 'வெகு கிருது' வேடம் எனப் பிழைப்பின் பொருட்டுத் தந்திர வேடம் போட்டுத் தமனகனைப்போல் இரு திறத்தவரையும் மூட்டிவிட்டுப் பணம் பறிக்கும் கோட்டுப் புறாக்களையும் வாதி, பிரதிவாதிகளுக்காகத் தனித்தனி ஏற்பட்டும் இருபுறமுங் கைநீட்டும் நியாய துரந்தரர்களையும் இழித்தும் பழித்தும் கோட்டுப் புராணம் என்னும் பெயர் சூட்டி ஒரு பாடல் இயற்றினார்.[7]"

19ஆம் நூற்றாண்டில் 'பெரிய மனுஷர்' களாக உலவிய சிலரையும் அவர்களுக்கு உறுதுணையாக விளங்கிய நியாய துரந்தரர்களையும் இழித்தும் பழித்தும் சுவைபடப் பாடப்பட்டதே கோட்டுப் புராணமாகும். இப்புராணத்தில் சில பாடல்களே கிடைக்கப் பெற்றுள்ளன. பின்வரும் செய்யுள் இப்புராணத்துக்கு உரியதாகக் கருதப்படுகிறது.

"கோடொரு களரி யதிலுறுந் துரையோ
கூத்துப் பார்த்திருந் திடும்பு
ஆடுறுங் குரங்கோ வழக்கர் களாவா
ரவையிடை யவைகளைக் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடொறு மாட்டுங் கயிறுதான் வழக்கு
நட்டுவப் பணிக்கனோ தரணி
வாடிடு வயிறு வளர்ப்பதற் கெடுத்த
வஞ்சனை வேடமென் றுணரே."

நீதிமன்றத்தை (கோர்ட்டை) கூத்துக் களரியாகவும் நீதிபதியைப் பார்வையாளராகவும் வழக்காடுவோரைக் குரங்காகவும் உவமித்துப் பாடிய இப்புலவர் நல்ல கவிவளம் கொண்டவர் என்பதை இப்பாடல் நன்கு புலப்படுத்துகிறது. இதே போன்ற தனிப்பாடல்கள் பல இக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் வாய்மொழியாகப் பரவியிருந்தனவாம். 19ஆம் நூற்றாண்டிலே இடம்பெற்ற பிரபல வழக்குகளில் ஒன்று விளைவேலி வேதக்குட்டி ஐயரின் மரணசாதன வழக்காகும். இவ்வழக்கில், புகழ் பெற்ற அத்துவக்காத்தாக விளங்கிய கூல் என்பவருக்கும் அவரோடு சேர்ந்து செயற்பட்ட சிலருக்கும் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டது. இது குறித்து வாய்மொழியாக வழங்கப்படும் பாடல்கள் பல உள. அவற்றுள் ஒன்று வருமாறு;

"ஆனைக் கோட்டை இராமலிங்கம்
அப்புக் காத்துக் கூலரும்
சேனைத் தலைவ ராகி நின்ற
சிறந்த கோட்டுச் சுப்பரும்
பூனை நாக முத்தரும்
புழுகு கந்தப் பிள்ளையும்
ஏனையோரும் பட்ட பாடு
இயம்பு தற்கு இல்லையே."

அப்புக்காத்தர் கூலர் பற்றிப் பல சுவையான பாடல்கள் வாய்மொழியாக யாழ்ப்பாணத்தில் வழங்கிவருகின்றன. அவை கோட்டுப் புராணத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம். 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சமுதாய நோக்குச் சார்ந்த இலக்கியங்கள் தோற்றம் பெற்றமைக்குக் 'கோட்டுப்புராணம்' ஒரெடுத்துக்காட்டாகும். இக்காலப்பகுதியில் படைக்கப்பட்ட மற்றொரு புராணம் யாழ்ப்பாணத்து நல்லூர் சி.அப்புக்குட்டி ஐயர் இயற்றிய சூது புராணமாகும். இப்புராணத்திற்குரிய செய்யுள் எதுவும் கிடைப்பதாயில்லை. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பதிறுத்தீன் புலவர் முகியித்தீன் புராணம் என்ற நூலை 1816இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கேற்றினார் எனத்தெரிகிறது. இந்நூல் நபிகள் நாயகத்தின் பேரரான முகியித்தீன் அப்துல்காதர் ஜீலானியைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டதாகும்.

இவற்றைவிட வேறு சில புராணங்களும் இக்காலப்பகுதியில் தோற்றம் பெற்றுள்ளன. யாழ்ப்பாணத்து நீர் வேலியைச் சேர்ந்த ச.சிவப்பிரகாச பண்டிதர் ஸ்ரீ சிதம்பர சேத்திர மான்மியத்தை அடியொற்றித் திருக்கழிப்பாலைப் புராணத்தை இயற்றினார். தேவாரப்பாடல் பெற்ற பழம் பதிகளில் ஒன்று திருக்கழிப்பாலை. இத் தலபுராணம் நைமிசாரணியத்தில் உள்ள மாதவர் வேண்டச் சூதமுனிவர் கூறுவது போல அமைந்துள்ளது. இப்புராணம் 276 பாக்களைக் கொண்டுள்ளது. சிவப்பிரகாச பண்டிதர் சிறந்த உரையாசிரியருமாவார். திருச்செந்தூர்ப் புராணவுரை, கிருட்டிணன்தூதுச் சருக்கவுரை என்பன இவர் உரை கண்டநூல்களிற் குறிப்பிடத்தக்கனவாகும்.

யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழையைச் சார்ந்த பன்னாலை என்னும் ஊரில் வாழ்ந்தவர் வித்துவான் ச.சிவானந்தையர். இவர் பாடியதே புலியூர்ப்புராணமாகும். சிதம்பரமான்மியத்தைப் புராணமுறைமையாலே அமைத்துத் தந்த புராணம் இதுவாகும். இக்காலத்தெழுந்த புராணங்களில் ஒன்று சீமந்தினி புராணமாகும். மட்டக்களப்பு பண்டிதர் ச.பூபாலபிள்ளை இதனை இயற்றியவராவார். காப்புச் செய்யுள் ஒன்றும் பாயிரச் செய்யுள் பத்தும் நீங்கலாக 789 செய்யுள்கள் இப்புராணத்தில் உள்ளன. இனிய பல செய்யுள்கள் கொண்டதாகவும் நூலாசிரியரின் புலமையைப் புலப்படுத்துவதாகவும் இப்புராணம் அமைந்துள்ளது. வட்டுக்கோட்டையைப் பிறந்தகமாகக் கொண்ட நா.சிவசுப்பிரமணிய ஐயரால் பாடப்பட்டது கந்தசட்டிப் புராணமாகும். முருக விரதங்களில் ஒன்றான கந்த சட்டிவிரதத்தின் மகிமையையும் அதனை அநுட்டிக்கும் முறையினையும், இவ்விரதத்தாற் பெறும் பயன்களையும், பயன்பெற்றோர் சிலரது சரிதைகளையும் விளக்கும் வகையில் இப்புராணம் விளங்குகிறது. இப்புராணம் காப்புச் செய்யுள் ஒன்றும் வாழ்த்துச்செய்யுள் ஒன்றும் கடவுள் வாழ்த்துப் பாக்கள் மூன்றும், முகவுரைப்பாடல்கள் ஏழும் நீங்கலாக, எட்டுச்சருக்கங்களில் 998 செய்யுள்களைக் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாய நோக்குடன் படைக்கப்பட்ட மற்றோர் இலக்கியம் தத்தைவிடுதூது. இதனைத் தி.த. சரவணமுத்துப் பிள்ளை மரபுவழிப் பிரபந்த வகையிலே இயற்றியுள்ளார். திருகோணமலையைச் சேர்ந்த இவர் சென்னை மாநிலக் கல்லூரியில் பிரதம நூலகராகப் பணியாற்றியவர். மோகனாங்கி என்னும் வரலாற்று நாவலைப் படைத்தவர். தத்தைவிடு தூது பெண் விடுதலைக்குக் குரல் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது.

அக்காலப் பகுதியில் சமூகத்திலே பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை, அடக்கு முறைகளை, மூடத்தனங்களைத் தமது கவிதைகளில் சிறப்பாகச் சித்திரித்துள்ளார் சரவணமுத்துப்பிள்ளை. எடுத்துக்காட்டாக ஒரு பாடலைக் காண்போம்.

**"கூட்டிற் பசுங்கிளிபோற் கோதையரை எப்பொழுதும்**
**வீட்டில் அடைத்து வைக்கும் வீரகிலருக் கியாதுரைப்போம்**
**பூட்டித் திறந் தெடுக்கும் பொருளாகக் கருதினரோ**
**கேட்டார் நகைப்பதுவுங் கேட்டிலரோ பைங்கிளியே**
**கிஞ்சுகவாய்ப் பைந்தொடிபாற் கிளத்தாய் பசுங்கிளியே."**

பெண் விடுதலைக்கு குரல் கொடுத்த பாரதி, ''வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை குனிந்தார்'' எனப் பாடுதற்கு முன்னரே சரவண முத்துப் பிள்ளை வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைக்கும் செயலை அமைதியாக, ஆணித்தரமாகக் கண்டித்துள்ளார் என்பதைத் தத்தை விடுதூது நன்குணர்த்துகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே ஈழத்து இலக்கியப் போக்கு எத்தகையதாக அமைந்திருந்தது என்பதற்குத் தத்தைவிடு தூது ஏற்ற உரைகல்லாக விளங்கிற்று எனலாம். இக்காலப்பகுதியில் வாழ்ந்த நல்லூர் சந்திர சேகர பண்டிதர் இயற்றிய கிள்ளை விடு தூதும் குறிப்பிடத்தக்க தூது நூலாகும்.

19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துப் புலவர்களால் பெரிதும் கையாளப்பெற்ற இலக்கிய வடிவங்களில் ஊஞ்சல் முக்கிய இடத்தைப் பெறுகிறது. வடபகுதியில் ஊஞ்சல் பாடப்படாத ஆலயங்களே இல்லை எனலாம். இந்த வகையில் முத்துக்குமார கவிராசர் இயற்றிய சுன்னாகம் ஐயனார் ஊஞ்சல், குமாரசுவாமி முதலியார் இயற்றிய மூளாய் சித்தி விநாயகர் ஊஞ்சல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தவனநாதர் ஊஞ்சல், சுன்னாகம் முருகேச பண்டிதர் பாடிய மயிலணி ஊஞ்சல், சந்திர சேகர விநாயகர் ஊஞ்சல் என்பன குறிப்பிடத்தக்கனவாம்.

பாடலின் அடிதொறும் இறுதியில் வந்த ஓரெழுத்தோ, ஓரசையோ ஒரு சீரோ அடுத்த அடிக்கு முதலாக நின்று தொடுக்கப்படுவது அந்தாதித் தொடை எனப்படும். ஈழத்துப் புலவர்கள் அந்தாதி பாடுவதில் கைதேர்ந்தவர்கள் எனப் போற்றப்படுகின்றனர். இக்காலப்பகுதியில் காரைநகர் மு. கார்த்திகேயப் புலவர் இயற்றிய காரைநகர் திண்ணபுரவந்தாதி, மாவை பொன்னம்பலப் பிள்ளை பாடிய மாவையந்தாதி, திருகோணமலை ஆறுமுகப் புலவர் இயற்றிய திருகோணமலை அந்தாதி, சபாபதி நாவலர் பாடிய மாவையந்தாதி, உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் இயற்றிய செந்தில் யமக அந்தாதி என்பன குறிப்பிடத்தக்க அந்தாதிகளாகும்.

பலவகைப்பாக்களும் பாவினங்களும் அமைய அந்தாதித்தொடையாய்ப் பாடப்படுவது கலம்பகமாகும். இக்காலப்பகுதியில் பாடப்பெற்ற கலம்பகங்களில் நீர்வேலி பீதாம்பரப் புலவர் பாடிய மறைசைக் கலம்பகம் மிகச் சிறந்த இலக்கியமாக மிளிர்கின்றது. கோவைப் பிரபந்தங்கள் பாடவல்ல புலமை மிக்கோர் இக்காலப்பகுதியில் வாழ்ந்துள்ளனர். வட்டுக்கோட்டை வாசியான நாகேசு ஐயர் வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமியார் மீது பாடிய அடைக்கலங்கோவை வல்லுவெட்டி (வல்லிபட்டி) குமாரசுவாமி முதலியார் பாடிய அருளம்பலக்கோவை என்பன குறிப்பிடத்தக்க கோவைப் பிரபந்தங்களாகும்.

இக்காலப் பகுதியில் தோன்றிய சதக இலக்கியவகையில் உடுப்பிட்டி தா.சின்னத்தம்பி இயற்றிய வீரபத்திரர்சதகம், மானிப்பாய் அ.சதாசிவம் பிள்ளை (பாவலர் சரித்திர தீபக ஆசிரியர்) பாடிய திருச்சதகம் என்பன குறிப்பிடத்தக்கனவாகும். வெண்பா யாப்பில் பிரபலம் பெற்ற புலவர்கள் பலர் இக்காலப் பகுதியில் வாழ்ந்துள்ளனர். அவர்களுள் நல்லை வெண்பா பாடிய இருபாலைச் சேனாதிராச முதலியார், நீராவிக்கலி வெண்பா இயற்றிய பீதாம்பரப்புலவர், மயிலணிச் சிலேடை வெண்பா பாடிய முருகேச பண்டிதர் ஆகியோர் குறிப்பிடத்தக்கோராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமக்கள் சார் இலக்கியவகைகளில் குறவஞ்சியும் ஒன்றாகும். குறத்தி குறவனுடன் உரையாடும் வகையிலும், குறி சொல்லும் முறையிலும் செய்திகளைத் தெரிவிக்கும் வகையில் பாடப்படும் பிரபந்தம் குறவஞ்சியாகும். இருபாலைச் சேனாதிராச முதலியார் பாடிய நல்லைக் குறவஞ்சியும் வட்டுக்கோட்டை விசுவநாத சாஸ்திரியாரின் வண்ணைக் குறவஞ்சி, நகுல மலைக் குறவஞ்சி என்பனவும் நல்லூர் சரவணமுத்துப் புலவர் இயற்றிய திருகோணமலைக் குறவஞ்சியும் மக்கள் மனங்கவர்ந்த குறவஞ்சிகளாக உள்ளன.

இக்காலப் பகுதியில் பதிகம், திருப்புகழ், அகவல் போன்ற பாவகைகளால் தமிழ் இலக்கியப் புலமைக்கு உயிரூட்டிய புலவர்கள் பலர் வாழ்ந்துள்ளனர். இவ்வகையில் அவர்களது தமிழ்ப்பணி என்றும் நினைவு கூரத்தக்க வகையில் உள்ளது.

உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரின் கந்தவன நாதர் பதிகம், வல்லிபுரநாதர் பதிகம், நீர்வேலி பீதாம்பரப்புலவரின் வல்லிபுரநாதர் பதிகம், புங்குடுதீவு ப.இராமலிங்கச் சட்டம்பியாரின் கேரநகர் அரிகரபுத்திரர் பதிகம் என்பன குறிப்பிடத்தக்க பதிகங்களாக விளங்குகின்றன.

மாதகல் மயில்வாகனப் புலவர் பாடிய விநாயகர் அகவலும் நல்லூர்ப் பரமானந்தப் புலவரின் கந்தரகவலும் இக்காலப் பகுதிக்குரிய சிறந்த அகவல்களாகக் கருதப்படுகின்றன.

தமிழகத்தில் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் போன்று ஈழத்திலும் திருப்புகழ் பாடும் பணியில் புலவர்கள் சிலர் இக்காலப்பகுதியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுள் நீர்வேலி பீதாம்பரப்புலவர் பாடிய மறைசைத் திருப்புகழ், அருள்வாக்கி அப்துல்காதிருப் புலவர் இயற்றிய சந்தத் திருப்புகழ், அசனாலெப்பைப் புலவரின் நவரத்தினத் திருப்புகழ் என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

**(iv) நாடகங்கள்:-**

19ஆம் நூற்றாண்டில் ஈழத்திலும் தமிழகத்திலும் நாடகத்துறையில் புதியதோர் விழிப்புணர்வு ஏற்பட்டதெனலாம். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் கூத்துக்கள் ஆடப்பட்டு வந்தபோதிலும் அவை நாடக நெறிப்பட்டனவாக விளங்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19ஆம் நூற்றாண்டிற்றான் கூத்து வடிவத்தை ஆதாரமாகக் கொண்டு விலாச நாடகங்கள் உருப்பெற்றன. கூத்துக்கள் விலாசங்களாக மாற்றப்பட்டன. இம்மாற்றம் காரணமாக வாளபிமன் விலாசம், விஜய தர்ம விலாசம், தருமபுத்திரவிலாசம், எஸ்தாக்கியர் விலாசம், பூதத்தம்பி விலாசம், இராமவிலாசம் போன்ற விலாசங்கள் பல தோற்றம் பெற்றன.

"விலாசங்கள் பழைய கூத்து முறைமையினின்றும் புதிய நாடக வடிவத்துக்கான ஆரம்பத்தையும் உணர்த்தின. விலாசத்திற் கர்நாடக இசையும் ஓரளவு ஆங்கில, ஹிந்துஸ்தானி மெட்டுகளும் உரையாடலும் அதிக இடத்தைப்பெற்றன. கூத்துக்குரிய ஆடல் அம்சம், விலாசத்தில் மெதுமெதுவாகக் கைவிடப்படத் தொடங்கியது.[8]"

எனக் கலாநிதி துரை மனோகரன் குறிப்பிட்டுள்ளமையும் இங்கு நோக்கத் தக்கது. விலாசத்தினின்றும் வளர்ச்சி பெற்ற மற்றோர் வடிவம் சபா ஆகும். 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தமிழகத்திலும், ஈழத்திலும் சபாக்கள் பல தோற்றம் பெற்றன. விலாசத்தில் முன்னர் காணப்பட்ட அம்சங்களோடு ஆங்கில இசை மெட்டுக்களும் சபா நாடகங்களில் இடம்பெற்றன. சபா நாடகங்களில் உரையாடல்கள் முக்கியத்துவம் பெறத்தொடங்கின. சபா நாடகங்களில்; பெரிதும் ஆர்வம் காட்டியவர்கள் கிறித்தவர்களேயாவர். அவர்களால் ஆக்கப்பட்ட நாடகங்களில் கிறித்தவ சமய அம்சங்கள் பல முக்கியத்துவம் பெற்றிருந்தன. இது குறித்துப் பேராசிரியர் சரத்சந்திரா பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"........ கிறித்தவ சமூகப் பின்னணியில் அமைந்த ஐரோப்பிய கருப் பொருட்களும் இவற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன. கிறித்தவ உணர்வுகள், கிறித்தவ பிரார்த்தனைகள் நாடகம் முழுவதிலும் அமைந்திருந்தன. புதிய பாத்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.[9]"

இதன்மூலம் புதிய கருப்பொருளும் புதிய பாத்திர அமைப்புக்களும் கொண்டதாகத் தமிழ் நாடகம் ஒரு புதிய மரபினைப் பெற்று வளர்ச்சியுறத் தொடங்கியது. இக்காலப்பகுதியில் வாழ்ந்த மாதோட்டம் லோறஞ்சுப் புலவரின் பேரனான கீத்தாம்பிள்ளை படைத்த எருமை நாடகம், ஏரம்பதோர் நாடகம், நொண்டி நாடகம் என்பனவும் நல்லூர் தவத்திரு ஆறுமுக நாவலரின் தந்தையாரான கந்தப்பிள்ளை ஆக்கிய இராமவிலாசம், இரத்தினவல்லி விலாசம், சந்திர காச நாடகம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி நாடகம், ஏரோது நாடகம், சம். நீக்கிலார் நாடகம் என்பனவும் மானிப்பாய் சுவாமி நாதர் படைத்த இராமநாடகம், தருமபுத்திர நாடகம் முதலியனவும் உடுப்பிட்டி குமாரசுவாமி முதலியாரது இந்திரகுமார நாடகம், அராலி முத்துக்குமாருப் புலவரின் தேவசகாயம் பிள்ளை நாடகம் என்பனவும் இக்காலப் பகுதியில் எழுந்த சிறந்த நாடகங்கள் எனலாம்.

கொக்குவில் விசுவநாத சாஸ்திரி, அச்சுவேலி தம்பிமுத்துப்பிள்ளை, எருக்கலம்பிட்டி பக்கீர்ப்புலவர், நாகேசு ஐயர், புலவர் சுவாம்பிள்ளை முதலானோரும் இக்காலப் பகுதியில் நாடக வளர்ச்சிக்குத் தொண்டாற்றியோரில் குறிப்பிடத்தக்கோராவர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மலையகப் பிரதேசங்களில் தொழில் நிமித்தம் குடியேறிய பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமது பண்பாட்டு மரபுடன் தொடர்புபட்ட கலைகளை இங்கு அறிமுகப்படுத்தினர். காமன் கூத்து, அருச்சனன் தபசு, பொன்னர் சங்கர் முதலானவை அவற்றுள் குறிப்பிடத்தக்கனவாகும்.

### (v) அகராதிகள்:-

19ஆம் நூற்றாண்டில் ஈழத்து இலக்கிய முயற்சிகளில் குறிப்பிடத்தக்கதோர் அம்சமாக அகராதி ஆக்கம் இடம்பெறுகிறது. நிகண்டுகள் மூலம் தமிழ் இலக்கிய, இலக்கண மரபுச் சொற்களை அறிந்திருந்த பழைய பரம்பரையினர் அருக, புதிய பரம்பரையினருக்குச் செய்யுள் வடிவில் அமைந்திருந்த நிகண்டுகளைக் கற்பது சிக்கல் நிறைந்தனவாகவும் சிரமமானதாகவும் இருந்தது. தமிழ் இலக்கிய, இலக்கணங்களைக் கற்க முற்பட்ட பிறநாட்டவர்க்கும் இது பெரும் சிரமமாயிருந்தது. இதே வேளையில் ஆங்கில மொழியைக் கற்க முற்பட்ட தமிழ் மக்களுக்கு அம்மொழிச் சொற்களுக்குரிய நேரடிப் பொருளைத் தமிழில் அறிந்து கொள்ள வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இத்தேவைகளை நன்குணர்ந்த அமெரிக்க மிஷனரிமார் மேனாட்டு முறையில் அகராதிகளை ஆக்குவது பயனுடையதெனக் கருதினர். இதன் பொருட்டுச் சுதேசியத் தமிழ் அறிஞர்களின் துணையோடு அகராதி ஆக்கக் குழுவொன்றினை அமைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1833ஆம் ஆண்டு வண. ஜே.நைற் என்ற மிஷனரியின் தலைமையில் இக்குழு அமைக்கப் பெற்றது. இக்குழுவில் லெவிஸ் பால்டிங், சாமுவேல் ஹற்சிங், வின்சிலோ பேசிவல் முதலான மிஷனரிகளுடன் இந்நாட்டறிஞர்களான அ.சந்திரசேகரபண்டிதர், கறோல் விசுவநாதபிள்ளை, காபிரி பல்திசரா, வில்லியம் நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை, இருபாலைச் சேனாதிராச முதலியார் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இக்குழுவினர் தமிழ்- தமிழ்அகராதி, தமிழ்- ஆங்கில அகராதி, ஆங்கில - தமிழ் அகராதி என மூவகையான அகராதிகளை ஆக்கும் பணியில் ஈடுபட்டனர். இப்பணிக்குழுவின் தலைவராகச் செயற்பட்ட வண. நைற் அவர்கள் 1838இல் காலமானார். அவரது மறைவின்பின் லெவிஸ் பால்டிங் தலைமைப் பொறுப்பையேற்று அகராதிப் பணியை முன்னெடுத்துச் சென்றார். இதன் பேறாக 1842 இல் தமிழ் அகராதி ஒன்றை வெளியிட்டார். இவ்வகராதியின் இரண்டாம் பதிப்பு 1852இல் மானிப்பாயில் மிஷனரிகளின் அச்சகத்தில் அச்சிடப்பெற்றது. இவ்வகராதி குறித்துத் தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாணப் பேராயர் வண. எஸ். ஜெபநேசன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"அவர் (நைற்) சேகரித்த விடயங்களை ஆதாரமாகக் கொண்டு அமெரிக்க மிஷனைச் சேர்ந்த வண லெவிஸ் பால்டிங் என்பார் சந்திரசேகர பண்டிதர், வண ஹற்சிங் ஆகியோரின் உதவியுடன் 1842இல் ஒரு தமிழ் அகராதியினை வெளியிட்டனர். இக் கையகராதி 58,000 சொற்களையுடையது. தமிழிலும் ஆங்கிலத்திலும் சொற்களுக்கு விளக்கம் கொடுத்தது. பிற்காலத்தில் இது யாழ்ப்பாண அகராதி, மானிப்பாய் அகராதி என்றும் அழைக்கப்பட்டது. ஈழத்தில் எழுந்த முதலாவது தமிழ் அகராதி இதுவேயாகும்.[10]"

தமிழ்ச் சொற்களுக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் விளக்கம் கொண்ட இவ்வகராதி தமிழ் கற்க முற்பட்ட மேனாட்டாருக்கும் பெரிதும் பயன்பட்டது எனலாம். இவ்வகராதியைத் தொடர்ந்து நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளையினால் தொகுக்கப்பெற்ற ஆங்கில - தமிழ் அகராதி (English and Tamil Dictionary) 1858இல் சென்னையில் வெளியானது.

1862இல் உவின்சிலோ பாதிரியாரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு தமிழ் - ஆங்கில அகராதி ஒன்று வெளியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67,452 சொற்களைக் கொண்ட இவ்வகராதி உவின்சிலோ அகராதி என்றே அழைக்கப்படுகிறது. 1870இல் விசுவநாதபிள்ளையின் தமிழ்-ஆங்கில அகராதி ஒன்றும் வெளியானது. அகராதிகளின் பயன்பாட்டை நன்குணர்ந்த ஈழத்துத் தமிழறிஞர்கள் மிஷனரிகளின் வழியில் தமிழ் அகராதிகளை ஆக்கும் பணியில் ஆர்வம் கொண்டனர். இதன்பேறாக அகராதிகள் பல தோற்றம் பெற்றன. உவைமன் கதிரை வேற்பிள்ளை, ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர், உடுவில் சந்திரசேகரபண்டிதர் நா.கதிரை வேற்பிள்ளை ஆகியோர் முறையே தமிழ்ப் பேரகராதி, தமிழகராதி, இலக்கியச் சொல் அகராதி, தமிழகராதி, யாழ்ப்பாணத் தமிழ்ப் பேரகராதி ஆகியவற்றை ஆக்கினர். இவ் அகராதிகளுக்கு இன்றும் கூடப் பெருமதிப்பும் விற்பனையும் உண்டு. தமிழகத்தில் உள்ள பதிப்பகங்கள் பல இன்றும் கூட இவற்றை மீள்பதிப்புச் செய்து விற்பனை செய்துவருகின்றன.

**மொழிபெயர்ப்பு நூல்கள்:-**

18ஆம் நூற்றாண்டு இலக்கிய வளர்ச்சியை ஆராயுமிடத்து மொழிபெயர்ப்புத்துறையில் அறிஞர்கள் பலர் பங்கு கொண்டுள்ளமையை அறியலாம். இக்காலப்பகுதியில் தமிழிலிருந்து ஆங்கிலத்திலும், ஆங்கிலத்திலிருந்து தமிழிலும் மொழிபெயர்ப்பு முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆங்கிலக் கல்விப் பரம்பலும் இதற்குதவிற்று. இதே வேளையில் வடமொழியிலுள்ள சில இலக்கிய நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. மிஷனரிமார்கள் தமிழில் உள்ள சில நூல்களை; குறிப்பாக நீதி நூல்களான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, திருக்குறளின் சிலபகுதிகள் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர். 1854இல் எச்.ஆர்.ஹெய்சிங்டன் என்பவர் தத்துவக் கட்டளை, சிவஞான போதம், சிவப்பிரகாசம் முதலானவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

மிஷனரிமாரைப் பின்பற்றி ஆங்கிலமும் தமிழும் கற்ற ஈழத்தறிஞர்கள் பலர் தமிழில் உள்ள நூல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டனர். இவ்வகையில் சேர். முத்துக்குமாரசுவாமியின் அரிச்சந்திர நாடக மொழி பெயர்ப்பும் பிறிற்றோவின் யாழ்ப்பாண வைபவமாலை மொழிபெயர்ப்பும் குறிப்பிடத்தக்கனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவத்திரு ஆறுமுகநாவலரின் 'பைபிள்' மொழி பெயர்ப்பும் இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. நல்லூர் சரவணமுத்துப் புலவர், நீர்வேலி சங்கரபண்டிதர், சுன்னாகம் நாகநாத பண்டிதர், புலோலி. வ. கணபதிப்பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், காசிவாசி செந்திநாதையர், திருஞானசம்பந்தபிள்ளை ஆகியோர் வடமொழியிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தோர்களில் குறிப்பிடத்தக்கோராவர்.

புலோலி வ. கணபதிப்பிள்ளை வில்ஹனியம், வாதபுரேசர் கதை என்பனவற்றையும் குமாரசுவாமிப்புலவர் மேகதூதக்காரிகை, இராமோதந்தம், சாணக்கிய நீதி வெண்பா முதலியனவற்றையும் காசி வாசி செந்திநாதையர் நீலகண்ட பாஷ்யத்தையும், நாக நாத பண்டிதர் மானவ தர்ம சாஸ்திரம், பகவத்கீதை, மேகதூதம் ஆகியவற்றையும் திருஞானசம்பந்தபிள்ளை தர்க்காமிர்தம் என்ற நூலையும் வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்த்துள்ளனர். இவை இவர்களின் தமிழ்மொழி, வடமொழி ஆற்றலைப் பிரதிபலிப்பனவாகவுள்ளன. கைலாய மாலையை ஆ.முத்துத்தம்பிப் பிள்ளையும் சைமன் காசிச்செட்டி கோணேசர் கல்வெட்டையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பத்திரிகைகள்:-**

19ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் சிறப்புப் பெற்ற துறைகளில் பத்திரிகைத்துறையும் ஒன்றாகும். கிறித்தவ மதப் பிரசாரத்திற்காக அமெரிக்க மிஷனரிமார் முதன்முதலாக 1841இல் (1841-01-07) "உதயதாரகை" (Morning Star) என்னும் பத்திரிகையினை ஆரம்பித்தனர். தமிழிலும் ஆங்கிலத்திலும் இது வெளிவந்தது. அன்றுமுதல் இன்றுவரை இப்பத்திரிகை தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும்.

சமய, சமூக, இலக்கிய, இலக்கண விடயங்களும் சிறுகதைகள், கவிதைகள், கடிதங்கள், விளம்பரங்கள், நூல் விபரங்கள், மதிப்புரைகள் போன்ற விடயங்களும் இதில் அதிகமாக இடம் பெற்றன. பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை போன்ற அறிஞர்கள் பலர் இப்பத்திரிகையின் ஆசிரியர்களாக இருந்துள்ளனர். மக்கள் மத்தியில் பத்திரிகை வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கிய பெருமையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகைக்கே உண்டு. தவத்திரு ஆறுமுக நாவலர் (கந்தர் ஆறுமுகவன் என்ற பெயரில்) கனல் பறக்கும் கண்டனங்களையும் கடிதங்களையும் உதயதாரகையில் எழுதியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதெனலாம்.

உதயதாரகையைத் தொடர்ந்து சைமன் காசிச்செட்டியின் உதயாதித்தன்(1841), உவைமன் கதிரைவேற்பிள்ளையின் வித்தியா தர்ப்பணம் (Literary Mirror), வில்லியம் சின்னத்தம்பியின் பாலியர்நேசன், சத்திய வேத பாதுகாவலன், இலங்காபிமானி, இலங்கை காவலன் போன்ற கிறித்தவ சமயம் சார்ந்த பத்திரிகைகளும் இலங்கை நேசன் (1875), சைவ உதயபானு (1880), சைவாபிமானி (1884), இந்து சாதனம் (HINDU ORGAN) (1889), சைவசமயபோதினி, விஞ்ஞானவர்த்தினி ஆதியாம் சைவசமயம் சார்ந்த பத்திரிகைகளும் முஸ்லிம்நேசன் (1882), சர்வஜன நேசன், இஸ்லாம் மித்திரன், இஸ்லாம் பாதுகாவலன், புதினாலங்காரி (1889), சைபுல் இஸ்லாம் போன்ற இஸ்லாமியப் பத்திரிகைகளும் தோற்றம் பெற்றன.

சுருங்கக் கூறின் 19ஆம் நூற்றாண்டில் இருபத்தைந்து பத்திரிகைகள் வரை ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டன என அறிய முடிகிறது. ஆயின் உதயதாரகை, இந்து சாதனம், சத்திய வேத பாதுகாவலன் ஆகிய மூன்று பத்திரிகைகளே இன்றுவரை தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இருபதாம் நூற்றாண்டில் ஈழத்தவர்கள் பத்திரிகைத்துறையில் சாதனைகள் பல நிலைநாட்டியமைக்கு வழிகோலிய பெருமை இப்பத்திரிகைகளையே சாரும்.

**நூற்பதிப்புத்துறை:-**

19ஆம் நூற்றாண்டில் சிறப்புப் பெற்ற துறைகளில் நூற்பதிப்புத்துறையும் ஒன்றாகும். உரைநடை வளர்ச்சி உயர்வு பெற்று விளங்கிய இக்காலப்பகுதியில் ஆறுமுக நாவலர் பதிப்புத்துறையில் ஒரு முன்னோடியாக விளங்கினார். 'நாவலர் பதிப்பு சுத்தமானது' என்று தமிழறிஞர்கள் பலரும் போற்றிடும் வகையில் மிகுந்த பொறுப்புணர்வுடன் பதிப்புத்துறையில் ஈடுபட்டார். 1849ஆம் ஆண்டு முதலாக அவரது பதிப்புப் பணி ஆரம்பமாகித் தொடர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடாமணி நிகண்டுரை, நன்னூல் விருத்தியுரை, திருக்கோவையார் உரை, திருக்குறள் பரிமேலழகர் உரை, சேது புராணம், இலக்கணக் கொத்து, பதினோராம் திருமுறை, திருமுருகாற்றுப்படை, குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, ஏரெழுபது, திருக்கை வழக்கம், மறைசையந்தாதி, கோயிற் புராணமூலம், சிதம்பர மும்மணிக்கோவை, திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி, பட்டணத்துப் பிள்ளையார் பாடல், மருதூரந்தாதியுரை, திருச்செந்தூரகவல், தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி முதலாம் இலக்கிய, இலக்கண நூல்களை நாவலர் பதிப்பித்துள்ளார். இவற்றைவிடச் சில நூல்களைத் தாமே ஆக்கி வெளியிட்டுள்ளார். நாவலரின் பதிப்புப்பணி ஒப்பற்றது. தமிழ் உள்ளவரை நினைவு கூரத்தக்கது.

நாவலரைத் தொடர்ந்து பதிப்புத்துறையில் ஈடுபட்டுப் பெரும் புகழ் கொண்டவர் சி.வை. தாமோதரம்பிள்ளை ஆவார். இவரது பதிப்புப் பணியைப் பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை உட்படப் பல பேரறிஞர்கள் பாராட்டியுள்ளனர். தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பிப்பதில் பேரார்வம் கொண்டு செயற்பட்டவர். அவர் பதிப்புத் துறையில் ஈடுபடுவதற்கு வழிகாட்டியாக விளங்கியவர். சி.வை.தாமோதரம் பிள்ளையேயாகும். இவரது பதிப்புத்துறைப் பணி, அவரது ஏனைய துறைகளிலும் மேலோங்கியுள்ளது. எனலாம்.

அச்சுவேலி ச. தம்பிமுத்துப்பிள்ளை (1857-1934), வல்வை ச.வைத்தியலிங்கம் பிள்ளை (1852-1901), காரைநகர் மு.கார்த்திகேய ஐயர் (1819-1898), வித்துவசிரோமணி ந.ச. பொன்னம்பலபிள்ளை (1836-1897), திருகோணமலை வே.அகிலேசபிள்ளை (1853 -1910) ஆகியோர் பதிப்புத்துறையில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

**நாவல்கள்:-**

அனைத்து உலகிலும் இன்று மாபெரும் வளர்ச்சி க்ண்டுள்ள இலக்கிய வடிவங்களில் நாவல் இலக்கியம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் 17,18ஆம் நூற்றாண்டுகளில் வேர்கொண்ட இந்த இலக்கியவடிவம் 19ஆம் நூற்றாண்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்பகுதியில் இந்தியாவில் அறிமுகமானது. மேலைத் தேச இலக்கிய வடிவங்களைக் கற்றோர் சிலர் இந்நவீன இலக்கிய வடிவங்களை ஆக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தமிழகத்திலும் ஈழத்திலும் நாவல் எழுதும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஈழத்தில், இஸ்லாமிய அறிஞரும் சிறந்த சிந்தனையாளரும், "முஸ்லிம்நேசன்" பத்திராதிபருமான சித்திலெவ்வை அவர்கள் 1885இல் அஸன்பேயுடைய சரித்திரம் என்னும் நாவலை எழுதினார். ஈழத்தின் முதல் தமிழ் நாவல் எனக் கருதப்படும் **அசன்பேயுடைய சரித்திரம்** எகிப்து நாட்டைச் சேர்ந்த 'அஸன்' என்பவனது வரலாற்றைக் கூறும் வகையில் அவனது வீர தீர சாகசங்களை விளக்குவதாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து திருகோணமலையைச் சேர்ந்த எஸ்.இன்னாசித் தம்பி என்பவர் **ஊசோன் பாலந்தை கதை** (1891) என்னும் நாவலை வெளியிட்டார். இந்நாவல் ORSON VALANTING என்னும் போர்த்துக்கேய நெடுங்கதையை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டதாகும். இக்கதை கிறித்தவ மதப் பிரசாரச் சூழலின் விளைபொருள் ஆக்கமாகக் கருதப்படுகிறது. தமிழகத்தில் நாயக்கர் மன்னர் ஆட்சிக் காலச் சூழலில் நிலவிய அரசியற் போட்டிகளைப் பகைப்புலமாகக் கொண்டு; காதல், வீரம், சூழ்ச்சி முதலியவற்றை மையமாக வைத்துப் புனையப்பட்ட நாவல் ''மோகனாங்கி'' என்பதாகும். இது 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஈழத்தில் எழுந்த நாவல்களில் குறிப்பிடத்தக்கது.

திருகோணமலையைச் சேர்ந்த த.சரவணமுத்துப்பிள்ளை இதனை ஆக்கியுள்ளார். சிறந்த மரபுவழிப்பட்ட கவிதை இலக்கியம் படைத்த இவர், வரலாற்று நாவல் இலக்கியத்திலும் முத்திரை பொறித்துள்ளார் எனலாம். உண்மை வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட இந்நாவல் யதார்த்தப் பாங்குடன் அமைந்திருப்பது சிறப்புக்குரியது. 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் மேலும் சில நாவல்கள் வெளியாயின. அவற்றுள் வீரசிங்கன் அல்லது சன்மார்க்க ஜயம், இரத்தின சிங்கம், சந்திரகாசன் கதை, அழகவல்லி சுந்தரன் செய்த தந்திரம் என்பன குறிப்பிடத்தக்கனவாகும். இந்நாவல்கள் யாவும் வீர, தீர, சாகசப் பண்புகள் கொண்டவையாகவே விளங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதைகள்:-**

தமிழ்ச்சிறுகதை இலக்கிய வரலாற்றினை எழுதுவோர் வ.வே.சு.ஐயரை மூலவராகக் கொள்ளும் வழக்கம் இருந்துவருகிறது. ஆனால் வ.வே.சு. ஐயருக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே ஈழத்தில் சிறுகதை வேர் கொண்டு விட்டது. ''உதயதாரகை'' பத்திரிகை ஆசிரியராக விளங்கிய தமிழறிஞர் ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை (பாவலர் சரித்திர தீபக ஆசிரியர்) பலசிறுகதைகளை எழுதியுள்ளார்.

இவரது சிறுகதைகள் கொண்ட தொகுதி ஒன்று ''**நன்னெறிக் கதா சங்கிரகம்**'' என்னும் பெயரில் வெளிவந்துள்ளது. எனினும் இத்தொகுதி இன்று கிடைக்கப்பெறுவதாயில்லை. இது குறித்து ஈழத்துப் பிரபல நாவலாசிரியர் கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமையும் மனங்கொள்ளத்தக்கது.

''நாவலரின் சம காலத்தவரான ஆர்ணல்ட் சதாசிவம் பிள்ளை பல சிறுகதைகளை எழுதியுள்ளதாக அறியப்படுகின்றது. அவரது கதைகளடங்கிய தொகுதியொன்று ''நன்னெறிக் கதாசங்கிரகம்'' என்ற பெயரில் வெளிவந்துள்ளது. ஈழத்து எழுத்தாளரான சோ.சிவபாதசுந்தரம். தமிழக எழுத்தாளரான சிட்டி ஆகியோர் இணைந்து எழுதிவெளியிட்டிருக்கும் ''தமிழ்ச்சிறுகதைகள்'' என்ற ஆய்வு நூலில் வ.வே.சு.ஐயர், சுப்பிரமணிய பாரதியார், மாதவையர் ஆகிய மூவரையும் சிறுகதை மூலவராகக் கொள்கின்ற மரபினை மாற்றியமைத்து, தமிழ் கூறும் நல்லுலகில் ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளையே சிறுகதையின் முன்னோடியென நிறுவமுயன்றுள்ளனர். எனவே தமிழ்ச் சிறுகதையின் காலவளவை வைத்துப் பார்த்தால், தமிழ்ச் சிறுகதையின் பிதாமகர் என அவரைக் கொள்ளல் சாத்தியமோவென்பது மீள ஆய்வுக்குட்பட வேண்டியது அவசியமாகின்றது.[11]''

ஈழத்து சிறுகதை வரலாற்றில் சதாசிவம்பிள்ளையின் கதைத் தொகுதியைத் தொடர்ந்து மேலும் சில கதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளதாகத் தெரியவருகின்றது. பண்டிதர் சந்தியாகோ சந்திரவர்ணம் பிள்ளை என்பவர் 1875இல் ''கதாசிந்தாமணி'' என்னும் கதைத்தொகுதியை வெளியிட்டுள்ளார். இதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழுசிறுகதைகள் அடங்கி இருந்தன. தம்பி முத்துப்பிள்ளை என்பவர் 101 சிறுகதைகள் கொண்ட கதைத் தொகுதியொன்றினை "ஊர்ச் சிறுகதைகள்" என்னும் பெயரிலும் ஐதுருஸ் லெப்பை மரைக்கார் என்பவர் "ஹைதர்சா சரித்திரம்" என்னும் கதைத் தொகுதி ஒன்றையும் வெளியிட்டுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

இவர்களது கதைகள் யாவும் சிறுகதையின் தன்மையைக் கொண்டனவாகவே விளங்கின எனலாம். இருபதாம் நூற்றாண்டில் ஈழத்தில் சிறுகதைத்துறை வளர்ச்சி பெறுதற்கு 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலேயே கால்கோள் இடப்பட்டுவிட்ட தென்பதையும் சிறுகதை இலக்கிய முன்னோடிகளாக ஈழத்தவர்களே திகழ்ந்துள்ளனர் என்பதையும் இதன்மூலம் நன்குணர முடிகிறது.

**வரலாற்றாய்வு தொடர்பானவை:-**

19ஆம் நூற்றாண்டில் இலக்கிய இலக்கண பண்பாட்டுத் துறைகளை ஆய்வு நோக்கில் அணுகி அவை சம்பந்தமான கருத்துக்களை வெளியிடும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அமெரிக்க மிஷனரிகள் சிலர் இவ்வாய்வு முயற்சிகளிலே ஆர்வம் காட்டினர். நூல்களைப் பட்டியற் படுத்துதல், நூலாசிரியர்களை அகரவரிசைப்படி ஒழுங்குபடுத்தி அவர்களது வாழ்க்கைக் குறிப்புக்களைத் தயாரித்தல், பழமொழிகள், மரபுத்தொடர்கள் முதலானவற்றைத் தொகுத்தல் ஆதியாம் பணிகளில் இக்காலப்பகுதியில் மிஷனரிகள் பெரிதும் ஈடுபட்டனர்.

தமிழிலக்கியத்தை அறிந்து கொள்ள விரும்பும் ஆங்கிலம் கற்றோருக்கும் பேசுவோர்க்கும் அதனை அறிமுகப் படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இம்முயற்சி குறித்துப் பேராசிரியர் பொ.பூலோகசிங்கம் பின்வருமாறு கூறுகின்றார்.

"அந்நிய மொழியைக் கற்று, அதன் இலக்கியப் பரப்பைக் கண்டவர்கள் அதன் துறைகளுள்ளே தமிழ்மொழியில் இல்லாதனவற்றைத் தமிழ் மொழிக்கு அளிக்க வேண்டும் என்ற அவாவினால் அல்லது தமிழர் தம் பாரம்பரியத்தையும் அவர் தம் இலக்கியத்தையும் தாம் நலிந்து நின்ற சமயத்திலும் அந்நியருக்கு காட்ட வேண்டும் என்ற ஆசையினால் இம் முயற்சிகளில் ஈடுபட்டனர். இம் முயற்சிகளில் ஒன்றே தமிழ் இலக்கிய வரலாறு என்னும் துறையைத் தோற்றுவித்தது எனலாம்.[12]"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கிய வரலாற்றுத்துறை இன்று பெரிதும் வளர்ச்சி பெற்றுள்ளது. இத்துறை சார்ந்த நூல்கள் பல வெளிவந்த வண்ணமுள்ளன. ஆனால் 19ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் தமிழிலக்கிய வரலாற்று நூல்களின் முன்னோடியாக விளங்குவது சைமன் காசிச் செட்டி (1807-1860) எழுதிய ''தமிழ் புளூராக்'' (TAMIL PLUTARCH) என்னும் ஆங்கில நூலேயாகும். தமிழ்ப் புலவர்களின் சரிதங்களை ஒரே நூலாகக் கூற எழுந்த முதல் நூல் இதுவேயாகும்.

காசிச் செட்டியவர்களைத் தொடர்ந்து ஆர்ணல்ட் சதாசிவம் பிள்ளை "பாவலர் சரித்திர தீபகம்" என்னும் நூலை 1886ஆம் ஆண்டிலே வெளியிட்டார். பாவலர் சரித்திர தீபகம் தமிழ் நெடுங்கணக்கின்படி புலவர்களை வரிசைப்படுத்திக் கூறுகிறது. இவ்விருநூல்களும் வரலாற்றாய்வாளர்களுக்கு ஓரளவு வழிகாட்டுவதாக அமைந்துள்ளன. திரு.வி.கனகசபைப்பிள்ளை எழுதிய '1800 வருடங்களுக்கு முற்பட்ட தமிழர்' என்ற ஆங்கில நூலும் மூவேந்தர் காலத் தொகை நூலாகிய பத்துப்பாட்டை ஆங்கிலமொழியிற் கவிதை வடிவில் யாத்த ஜே.வி. செல்லையாவினது புலமைத்திறனும் வரலாற்றாய்வாளர்களால் என்றும் மறக்கமுடியாதனவாகும். இருபதாம் நூற்றாண்டில் வரலாற்றாய்வு தொடர்பான நூல்கள் பல வெளிவருதற்கும் தமிழிலக்கிய ஆய்வுத்துறை வளம் பெறுதற்கும் 19ஆம் நூற்றாண்டு பலவழிகளிலும் உதவியுள்ளது என்றால் அது மிகையல்ல.

## கண்டனங்கள்:-

19ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் சமயத்தின் தாக்கம் இலக்கியத்தில் முன்னைய காலப்பிரிவிலும் அதிகமாகப் படிந்திருந்தது. கிறித்தவர்கள் இக்காலப்பகுதியில் ஈழத்தின் பழைய சமயங்களை வன்மையாகக் கண்டிக்க முற்பட்டனர். குறிப்பாகச் சைவசமயத்திற்கு எதிராகத் தங்கள் பிரசாரங்களை முன்னெடுத்தனர். அவர்களின் எதிர்ப்பு முயற்சிகளை முறியடித்துச் சைவத்தைப் பேணிக்காக்கும் பணிகளில் நாவலர், சங்கரபண்டிதர், சபாபதி நாவலர், காசிவாசி செந்திநாதையர் முதலானோர் தீவிரமாக ஈடுபட்டனர். கண்டன நூல்களும், பிரசுரங்களும் கணக்கற்று வெளியாயின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறித்தவர்கள் 'குருட்டுவழி' முதலிய நூல்களை வெளியிட்டனர். சைவர்கள் புயலெனக் கிளம்பி ஞானக்கும்மி, யேசு மத பரிகாரம், சைவதூஷண பரிகாரம், சுப்பிரபோதம், விவிலிய குற்சிதம், சைவ மகத்துவம்,சைவ மகத்துவதிக்கார மகத்துவம், சைவ மகத்துவ பானு, சைவ மகத்துவதிக்காரநிக்கிரகம், கிறித்தவ மத கண்டனம், யேசு மத சங்கற்ப நிராகரணம் முதலான நூல்களை வெளியிட்டனர். இந்நூல்கள் யாவும் கிறித்தவர்களையும் அவர்களது சமயக் கொள்கைகளையும் மறுத்துரைத்த கண்டன நூல்களாகும்.

கிறித்தவர்களும் தங்கள் கண்டன நூல்களை வெளியிட்டனர். சைவமகத்துவ திமிரபானு, சைவ மகத்துவதிக்கார நிக்கிரக எதிரேற்று முதலியன அவற்றுட் சிலவாகும். இக்கண்டன நூல்கள் கிறித்தவர் தம் புலமையாற்றலை - கண்டன ஆற்றலைப் புலப்படுத்துவனவாக விளங்கின. சமயக்கண்டன நூல்கள் மட்டுமன்றி இலக்கியக் கண்டனங்களும் இக்காலப்பகுதியில் எழுந்துள்ளன.

உ.வே.சாமிநாதையரின் சீவக சிந்தாமணிப் பதிப்பிற் காணப்பட்ட பிழைகளைச் சுட்டிக்காட்டிச் சுன்னாகம் முருகேச பண்டிதர், அ. குமாரசுவாமிப்புலவர் முதலியோர் கண்டனம் செய்தனர். சபாபதி நாவரின் திராவிடப் பிரகாசிகை அ.குமாரசுவாமிப் புலவரால் கண்டிக்கப்பட்டது. சி.வை.தாமோதரம்பிள்ளையின் இலக்கண விளக்கப் பதிப்புரையும் கண்டனத்துக்குள்ளானது. சபாபதி நாவலர் இக்கண்டனத்தை வெளியிட்டார்.

சுருங்கக் கூறின் 19ஆம் நூற்றாண்டில் எழுந்த கண்டனங்கள் யாவும் தருக்க ரீதியானவையாகவும் புலமைத்திறனை வெளிப்படுத்துவனவாகவும் விளங்கின எனலாம். தமிழ் உரைநடை வளம் பெறவும் இவை உதவின.

### உரை நூல்கள்:-

19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களும் அறிஞர்களும் தமது புலமையைப் புலப்படுத்தப் புதிய பல இலக்கிய வடிவங்களை அளித்ததோடு முன்னோர் செய்த செய்யுள் நூல்கள் பலவற்றுக்குப் புத்துரை கண்டுள்ளனர். ஆறுமுக நாவலர், ஞானப்பிரகாச முனிவர், கோ.ச. பொன்னம்பலபிள்ளை, காரைநகர் அருணாசல உபாத்தியாயர், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர், வல்வை வைத்திலிங்கம் பிள்ளை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பிரகாச பண்டிதர், சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை, பொ.வைத்திலிங்கதேசிகர் ஆகியோர் உரையாசிரியர்களுள் குறிப்பிடத்தக்கோராவர்.

பழந்தமிழ் நூல்களுக்கு உரைகாணும் மரபுக்கு உந்துதல் அளித்த பெருமையும் ஆறுமுகநாவலரையே சாரும். 1851ஆம் ஆண்டு, தமது இருபத்தொன்பதாவது வயதிலே நாவலர் திருமுருகாற்றுப் படைக்கு உரை எழுதினார். அவ்வுரை பல பதிப்புக்களைக் கண்டுள்ளது. நாவலரது உரை பதம் பிரித்துப் பொருள் கூறுதல், சொற்பொருள் தருதல், இலக்கணக் குறிப்புக்கள் குறித்தல், சமய தத்துவக் கருத்துரைத்தல், மேற்கோள் காட்டுதல் போன்ற பல சிறப்பம்சங்கள் கொண்டதாக அமைந்திருந்தது.

பழைய உரையாசிரியர்கள் கையாண்ட மரபை அடியொற்றியே நாவலர் உரை எழுதியுள்ளாரெனினும் தமக்கேயுரிய சிறப்பியல்புகள் சிலவற்றையும் புகுத்தியுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

நாவலர் காட்டிய இந்த உரை மரபினைப் பின்பற்றிப் பிற்காலத்தில் பல உரையாசிரியர்கள் தோன்றியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இருபதாம் நூற்றாண்டில் பல உரைநூல்கள் வெளிவருதற்கு நாவலரது வழிகாட்டுதலே கால்கோளாய் அமைந்திருந்தது எனலாம்.

### (இ) 19ஆம் நூற்றாண்டு இலக்கியப் பண்புகள்:-

பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க பல பண்புகளைக் கொண்டதாக விளங்கியது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலப்பகுதியில் அரும்பிய இலக்கிய வடிவங்கள் மலர்ச்சி பெற்ற காலமாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டு விளங்குகிறது. புதிய பல பாவகைகளும், இலக்கிய வடிவங்களும் பூத்துக்குலுங்கிய காலப்பகுதியாக இதனைக் கொள்ளலாம்.

பிள்ளைத்தமிழ், தூது, உலா, கோவை, கலம்பகம், மடல், குறவஞ்சி, அந்தாதி, இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணி மாலை, சதகம், அம்மானை, பதிகம், ஊஞ்சல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகழ் ஆதியாம் மரபு ரீதியான இலக்கிய வடிவங்கள் தோற்றம்பெற்றன. நாவல், சிறுகதை முதலிய நவீன இலக்கிய வடிவங்களிலும் மொழிபெயர்ப்பு, அகராதி போன்ற புதிய பாதைகளிலும் ஈழத்தவர்கள் கால் பதித்த காலப்பகுதியும் இதுவாகும்.

சைவர்கள், கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள் பலர் கீர்த்தனங்கள், பதங்கள் முதலியவற்றைப் பாடி இசைத் தமிழை வளர்த்தனர். வண்ணார்பண்ணை சி.விநாயக மூர்த்திச் செட்டியார் பாடிய கதிரை யாத்திரைவிளக்கம் நொண்டிச் சிந்தாற் பாடப்பட்ட சிறந்த நூலாகக் கருதப்படுகிறது. அதேபோன்று அசனாலெப்பைப் புலவரின் நவரத்தினத் திருப்புகழ், அப்துல் காதிறுப்புலவர் இயற்றிய சந்தத் திருப்புகழ் என்பனவும் வண்ணப் பாக்களாகும்.

இக்காலப்பகுதியில் ஈழத்தில் நாடகங்கள் சிறப்பிடம் பெற்றுள்ளன. ஆறுமுக நாவலரின் தந்தையாரான கந்தப்பிள்ளை 21 நாடகங்களை எழுதியுள்ளார். இவை இக்காலப் பகுதியில் நாடகக் கலை வளம் பெறத் தொடங்கியமையைச் சுட்டுவனவாக அமைகின்றன. முன்னர் எக்காலத்திலும் இல்லாதவகையில் சமயக்கருத்துக்களை விளக்கும் நூல்களும் தலசம்பந்தமான நூல்களும் பெருமளவில் வெளிவந்தன. தலபுராணங்கள், விரத மகிமைகள் மக்கள் மத்தியில் சமய உணர்வினையூட்டின. கண்டன நூல்கள் பெருக்கமடைந்ததும் இக்காலப் பகுதியிலேயாகும். இக்காலப் பகுதியின் இலக்கியப் பண்பாகச் சமயப்பொருளே முக்கியத்துவம் பெற்றது. எனினும் இக்காலப்பகுதியின் இறுதியில் உலகியல் சம்பந்தமான இலக்கிய நூல்களும் தோன்றின.

அருளம்பலக்கோவை, அழகர்சாமிமடல் போன்றவை பாடியோரின் வித்துவச் சிறப்பை உணர்த்துவனவாயுள்ளன. சுன்னாகம் முத்துக்குமார கவிராசர், மாவிட்டபுரம், பூ.பொன்னம்பலபிள்ளை, வறுத்தலைவிளான் க.மயில்வாகனப் புலவர், சுன்னாகம் பூ. முருகேச பண்டிதர் முதலியோர் பாடிய பாடல்கள் மிக அற்புதமானவை. அவை ஈழத்துப் புலவர்கள் கையாண்ட சொல்லலங்காரம், பொருளலங்காரம், சிலேடை ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டுவனவாகவுள்ளன. இலக்கியங்கள் மட்டுமன்றி இலக்கண நூல்கள் பலவும் இக்காலப் பகுதியில் வெளிவந்துள்ளன. பத்திரிகைகள், அகராதிகள், மொழிபெயர்ப்பு நூல்கள் யாவும் தோற்றம் பெற்றமையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலப்பகுதியே யாகும். தமிழிலக்கிய வரலாற்றுச் சிந்தனை முகிழ்த்த காலமும் இதுவே. நவீன இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை போன்றவை ஈழத்தில் தோற்றம் பெற்றமையும் 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியே யாகும். இக்காலப் பகுதியின் இலக்கியப் பண்புகளில் குறிப்பிடத்தக்கதாயுள்ளது தூய தமிழ்நடை சிறப்புப் பெற்றிருந்தமையே எனலாம். தமிழ்ப் புலமை வாய்ந்த புலவர்கள் பலர் இனிய தமிழ்ச் செய்யுள்களைப் பாடியதோடு வழிவழி வந்த தமிழ்ப் புலமை மரபையும் பேணிக்காத்த காலப்பகுதி இதுவாகும். வரலாறு உரைநடை, நாவல், சிறுகதை, அறிவியல், மொழிபெயர்ப்பு, அகராதி ஆக்கம் ஆதியாம் துறைகளில் ஈழத்தவர் நவீன பாதையிற் சென்றிட வழிவகுத்த காலப்பகுதியும் இதுவே. இதனைப் பேராசிரியர் க.கைலாசபதியின் பின்வரும் கூற்று நன்கு உறுதி செய்கிறது.

"பத்தொன்பதாம் நூற்றாண்டிலே பகுத்தறிவு, வரலாற்றுணர்வு, ஆங்கில அறிவு, சமூக நோக்கு முதலிய பண்புகளைத் தழுவி நின்று இலக்கணம், இலக்கியம், வரலாறு அறிவியல் ஆகிய துறைகளில் உழைத்த இலங்கையர்களே பிற்காலத்தவர் நினைவு கூரத்தக்க ஆக்கங்களைச் செய்தனர் என்பது உறுதிப் படுகின்றது.[13]"

## (ஈ) முடிவுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டு ஏனைய காலப்பகுதிகளிலும் பார்க்கத் தனித்துவமானதென்பதும், தனித்து நோக்குதற்குரிய தென்பதும் இதன் மூலம் நன்கு புலனாகும். 19ஆம் நூற்றாண்டு இலக்கிய வளர்ச்சியை ஆராயப் புகுவோர், பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் இக்காலப் பகுதி குறித்துக் கூறியுள்ள பின்வரும் அம்சங்களைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

1. நாவலர் தொடக்கி வைத்த சைவத்தமிழ் இலக்கிய மரபின் வளர்ச்சி.
2. கத்தோலிக்க இலக்கிய மரபில் காணப்படும் எழுச்சி.
3. இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வளர்ச்சி
4. மலையகத்தின் இலக்கியத் தோற்றம்
5. நவீனத்தின் ஊற்றுக் கால்கள்.[14].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வம்சங்களை மையமாகக் கொண்டே 19ஆம் நூற்றாண்டின் ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சிப் போக்கினை ஆராயலாம். சுருங்கக் கூறின் தமிழ்மொழி, சமயம், பண்பாடு, இலக்கியம் முதலியனவற்றிலே புதியதோர் விழிப்புணர்வை ஏற்படுத்திய காலப்பகுதியாக மட்டுமன்றி நவீன இலக்கியங்கள் முகிழ்த்திடக் கால் கோளிடப்பட்ட காலப்பகுதியாகவும் 19ஆம் நூற்றாண்டு தனித்துவம்பெற்று விளங்கியது எனலாம்.

## அடிக்குறிப்புக்கள்:-


1. பூலோகசிங்கம்.பொ. - நான்காவது அனைத்துலகத்தமிழாராய்ச்சி மாநாடு,நினைவுமலர்.''பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் வளர்ச்சி" இலங்கை, 1974.

2. INDRABALA.K. - THE AMERICAN CONTRIBUTION TO THE MODERNISATION OF TAMIL STUDIES. "THE WORK OF DANIEL POOR AND HIS COLLEAGUS" - JAFFNA COLLEGE MISCELLANY, CENTENARY PUBLICATION, 1981-P.95

3. கைலாசபதி.க. - ஈழத்து இலக்கிய முன்னோடிகள், மக்கள் வெளியீடு, சென்னை, 1986. பக்கம் 20

4. கணபதிப்பிள்ளை.சி. - இலக்கியவழி, பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபை, உரும்பிராய், 1993. இருவர் கவிராயர், ப.77

5. சிவலிங்கராசா.சி. - ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி, தனலக்குமி புத்தகசாலை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், 2001. பக்கம் -137.

6. அருள் நந்தி.க..ச. - கனகிபுராணம், மு.இராமலிங்கம் பதிப்பு, 1949. முன்னுரை ப.ii


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. சதாசிவம்பிள்ளை, ஆர்னல்ட் - பாவலர் சரித்திர தீபகம், பாகம் -1, கொழும்புத் தமிழ்ச்சங்கம், 1975. ப.176,177.

8. துரை மனோகரன். - இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி. கலைவாணி புத்தகநிலையம், கண்டி, 1997 ப.83

9. SARACHANDRA.E - THE FOLK DRAMA IN CEYLON, CEYLON, 1953.

10. ஜெபநேசன், எஸ்.வண - நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு, நினைவுமலர், 1974. 'ஈழநாட்டில் எழுந்த தமிழ் அகராதிகள், ப.194.

11. குணராசா.க. - ஈழத்துச் சிறுகதை வரலாறு, வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம், 2001. ப.29.

12. பூலோகசிங்கம்.பொ. - தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெரு முயற்சிகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு. மீள்பதிப்பு, 2002, ப.3

13. கைலாசபதி.க. - மு.கு.நூல் ப-15

14. சிவதம்பி. கா. - புறநானூறு முதல் புதுக்கவிதை வரை, தமிழ் நூல் வெளியீட்டு விநியோக அமையம், கொழும்பு, ப.29,30.

20ஆம் நூற்றாண்டு முதல் இன்றுவரையான ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றினை இந்நூலின் இரண்டாம் பாகத்திற் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந் நூலாசிரியரின் ஏனைய நூல்கள் சில...















pbd
204001248
EELTAILAK VARAL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN : 955-98551-4-X